தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

● புரட்டாசி - 2025

கலை இலக்கிய இதழ்



# காற்றுவெளி
**கலை இலக்கிய இதழ்**

புரட்டாசி - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

நன்றி: கனிவுமதி

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

*யாவரும் நலமா?*

*காற்றுவெளி புரட்டாதி இதழ் தங்கள் பார்வைக்கு வருகிறது.*

*படைப்புக்கள் தந்துவும் படைப்பாளர்களுக்கு எமது நன்றி.*

*அச்சிதழ் பற்றி பலரும் கேட்கிறார்கள்.ஆனால் சந்தா அல்லது அச்சிதழுக்கான தனிப்பிரதி சொன்னால் மௌனமாகிவிடுகிறார்கள்.இலக்கிய இதழுக்கு விளம்பரங்களால் நிரப்பிவிட மனதில்லை.ஒவ்வொரு இதழும் தனித்த நபரின் உழைப்பினாலேயே வருகிறது.*

*விரைவில் இங்கிலாந்து வாழ் படைப்பாளர்களின் சிறுகதைகள் உள்ளடங்கிய சிறப்பிதழ் ஒன்றும் வரவுள்ளது.*

*ஈழத்து நூல்களின் கண்காட்சியினை மீளவும் நடத்தவேண்டும் எனும் கோரிக்கைகள் எழாமல் இல்லை. முயற்சிக்கிறோம்.*

*இன்னமும் யுத்த அச்சுறுத்தல் ஓயவில்லை.*

*சமாதானம்,பேச்சுவார்த்தை என் ஒருபக்கம் நடைபெற்றாலும்,யுத்தம் தொடரும் என்பதையே காணக்கிடைக்கிறது. அப்பாவி மக்களின்,குழந்தைகளின் மரணம் ஊடகங்களில் கண்டு மனது வலிக்கிறது.*

*பிரார்த்தனையுடனும்,நம்பிக்கையுடனும் பயணிப்போம்.*

*நட்புடன்,*

**சோபா**

*01/09/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்**


1. இனியவன்காளிதாஸ்
2. மலர்மகள்
3. க. புனிதன்
4. டீன் கபூர்
5. அ.சீனிவாசன்
6. சேஹு மொஹம்மது பெனாஸிரா
7. மாரி மகேந்திரன்
8. நேசமிகு ராஜகுமாரன்
9. DR.ஜலீலா முஸம்மில்
10. ச. சத்தியபானு
11. இரா.சண்முகப்பிரியா
12. இரா.வெங்கடேஸ் குமார்
13. மதுரகவி-வண்டியூர்
14. மெய்யன் நடராஜ்
15. யுகசேனன்
16. தமிழ்க்கீரன்(ஈழநாடு)
17. ஜமீல்
18. A.S.சுந்தரராஜன்
19. மின்ஹா

**சிறுகதைகள்**

1. அ.செ.முருகானந்தன் (இலங்கை)
2. எஃப்.எம்.பொனவெஞ்சர்
3. கவிஜி
4. நௌஷாத் கான்.லி
5. திக்வெல்லை கமால்(இலங்கை)
6. சுந்தரிமணியன், புதூர்
7. பாலமுருகன்.லோ
8. ஈ.அங்குலட்சுமி
9. சிவசங்கரிகுருநாதன்
10. திருமலை சுந்தா(குறுங்கதைகள்)

**கட்டுரைகள்**

1. திரு.சமயக்கண்ணு, மதுரை
2. லி.நௌஷாத் கான்



# தளரா வளர் தெங்கு

அ.செ.முருகானந்தன் (இலங்கை)

**கொ**ழும்பிலிருந்து காலிவரை பெரும் பகுதியும் கடற்கரை ஓரமாகவே நீண்டு கிடக்கும் காலி வீதியில் வெள்ளவத்தை நகர எல்லைக்குள்ளாக காலி வீதியையும் கடற்கரை ரயில் பாதையையும் இணைக்கும் ஒரு குறுக்கு "லேன்" (சிற்றொழுங்கை) முகப்பில் இருப்புப் பாதை கடந்து அதற்கு அப்பால் நீண்டு கிடக்கும் கடற்கரையில் அலைகள் மோதும் கருங்கல் வரிசைக்குள் சிக்குண்டு நின்றது ஒரு தென்னை மரம்.

அதற்கு இரு பக்கமும் நெடுந்தூரம் கடலோரமாகவே நூறு ஆயிரமாக வரிசைப்பட நிற்கும் இன்னும் எத்தனையோ தென்னைகள். இருந்தாலும் இந்த ஒரு தெங்கு மட்டும் என் கவனத்தைக் கவர்ந்த காரணம், அது மனித நடமாட்டம் அதிகமாயுள்ள ஒரு சந்திக்கு அண்மித்தாற்போல நின்றதுதான்.

நெடுநெடென வளர்ந்து முன்வளைந்து கடலுக்கப்பால் கழுத்தை நீட்டி எட்டிப் பார்ப்பதுபோல் முடத்தெங்காக காற்றில் அசைந்தாடி நின்றது அத்தென்னை. அதன் கீழ் சமுத்திரம் அலையடித்து நிலமரித்துப் போகாதபடி கடற்கரை நெடுகிலும் நிரையாக அடுக்கி வைத்திருந்த இரு பெரும் பாறைக்கல், இரண்டு பேருக்கு மேலும் அதன் மீதமர்ந்து தென்னையின் அடி மரத்தில் சாய்ந்தபடியும் பிறர் பார்வையைக் கவராதபடியும் நிம்மதியாக காற்று வாங்க, கலந்துரையாட வாய்ப்பானதொரு சுகாசனமாய் இணைந்திருந்தன.

இது பற்றி, அந்த இடத்தை மனத்தே எண்ணி இலக்கிட்டோராய் பலர் மாலை வேளையில் அத்தென்னையை நாடி நடந்தும் வருவார்கள், ஓடியும் வருவார்கள், நடந்தோடியும் வருவார்கள். முன்னிடம் பிடிப்பதற்காக அவ்விதமாய் அங்கு விரைவோரில் காதல் சிட்டுகளே என்றைக்கும் முன் நிற்பார்கள் என சொல்ல வேண்டியதில்லை.

“அந்த முடத்தெங்கிற்கு மட்டும் வாயிருந்தால் எத்தனை சுவையான காதல் கதைகளை அதனிடம் கேட்டறியலாம். தன் ஆயுளில் இந் நாள் மட்டில் எத்தனை பேரின் மகிழ்ச்சி, துயரம், கண்ணீ ர், ஏக்கம் இதயதாபங்களில் அது பங்கு கொண்டிருந்திருக்கும் என்று இவ்வாறு அதைப் பார்த்த போதெல்லாம் நான் எண்ணுவதுண்டு.

அதனைப் பார்த்து இவ்விதமாக நான் எண்ணமிட்டு வந்த போது அத்தென்னையானது தாளுண்ட உப்பு நீரைத் தலையாலே அமுத கலசமாக வடித்துத் தருவது போல ஒரு நாள் மெய்யாகவே என்னுடனே பேசலாயிற்று.

“என்ன ஒய் கதை அளக்கிறீர் தென்னை மரமாவது பேசுவதாவது? உதெல்லாம் சுத்தப் பொய் முழுப் புருடா, நம்பவே முடியாது. உன் தலையிலே தென்னை மரம் ஒருவேளை தேங்காயைப் போட்டு உடைத்திருக்கும்” என்கிறீரா வாசகரே?

ஐயா வாசக நேயரே! கேட்கிறவன் கேட்டால் தென்னை மரமென்ன, உலகத்திலே உள்ள எல்லா மரங்களும், மட்டைகளும் பேசும்; கதை சொல்லும், நம்முடனே சிரித்துக் கொண்டே கலந்துரையாடும். ஆனால் அவற்றிடம் கதை பிடுங்கும் வாய்ச் சாதுரியம் நம்மிடமும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அது பேசும். ஆடிக்கறக்கிற மாட்டை ஆடிக்கறக்க வேணும். பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேணும். பழமொழி கேள்விப்பட்டதில்லையா?

கவி தாகூருக்குப் படித்துறையும், மகரிஷி வ.வெ.சு. ஐயருக்கு குளத்தங்கரை அரச மரமும், புதுமைப்பித்தனுக்கு ஆஸ்பத்திரிக் கட்டிலும், பழைய நாள் விக்கிரமாதித்த ராசாவின் சிம்மாசனம் ஏறப் போன போசராசனுக்கு முப்பத்திரண்டு கெட்டிக்காரப் பதுமைகளும் சிந்தை குளிர செவி உவப்ப, சிரிப்பும் கண்ணீருமாக சிங்காரக் கதை கட்டிச் சொல்லியிருக்கையில், இந்தக் கடற்கரை முடத்தெங்கு மட்டும் பேசாதா, பறையறையாதா? கதை சொல்லக்கூடாதா? தென்னையின் நீட்டோலை வாசிக்க மாட்டாதவர்கள் ஔவைப் பாட்டி கூறிய பிரகாரம் முருக்க மரங்களேதாம் காண்மின் நேயரே!

குருத்தோலை பார்த்துக் கலகல என்று நகைக்க, தென்னை மரத்தின் முற்றிப் பழுத்த காவோலைகள் பருவந்தோறும் ஒவ்வொன்றாய் உதிர்கின்றன. ஒவ்வொரு பழுத்த காவோலையினது வாழ்வும் முடிவுமே தென்னையின் வளர்ச்சியாகிறது. இந்த வரலாறும், வாழ்வின் கதையும் கல்மேல் எழுத்துபோல் அழுத்தமான வரைகளாக அடி மரத்திலிருந்து நுனிமரம் வரை ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கடுக்காய் தென்னையில் பதிவாகிப் போயிருக்கின்றன.

புதுமை என்பதே பழமையில் வேர்விடுவது. வளர்ச்சி என்பது படிப்படியாக நீண்ட காலத்தை அளாவி நிற்பது. முடிவில் தொடங்கிய இடத்துக்கே திரும்புவது என்ற இயற்கைப் பரிணாம தத்துவத்தைக் கூடத்தான் தென்னை மரம் நமக்கு எடுத்துக்காட்டி அறிவுறுத்திக் கொண்டு நிற்கிறது. அது பேசமட்டும் ஆரம்பித்தால் தன் மீதுள்ள ஒவ்வொரு வரிவடிவத்துக்கும் ஒவ்வோர் இரண்டு அங்குல வளர்ச்சிக்கும் ஒரு கதையாக நீட்டோலை வாசிக்குமே.

குதிரை கொண்டு ஏறித் திரியுமோர் இளங்காற்று, சின்னஞ்சிறு குழந்தை தன் மலர்க் கரத்தினால் தாயின் முகத்தில் இன்பமாக அறைவதுபோல தென்னையின் கீற்றை அசைத்துச் சலசலக்கச் செய்தது.

கடற்கரைக்குக் காற்று வாங்க வந்திருந்த எவளோ ஒரு பூங்கொடியாளின் பூந்துகிலையும் காற்று அவ்விதமாகச் சுழற்றியடித்த போது வெண்மணலில் கால் பதிந்து நின்றவள் “தடா” ரெனக் கீழே உட்கார்ந்து விட்டாள். அது சமயமாக அவ்வழியே நடைபோட்டு வந்த வாலிபர் குழாம் ஒன்றும் அங்கு அவளிருந்த பக்கமாய் மெல்ல அமர்ந்தது.

கடலில் கண்ணுக் கெட்டிய தூரத்தே ஒரு கப்பல் புகை கக்கியவாறு துறைமுகத்தில் சில தினங்கள் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு புத்தெழுச்சி பெற்ற விசையுடனே போய்க் கொண்டிருந்தது.

“தம்பி, உனக்குக் கல்யாணமாகி விட்டதா?” – என்றிவ்வாறு ஒரு வினாவுடனே தென்னைமரம் என்னிடம் பேசலாயிற்று.

“உனக்கேன் அந்தக் கவலை நெடுமாமே? கதை எழுதுகிறவன், கதைகளிலே காதலையும் கல்யாணத்தையும் கொட்டி அளப்பவன் தன் சொந்த வாழ்க்கையிலும் அதைப் பற்றி எல்லாமா சிந்தித்துக் கொண்டிருப்பான்?” நான் சொன்னேன்.

“ஓகோ! நீயும் அப்போ என்னைப் போல “ஒற்றை” என்று சொல்லு. இந்தக் காலத்துப்பிள்ளைகள் கல்யாணப் பேச்செடுத்தாலே இப்படித் தான் வீட்டு மாச்சாரிகளைப் போலத் துள்ளிக்குதிக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை. உன் கல்யாணத்தில் எனக்கென்ன அக்கறை அப்பனே! ஆனால் நான் சொல்லப் போவது காதல் கதையானபடியால் உன் நிலையை அறிய விரும்பினேன் – தென்னைமரம் சொல்லிற்று. சொல்லிவிட்டு அது என்னைக் கூர்ந்து கவனித்த போது,

“காதல் கதையா சொல்லப் போகிறாய்? ஷோக்குத்தான் அது எனக்கு நிரம்பப் பிடிக்குமே” என்றதற்கு,

“எது பிடிக்கும்?” காதலா காதல் கதையா? என்று வெடுக்கென்று கேட்டது.

“கதை – காதல், கதை பிடிக்கும் என்றுதான் சொன்னேன் தென்னை யாரே? எனக்கு மட்டுமென்ன காதல் கதை என்றால் என் வயசுக் கிளைய சின்னஞ் சிறிசுகளும் எனக்கு மூத்தோராய் கல்யாணம் செய்து கொண்டு பிள்ளைகள் பெற்ற பெரியவர்களும் அதற்கு மேல் பேரப்பிள்ளைகளும் பூட்டப்பிள்ளைகளும் கண்டு முதிர்ந்து பழுத்த கிழவனும் கிழவியும் கூட, நான் நீ என்று முந்திக் கொண்டு வருவார்கள். அது மென்னியைப் பிடிக்கும் கழுத்தை நெரிக்கும் என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமலே காதலை விரும்பி அதன் பின்னே ஓடுவோர் பருவக் கன்றுகளான காளையரும் கன்னியருமே... ஏன், கதையைத் தொடங்கேன் வளர்தெங்கே” என்று கூறி தென்னையாரை முடுக்கினேன்.

“காதல் கதை என்றதும் ஆளின் மூஞ்சியும் முகரக்கட்டையும் எப்படி ஆகிவிடுகிறது பாரேன்” என்று குறு நகை அரும்ப மெல்ல முணுமுணுத்துக் கொண்டே முடத்தெங்கு கதையைச் சொல்லலுற்றது:

“அதோ பார்த்தாயா, கடலிலே ஒரு கப்பல் துறைமுகத்திலிருந்து கிளம்பிப் போய்க் கொண்டிருக்கிறது. பல வருடங்களுக்கு முன்பு அன்றொரு நாளும் இப்படித் தான் ஒரு கப்பல், துறைமுகம் விட்டுப் போய்க் கொண்டிருந்தது. இதே நேரம் தான் இருக்கும். நான் சொல்லப் போகும் கதை துயரமாக முடிந்த வேளையும் இதே மாதிரியானதொரு அந்தி நேரம், செக்கர்வானம் மைமல் கருக்கு கருங்கடல் பறவைகள் நீர்ப்பரப்பிலிருந்து நிலம் நோக்கி திரும்பிக் கொண்டிருந்தன. வானம் ஒளி இழந்து கிடந்தது. எங்கும் இருள் கவிந்து ஒரு பகலின் கதை சோக கீதமாக முடிவது போலத்தான் என் கதையும் செக்கர்வானம், இருள், அந்தகாரம் என இந்த சமுத்திரப் பெரும் பரப்பில் எழும் அலை ஓசையுடன் கலந்து முடிகிறது. அன்றைக்கு நேரம் அப்பொழுது மாலை ஐந்து மணி சுமார் இருக்கும். பதினெட்டு அல்லது பத்தொன்பது வயசு மட்டிலான ஓர் இளமங்கை தொலைவில் சென்ற கப்பலின் மீதே பார்வை செலுத்தி அதனையே உற்று நோக்கியவளாக இதே பாறைக் கல் மீது அமர்ந்திருந்தாள். மாலை வெயிலில் அவளது சிவந்த மேனி சுவர்ண விக்கிரகமாக ஒளிர்ந்தது. கடல் காற்றில் அசைப்புண்டு அவள் நெற்றியில் வீழ்ந்த கேசச் சுருளை அடிக்கொரு தடவை தன் செங்காந்தள் விரலினால் மேலே சுண்டி ஒதுக்கிக்கொண்டே கடல்வெளியை நோக்கி மௌன தியானத்தில் ஆழ்ந்திருந்த

அப் பெண்ணின் வாடிய முகத்தில் பொழுதாக ஆக கவலைக்குறிகள் படரலாயின. மனத்தில் எழுந்த துயர கலவரம் முகத்தில் நிழலிட்டது. கைக்கடிகாரத்தில் மணி பார்ப்பாள் ஒரு சமயம். அதன் பின் திரும்பிக் கடற்கரையின் இரு பக்கமும் பார்ப்பாள். அப்படியாகப் பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமே குடி கொண்ட கண்களுடன் மனத்தே அமைதி இழந்தாளாய் துடித்தனள், துவண்டனள்...”

“அடடே, நல்ல இலக்கியச் சொற்களெல்லாம் அள்ளி வீசுறியே தென்னையாரே! தமிழ்ப் பிணைகளும் உன் காலடி ஏகி மகிழ்ந்து குலாவியிருப்பார்கள் போலும்” கதை நடுவே குறுக்கிட்டு சும்மா இப்படி ஒரு போடு போட்டேன். கதை சொல்வதில் ஆழ்ந்து லயித்துப் போயிருந்த தென்னையார் என் குறுக்கீட்டைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

தனது மென் குருத்து ஓலைகளில் தோரணம் கட்டிப் போட்டுக் கொண்டு சுவாமி அறையிலே எழுத்தறிந்த பயல் என்னிடமே இறுமாப்புக் காட்டுகிறானே என்று மனதுக்குள்ளாக ஒரு வேளை ஓர் இமைப்பொழுது நினைத்திருந்தாலும், அது ஒன்றையுமே ஒரு கை நொடிப்பாகக் கூட வெளிக்காட்டாமல், தான் கூற வந்த கதையைத் தொடர்ந்தது:

“கடலிலே போய்க் கொண்டிருந்த கப்பலுக்கு கரையிலிருந்த படியே தாவிப் பாய்ந்து விடத்துணிந்தாள் போல் அம்மங்கை நல்லாள் கற்பாறை ஆசனம் விட்டிறங்கி விடுவிடென்று நேரே கடலை நோக்கி நடப்பாள். மறுபடி அக்கம் பக்கம் பார்த்து விட்டுத் தண்ணீரில் தோய்ந்த பாதங்களைப் பின் வைத்து பொங்கி எழும் ஓர் அலைக்கு அஞ்சினளாய் குதித்தோடி வருவாள். மீண்டும் துணிந்தாளாய், அஞ்சினளாய், வழி மேல் விழி வைத்துப் பார்வையை வீசினளாய், காப்பவிழும் கவின்மலர் காற்றிலே சுழன்றாடினாற் போல் நிலமும் நீரும் இணையும் புவிலோக சங்கமத்தில், வாழ்வுக்கும் சாவுக்கும் நடுநிலையில் பகலும் இரவும் இணைந்து பிரியும் அந்தி மயக்கில் அவ்வாரணங்கு முன்னேகி பின்னிட்டு நெடுங்கடலை நோக்கிக் கற்சிலையாய் நின்று கண் கலங்கி நெட்டுயிர்த்து முழு மோசம் போனாளாய் ஏங்கி மனமுடைந்து துடிதுடித்துக் கொண்டிருந்தாள்.’

கதைக்கு இவ்விடத்தே ஒரு புள்ளி போட்டு விட்டு தென்னையார் ஆடாமல் அசையாமல் நின்றார்.

“என்ன, தென்னையாரே! கதையை இன்னும் தொடங்கிய பாடில்லை. அதற்குள்ளாகப் புள்ளி போட்டுத் தரித்து விட்டீரே. ஒரு வேளை அரைப்புள்ளி, காற்புள்ளி அல்லது “பாரா” பந்தியாகவிருக்குமோ? இல்லையானால் கதையை அதன் முடிவிலிருந்து தொடங்கும் புதிய உத்தி கித்தி ஏதும் கையாளப் போகிறீரோ?” – உசாவித் துளைத்தேன்.

“அதெல்லாம் ஒன்றுமில்லை அவசரப்படாதே மகனே. யாதொரு குத்தும் குடைசலும் உத்தியும் உபாதையுமில்லை. இந்தக் கதை அதன் முடிவிலேதான் முழுமை பெறுகிறது, கதையின் மூர்ச்சனையே அங்குதான் பிறக்கிறது என்று கூறிய வளர்தெங்கு மறுபடியும் காற்றிலே அசைந்தாடி மேலே கதையைத் தொடரலாயிற்று.

“அவள் யாரை-மனதிற்குகந்த எந்தக் கட்டிளம் காளையை ஒவ்வொருகணமாக எண்ணி அவ்வாறு துடித்துக் கொண்டிருந்தாளோ, அவன், அவளுடைய இன்னுயிர்க் காதலன், அவள் காலடியில் நீண்டு கிடந்த ஏழ்கடல் தொலைவில் அதே நேரம் கப்பலில் மிதந்து கொண்டிருந்தான். விளக்குகள் ஏற்றப்பட்டுத் தீபத் தெப்பமாகக் கப்பல் அலைகடலில் அசைந்தது. கரையிலிருந்து அவ்வொளி வடிவத்தின் மீதே வைத்த கண் அகற்றாது பார்வையை எறிந்து அப்பார்வையினூடே மனப்புலனையும் இழந்து சர்வமும் ஒடுங்கி சுற்றிலும் பயங்கரமான இருள் கவிந்து வருவதையும் உணராளாய் கல்லோடு கல்லானாள் கோதை அவள்.”

என்னது உசக்க இருந்து நீர்த்துமி தெறிக்கிறது. வாய் நனைந்து எச்சில் பறக்கிறதா? அல்லது.... ஓகோ, கண்கலங்கிக் கண்ணீர் சிந்தியதா? சேசே, என்னதான் சோகக் கதையாயிருந்தாலும் அதற்கு இப்படியெல்லாமா கண் கலங்குவது? சொல்லு, சொல்லு. அவ்விருபேரும் தானே கதாநாயகர்கள் காதல் ஜோடி? பலே பலே! அப்புறம் மேலே தொடரும்” – என் கதை முடுக்கு!

குரும்பைகளை அரித்துச் சுவை பார்த்த அணிற்பிள்ளை ஒன்றினை விரட்டி விட்டு தென்னையார் அதன் மேல் கதையைத் தொடர்ந்தார்:

“அவள் ஒரு பறங்கிப் பெண். ரீட்டா என்று பெயர். இங்கே சமீபமாகத்தான் ஒரு சின்ன ஒழுங்கையிலுள்ள சிறிய வீடொன்றில் தாயுடனே வசித்து வருகிறாள். நெசவு ஆலையில் வேலை. தன் வீடு; தன் வேலை என்று வேறு அல்லல் தொல்லைகள் நாடாமல் பரமசாதுவாக வாழ்ந்தவள், காதல் புயலிலே சிக்குண்டாள்.

காதல் அவள் வீடு தேடி வந்தது. அவளுடைய காதலன் ஒரு கடற்படைக் காளை, கப்பல்காரன். அவனை இந்நாட்டுக்குச் சுமந்து வந்த போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகம் சேர்ந்ததும் கப்பல் விட்டுத் தரை இறங்கிய முதல் அணியில் அவனும் ஒருவனாக வந்திறங்கினான். அவனது உயிரற்ற சடலத்தையும் கூட இப்பசுந்துளிர்த் தீவின் பாலைமணல் கரைகள் வாஞ்சையுடனே ஏந்தி எடுக்கக் காத்திருந்ததை அது சமயம் சிறிதேனும் முன்னறியானாய் ஈண்டு கால் பதித்தனன் அப்போர்க்காளை.

“இப்படி எத்தனை எத்தனை போர்க் கப்பல்கள், போர்க்காளைகள், படையெடுப்புகள், பயங்கர யுத்தங்கள் நம் நாட்டைச் சூழ்ந்திருக்கின்றன” – கண்ணிமைப்பது போல மனத்துள்ளே ஒரு பழைய சரித்திர கால நினைவு நெளிந்தோட அதனைத் துரத்திப் பிடித்து ஆழக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மறுபடியும் கடற்கரை வான்பயிர் கூறும் கதைக்குக் காது கொடுத்தேன்.

“றொபின் – அதுதான் அவன் பெயர். கப்பல் விட்டிறங்கி துறைமுக வாயில் கடந்து வெளியே நகர்ப்புற எல்லையில் கால் வைத்ததும் விதி அவனை வரவேற்றது. ஊருக்குப் புதிதாக வரும் கப்பல் பிரயாணிகளுக்கு ஊர் சுற்றிக் காண்பிக்கும் “தொண்டர்” கூட்டம் ஆங்கு மற்றொரு சேனையாக றொபினையும் அவன் சகாக்களையும் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். “என்கூட வாருங்கோ சேர்! விக்டோரியா பூந்தோட்டம், நூதனசாலை, நகர மண்டபம், மிருகக் கண்காட்சிச்சாலை, புறக்கோட்டை காலிமுகக் கடற்கரை, களனி, கண்டி, அநுராதபுரம், பொலனறுவை வரை போய் வரலாம். எல்லாம் ஒரே சுற்றில் பார்த்து வந்துவிடலாம்” என்றெல்லாம் அவர்களிடத்தே ஆசை எழ நயமாகக் கூறி தலைக்கு இரண்டு பேராகவும் மூன்று பேராகவும் அதற்கு மேல் கூட்டமாகவும், தனித்தனியாகவுமே அவர்களைப் பொறுப்பேற்று வாடகை மோட்டாரிலும், ரிக்ஷாவிலும் வாடகை பஸ்ஸிலும் ஏற்றிக் கொண்டு பறப்பார்கள். இது விபரமெல்லாம் எனக்கு எப்படித் தெரியுமென்று நீ என்னை கேட்பதற்கு முன்னமே, றொபினும் ரீட்டாவும் இங்கே என் தாளடியில் வந்தமர்ந்து பேசியதைக் கேட்டுத் தெரிந்து கொண்டதுதான் என்று அக்கேள்விக்கு இடம் வைக்காமலே சொல்லி விடுகிறேன். மேலும், நான் கூறும் கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடா. யாரோ எவரோ! ஓர் ஆணும் பெண்ணும், அவனும் அவளும் என்று வைத்துக் கொள் இனி, கதையைக் கேள்.

அன்றைய தினம் நகர்ப்புற வழி காட்டிகள் என அந்த வகைப்பட்ட ஆட்களிடம் வகையாக மாட்டிக் கொண்ட றொபின் கடல்பறவை ஒருபோது தனித்தவன் ஆனான். அது சமயமாக ஒரு ரிக்ஷாவில் அவனை ஏற்றி நாலு தெருவைச் சுற்றி அழைத்துச் சென்று குடிப்பதற்கு நிறைய சாராயம் வாங்கிக் கொடுத்து போதை தலைக்கேறிய நிலையில் ரீட்டா வீட்டு வாசலில் கொணர்ந்து விட்டார்கள். அந்த மாதிரியொரு அவல நிலையில் தான் ரீட்டா-றொபின்

முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அவர்களிரு பேரும் சில தினங்கள் என் நிழலில் ஒதுங்கி கலந்துரையாடினார்கள். பகல் முழுவேளையுமே இங்கு உட்கார்ந்திருந்து கதை அளப்பார்கள்.

"இரவு முழுவதும் உன் இனிய குரலே என் காதிற் கேட்டது ரீட்டா. கப்பலின் மேல் தளத்துக்குப் போய் அங்கு நின்று கரையோரம் தெரிந்த தென்னைகளைப் பார்த்துப் பெருமூச்சு விடுவேன் என்பான்.

உங்கள் நாடு உடல்நலத்துக்கு உகந்த குளிர்ந்த மலைச் சுவாத்தியத்துக்கு பெயர்பெற்றது என்று தெரிந்து வைத்திருந்தேன். மனதுக்கு இதமளிக்கும் இனிய அன்புச் சுவாத்தியம்கூட இங்குண்டு என்பதைக் கண்டு என் மனம் பூரிக்கிறது ரீட்டா. அன்றைக்கு உன் தாய் என்ன அன்பு சொரிந்தாள். எவ்வளவு பரிவும் பாசமும் பொழிந்தாள் என்பான்.

அதற்கு ரீட்டா, "எனக்கும் கூடத்தான் உன்னுடனே பழகியது முதல் இச் சில தினங்களில் நெஞ்சத்திலே இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்துப் பாய்கிறது றொபின். மனித சமூகத்தை விட்டு ஒதுங்கி வாழும் கடற்படை ஆட்களிடம் அவர்தம் இதயத்தில் இவ்வளவு ஆசாபாசமும், இனிய இங்கிதமும் இருக்குமென்று நான் எண்ணியதே இல்லை. போர் வீரர்களைப் பார்த்தாலே அவர்களைப் பொல்லாதவர்கள், முரடர்கள் என்றெல்லாம் பயங்கரமாகக் கற்பனை பண்ணிக்கொண்டு இந்நாள் வரை ஓடி ஒளிந்தோம்" என்று அவனிடம் கனிவாள்.

"இப்பொழுதுகூட என்ன, நான் மகா பொல்லாத போர் வீரன் தான் ரீட்டா. இதோ இப்பொழுதே உன்னைத் தூக்கி என்தோளில் போட்டுக் கொண்டு இதே கடலில் வீழ்ந்து கப்பலுக்கு நீந்திப் போய்விடப் போகிறேன்" றொபின் தோள் கொட்டுவான்.

"அது இனிமேல்தானா நடக்கப்போகிறது ! றொபின் ! எப்பொழுதோ உன்னை என்னோடு கொண்டு போய்ச் சேர்த்து விட்டாயே. மகா பொல்லாத கப்பல்காரன் நீ. பின்னே, ஊரெங்கிலும் பெண்களும் பிள்ளைகளும் கப்பல்காரர்களைப் பார்த்தபோதெல்லாம் ஓடி ஒளிப்பதற்கு அவர்களுக்கு என்ன பைத்தியமா பிடிந்திருந்தது? தோளிலே கோணிப்பை கூட ஒன்று மாட்டி வைத்திருப்பார்களாமே?" ரீட்டாவின் ஒரு கண் வெட்டு.

"உன் கண்களை விடவா என் போர்க்கோலம் பொல்லாதது ரீட்டா? பட்பட்டென்று வாள் வீச்சாக வீசி என்னைக் கொல்லாமல் கொன்று விடுகிறாயே ரீட்டா! கண் வெட்டோ புயல், மின் வெட்டோ? நான் இங்கே வீழ்ந்து கிடக்கிறேன். நீயோ என்னை வென்று என் போர்க் கப்பலையும் கைப்பற்றி வாகைசூடி நிற்கிறாய்."

"கோழைகள் களத்தில் குதித்திருக்கவே கூடாது ! போர் வீரரே !"

"மனங்கலந்து உறவாட, உரையாட, மனத்தை அழுத்தும் தனிமையின் நினைவுச்சுமைகளை இப் பூவசியத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு மெல்லியலார் தோள் சேர, தோழமை பூணக் கிட்டாதபோது வாழ்க்கை எத்தனை சூன்யம் மண்டிய பாழ் வெளியாகிப் போய்விடுகிறது ரீட்டா! இந்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் வழியில் கப்பல் வேறு நாட்டுத் துறைமுகங்களில் தங்கி அங்கெல்லாம் இங்கு சுற்றியதுபோல் ஊருக்குள்ளே சென்று மக்கள் மத்தியில் நான் பழக நேர்ந்தபோது எவளாவது ஒரு பெண்ணுடனே அவளுக்குப் பணம் செலுத்தியாவது சிறிது நேரம் அன்பாகப் பேசிவர எண்ணினேன்."

"ஆனால் இந்நாட்டில் ஒருத்தி எதிர்பார்த்திருக்காதபடி மிக சுலபமாக அகப்பட்டு விட்டாள் இல்லையா றொபின்?"

"ஆமாம், போட்டுக் கிடந்தெடுத்த இந்நாட்டு இரத்தினக் கல் போல."

"ஆனால் கப்பல்காரருக்கு இதெல்லாம் எதுக்கு என்று கேட்டுத் துறைமுக வாயிலில் வைத்தே அதனைப் பறிமுதல் செய்து விடமாட்டார்களா?"

"அப்போ தரையிலேயே நின்று விடுகிறது."

"கப்பல்காரனுக்குத் தரையிலே என்ன வேலை என்று கேட்பார்களே?"

"கப்பல் வீரன் இனித் தரையில் தரித்திருந்து ஓடம் விடப் போகிறான். கப்பலுக்கு வர மாட்டான் என்று சொல்லிவிட்டால் போச்சு"

"மெய்யாகவா றொபின்? எதிரில் இருக்கும்வரை உங்களை நம்புகிறேன். உங்கள் பேச்சை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் மறைந்து அப்பால் விலகிப் போனதும் கடல் குறுக்கிட்டு என் நம்பிக்கையைச் சிதறடித்து விடுகிறதே ! என்ன செய்வேன் றொபின்" விம்முவாள் ரீட்டா அப்பொழுது. கலங்காத அக் காளையும் நெஞ்சம் கலங்கி, "அன்பினால் ஒன்றுபட்ட உள்ளங்களை இந்த அற்ப கடலும் மலையும், காலமும் தூரமுமா பிரித்துவிட முடியும் ரீட்டா?" என்று அப்பேதையை ஆற்றித் தேற்றுவான்.

"இவ்விதமாகவெல்லாம் காலமும் நேரமும் போவதே அறியாமல் எவ்வளவோ பேசி மகிழ்வார்கள். அந்தி மயங்க ஒருவரை ஒருவர் பிரிய மனமில்லாமலே பிரிந்து செல்வார்கள். நானே அவர்களின் நெஞ்சங் கலந்த குலவுதலில் மனம் லயித்து ஒரு தினம் ஓர் இளநீர்க் குரும்பையை அவர்தம் கண்முன்னே கற்பாறை மீது போட்டுச் சிதறடித்து உங்கள் அன்பு வாழ்வுக்கு ஒரு விக்கினமும் நேராதிருக்கட்டும் என மனமார்ந்த ஆசி கூறினேன்.

ஆனால் நாம் நினைத்தபடியே எல்லாம் நடந்து விடுகிறதா? எங்கெங்கோ உலகின் வெவ்வேறு தேசங்களில் பிறந்து வளர்ந்த ஓர் ஆணையும் பெண்ணையும் இவ்வாறு அபூர்வமாகப் பிணைத்து வைத்த இதே கடல் காற்றும் வெண்மணலும் அவர்களைக் குரூரமாகப் பிரித்து வைக்கும் கொடுமைக்கும் உடந்தையாக இருந்து விட்டது.

“கப்பல் துறைமுகம் விட்டுப் போகும் நாள் வந்தது. ரீட்டா என் காலடியில் வீழ்ந்து அன்று பகல் முழுக்கப் பழி கிடந்தாள். றொபின் வருவான் என்று நாள் முழுதும் ஒவ்வொரு கணமாக எண்ணிக் கடும் தவமியற்றினாள். மாலைப்பொழுதாக ஒரு கப்பல் துறைமுகம் விட்டு வெளியேறிப் போய்க் கொண்டிருந்தது. அதைப் பார்த்து கருங்கல் பாறை மேல் மற்றொரு கல்லாகச் சமைந்தாள் அப்பூங்கொடி...

“கதிரவன் மேலைக் கடலில் குதித்தனன். பொன்னொளிர் அடிவானில் அக்கப்பல் ஒரு நிழலுருவாகத் தேய்ந்து அடிவானத்துக்கப்பால் மெல்லப் போய் மறைந்தது.

“எங்கும் இருள் சூழலாயிற்று கடல் அலைகள் “ஹோ” என்று கொந்தளித்து எழுந்தன.

ரீட்டாவின் நெஞ்சம் ஓவென்று அலறியது.

விம்மி வெடிக்கும் சிறு குழந்தை போல் தாங்கொணா துயருற்றவளாய், கண்கள் குளமாக விருட்டென எழுந்து விடுவிடென நடந்தாள்.

தன் நினைவற்று நடந்தவளை அதுசமயம் வேகமாக வந்த ரயில் ஒன்று மோதிச் சிதறடித்தது. அப்பொன்னின் கலம் – பொன்னொளிர் மேனி ஆங்கு ஒரு கணத்தே பொடி சாம்பராயிற்று.

இது சம்பவித்த மறுநாள் காலை என் காலடியில் மோதிய கடல் அலைகள் கப்பல்காரன் ஒருவனின் உயிரற்ற உடலை மணல் கரையில் கொணர்ந்து ஒதுக்கின...”

இவ்வாறு கடற்கரைத் தென்னையார் உருக்கமாகக் கதையைக் கூறி முடித்தார். எங்கும் விளக்குகள் எரிய ஆரம்பித்திருந்தன. நான் எழுந்து நடந்தேன்.

*நன்றி:*
*தினபதி மலர்(1971)*
*சுதந்திர இலங்கையின் தமிழ்ச் சிறுகதைகள்(1998)*
*சிறுகதை.இணையம்(1922)*

## நேசமிகு ராஜகுமாரன்

*வானளாவிய*
*அடுக்ககத்தின்*
*காவல் அறையில்*
*இரவுக்காவலர்*
*இரவு உணவை*
*எடுத்து வைக்கும்போது*
*வால் அசைத்தபடி*
*வந்து விடுகிறது*
*அந்த மஞ்சள் நிறப்பூனை.*
*இருவரும் பேசியபடி*
*சாப்பிடுகின்றனர்.*
*இன்னைக்கு உனக்கு*
*நல்ல வேட்டைதான் என்றபடி*
*சில மீன் துண்டுகளை*
*பரிமாறுகிறார்.*
*ருசித்து உண்ணும் பூனை*
*தாடையால்*
*அவர் காலை உரசி*
*நன்றி நவில்கிறது.*
*சாப்பிட்டு முடித்து*
*காவல் அறையிலேயே*
*படுத்துக் கொள்கிறது.*
*செல்பேசியில்*
*பண்பலை*
*கேட்கத் தொடங்குகிறார்*
*இரவுக்காவலர்.*
*இரவின் மடியில் நிகழ்ச்சியில்*
*ஒலித்துக் கொண்டிருக்கிறது*
*கண்ணிலே அன்பிருந்தால் கல்லிலே*
*தெய்வம் வரும்*
*பாடல்.*
*சிறு வாலாட்டலால்*
*பாடலை ரசித்தபடி*
*தூங்கத் தொடங்குகிறது*
*மஞ்சள் நிறப்பூனை.*



**க. புனிதன்**

# அட்ரினல் பூக்கள்

காலை நுழையும் முன்
கொண்டலாத்தியின் குரல்
பிட்யூட்ரியைத் தட்டி எழுப்பி
விவசாயியின் கைகளுக்கு
வேலையின் உத்தரவை அனுப்புகிறது.

கொய்யாப்பழம் கடிக்கும்
அணிலின் பறிப்பு சத்தம்
எனது அட்ரினலை
சிறு பூங்கொத்து போலத் திறக்கிறது.

அடி வயிற்றில் இருந்து
பசு மாட்டின் கூச்சல்
இன்சுலின் ஆற்றில்
சிறு அலைகளை எழுப்புகிறது.

பாதையை கடக்கும் தவளை
என் மனதில்
ஹைக்கூ விதையை வைக்கும் போது,
சிட்டுக் குருவியின் கீச்சு
சிறுமூளையின் வாசலில்
தூக்கத்தின் மணம் கொட்டுகிறது.

நீல மலை தொடர்—
அதன் நதிகள் போல
என் நாளமில்லா சுரப்பிகள்
தடம் பதிக்கின்றன.

**மலர்மகள்**

# பண்டிகை வாசம்

இருப்பது கொண்டு
சிறக்க செய்து
மகிழ்நிறை
அன்பின் ஆக்கிரமிப்பில்
கொண்டாடிய அம்மாவின்
கைப்பக்குவ பண்டிகை
வாசங்களின் பண்டங்கள்

பேக்கேஜுகளாய்
பலவித வண்ணங்களில்
அலைபாய்கின்றன இன்று..
இனிப்பகங்களில்!!!!

# டீன் கபூரின் கவிதைகள்



கடலின் மேல் மிதக்கும் ஒரு புத்தகம்
அதன் பக்கங்களைத் திருப்பினால்
அலைகள் பறவைகளாகி வானில் பறக்கின்றன.
ஒரு சிறுவன்
அந்தப் பறவைகளை எண்ணிக்கொண்டிருப்பான்.
ஆனால் எண்ணிக்கை ஒவ்வொரு முறையும் மாறி விடுகிறது.
“இது கவிதையா?
அல்லது கடலின் நினைவுகளா?”
என்று சிறுவன் கேட்க,
புத்தகம் தானே சிரித்து
தன் பக்கங்களை மூடிக்கொண்டது.


❍

மழை பெய்யாமல் இருந்தாலும்
வீதியின் நடுவில் தாமரை மலர்கிறது.
அதை யாரும் பறிக்கவில்லை.
ஏனெனில் அதன் உள்ளே
மனிதர்களின் நிழல்கள் மட்டுமே மலர்கின்றன.
“நான் உன் நிழலா?”
என்று அந்தத் தாமரை கேட்டது.
நான் பதில் சொல்லுமுன்
என் நிழல் வந்து
தாமரையின் மேல் அமர்ந்து
ஒரு கவிதையை எழுதத் தொடங்கியது.

❍

கிராம சாலையின் ஓரத்தில்
வேரற்ற ஒரு மரம் நின்றது.
அது வேரற்றது என்று நான் சொன்னவுடனே
அது பேசத் தொடங்கியது.
“என் வேர்கள்
உன் கதைகளில் மறைந்திருக்கின்றன.
நீ சொல்லாமல் விட்ட இடைவெளிகளில்
நான் இன்னும் வளர்கிறேன்.”
அப்போது
ஒரு முதிய பெண் வந்து
மரத்தின் நிழலைத் தலையில் வைத்துக்கொண்டாள்.
ஆனால் அந்த நிழல்
அவளுடைய சிறுவயதின் சிரிப்பாக மாறி
வீதியில் ஒலித்தது.
நான் என் நோட்டுபுத்தகத்தைத் திறந்து
அதைப் பதிவு செய்ய முயன்றேன்.
ஆனால் அங்கேயும்
மரம்தான் எழுதிக்கொண்டிருந்தது.

# அ.சீனிவாசன் கவிதைகள்



இருந்த இடம் தெரியாமல் இருப்பவன்
என்னை நானே
சிலுவையில் அறைந்து,
அறைந்து சலித்துவிட்டது.

சிலுவையில் எனை
அறைக்கும் பொருட்டாவது,
நண்பனோ எதிரியோ—
யாரோ ஒருவரையாவது
மனிதனின் சாயலில்
அனுப்பி வையேன், இறைவா!

❍

மூடிய கதவு
ஜெயிலில்
அடைத்தாற்போல் இருக்கிறதாம்—
திறக்கும் போதும் மூடும் போதும்
க்ரீச் க்ரீச்சென கதறுகிறது
மரமாயிருந்த
கதவு.

❍

மூலக்கடை நினைவு
பஜாரின் அந்த மூலக்கடை முன்
போகும்போதெல்லாம்
மகனின் கையை
தானாகப் பற்றிக் கொள்கிறேன்.

ஐந்து வருடங்களுக்கு முன்
அதே இடத்தில்
தன் தந்தையை காணாமல்
ஒரு இளைஞன்
அழுதுகொண்டிருந்தான்.

❍

*தாய்மை*
*என்னுள் இருக்கும்*
*தாய்மையை*
*உலகிற்கு பறைசாற்றுபவள்—*
*எனக்குத் தாயானவள்!*

❍

*அப்பாவின் வீடு*
*அப்பாவோடு முடங்கி விட்டன—*
*அந்த வண்டி,*
*மணி நாய்,*
*கைத்தடி,*
*கருப்புக்கோட்டு,*
*பெரிய கேட்டுக்கதவு,*
*வராண்டா பெரிய பல்பு—*
*அப்புறம்...*
*அம்மாவின் கால்கள்.*

❍

*உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்*
*எல்லோரும் கடவுளை*
*ஏதாவது கேட்கிறார்கள்.*
*நான்...*
*கடவுளையே கேட்கிறேன்!*

❍

*வரம்*
*குட்டி தேவதை*
*தவமாய் கடவுளை வரைகிறாள்.*
*கடவுளுக்கு*
*எவ்வளவு பெரிய வரம்!*

❍

*பறவைப் பார்ப்பது*
*பறவைப் பார்ப்பதே*
*எனக்கு போதுமானது—*
*பறப்பதற்கு.*

❍

*அபூர்வ வாய்(உ)*
*ஹீலியத்தை விடவும் எளிதில்*
*ஆவியாகிவிடுகின்றன*
*அம்மாவின் ஆசைகள்.*
*பெரும்பாலும்*
*வாயைக் கூட தாண்டுவதில்லை.*

❍

*மகள்*
*"என்னவோ,*
*இன்று எழுப்பிய முதல் குரலுக்கே*
*விழித்துவிட்டது—*
*காத்திருக்காமல்*
*கடவுள் தரிசனம் செய்த மாதிரி!"*

❍


*யானை*
*யானையின் பலம்—*
*யானைக்குத் தெரிய*
*வேண்டிய அவசியமில்லை.*

❍

*நம்ம அஸ்திரம்*
*உன்னிடம் உள்ள*
*அமைதியைப்*
*பூட்டி உள்ளே வை—*
*ஆக மிகக் கொடிய சண்டைக்குக்*
*தேவைப்படுவது அல்ல,*
*கடைசி வரை வலிமை காட்டும்*
*சேமிப்பாய் வலிமையூட்டும்!*

❍

*என் வரிகள்*
*நிதிப் பற்றாக்குறையைக் குறைக்க*
*அரசாங்க வரிகள்.*
*அன்புப் பற்றாக்குறையைக் குறைக்க*
*என் வரிகள்—*
*உங்களுக்கும் எனக்கும்!*



**சேஹு மொஹம்மது பெனாஸிரா**

# நினைவின் துளிகள்

மூடப்பட்ட வாழ்க்கைப் புத்தகத்தின் முன்
பக்கங்களை
மெது மெதுவாய் தூசு தட்டிப் புரட்டிப்
பார்க்கிறேன்

முடியாத சில
இயலுமைகள் முடிந்த
வரலாறொன்றைக் கூறிப் பாடம் கற்பிக்கிறது

உடலின் உறங்கிப் போன
முதுமைகளை மீட்டி
அசைபோட மட்டும் தான்
இனியும் உனக்கான
அவகாசம் என்று

ஒரு சோலைக் கிளிக்கூட்டத்தின்
சுவையான நினைவுகளை
ஒத்த இனிமைகள்
இன்றும் நாவூறும்
நயமிக்கவை

தாள்கள் பதிக்க மறந்த
நாட்களின் கதைகளைக்
கனவுகளுக்கு மட்டும்
சொல்லிக் கொடுத்து
விடை பெற்றது
அன்றைய இரவு..

**மாரி மகேந்திரன், இலங்கை**

பேசுவதற்கு
எதுவுமே இல்லாமல்
இருவரும்
மவுனமாகவே இருந்தோம்...

அந்த அடர்ந்த
மவுனம் இருளின் புள்ளிகளாக
மனதை சூழ்ந்துவிட
எத்தனித்த போது....

ஏதோ ஒன்றை
பேசவே வேண்டும் என்று
பேசினோம்...

இப்போது
அந்த
மவுனத்தை குறித்த
பயம்
அற்றுப்போனது...



**இனியவன்காளிதாஸ்**

# மனங்கொத்திப் பறவை

என் இரகசியப்பெட்டியின் திறவுகோலை உன்வீட்டு
தேநீர்க் கோப்பையிடம்தான் நான் ஒப்புக்
கொடுத்திருந்தேன்...

என் அந்தரங்க நாட்குறிப்பின் பக்கங்களை உன்
சமையலறை அலமாரியில்தான் அடைக்கலம்
கொடுத்திருந்தேன்...

என் வலிமிகுந்த வருத்தக் குறியீடுகளின்
கடவுச்சொல்லும்கூட
நீ வளர்த்த லவ்ஃபேர்ட்ஸின் கூட்டுக்குள்தான்
கம்பிகளாயிருந்தது...

நம் நேசக்குளத்தின் கரையுடைந்த தருணத்தில்தான்
எனக்குத் தெரிந்தது;

என் அந்தரங்கங்கள், என் இரகசியங்கள்,என்
வருத்தத்தின் வலிக்குறியீடுகள் யாவும்
உன் வீட்டு டாபர்மேனின் கொட்டடியில்
கொட்டப்பட்டிருந்ததை...


இதோ இப்போது பார்... சொல்தின்னும்
ஆக்டோபஸின் கரங்களில் சிக்கிக் கொண்டு
உன்னோடு உரையாட விரும்பும் என்நாவை குருதி
வடிய கொத்திப்போகிறது
ஒரு மனங்கொத்திப் பறவை.

**ச. சத்தியபானு**

மெதுவாக கடக்கும்
நாட்களுக்குள்
ஒளிந்து கொள்ளும்
ஒரு யாமத்தின் சிறுபொழுது
துளிர் விடும் நேரத்தில் உதிக்கிறது
கண் கூசும்
சூரியன் உதிர்ந்த
பொழுதிற்குள்
உறங்கி கிடக்கிறது
ஒவ்வொருவரின்
தனி மனித கடமைகள்
மங்கிய மாலையில்
மயங்கி விழுகிறது
ஆசைகளும்
ஆவல்களும்
மீண்டும் முளைக்கிறது
இருளில் நிறைந்த அந்த இரவு......

*Dr* ஜலீலா முஸம்மில், ஏறாவூர், இலங்கை

# வசந்த லாகிரியில்...



*சுழன்றசையும் சுடருக்குள்*
*காற்று நுழைந்து கதை பேசிக் கொண்டிருந்தது*

*மெல்லிய மங்கலொளியின்*
*தீட்சண்யம் அமைதியான தியானமொன்றை*
*ஆரம்பித்து*
*விகசித்தது*

*கருநீலமையெனப் பீய்ச்சிய*
*கங்குல் திரையில் நிலாப்பொட்டு*
*வெண்ணொளியாடை தரித்து வசீகரித்தது*

*மேகக்கதவுகள் திறந்து எட்டிப்பார்த்த*
*மின்னல் கோணங்களில்*
*மரகத ஓசையைக் கலந்து வீசியது நிர்மல வானம்*

*இருள்விக்கும் ஒளிச்சூரணம்*
*உண்டு*
*ஒளிர்விக்கும் இருள்பானமருந்தி*
*புராதனங்களில் பொலிந்து*
*நாம் நட்சத்திரங்களானோம்*

*முத்துக்களும் இரத்தினங்களும் விதிர்த்துப்பதித்த*
*விதானத்தில்*
*வசந்த லாகிரியில் சுழல் நடனம் நமக்குள்*

*இரகசியக் கோப்பையில் இன்னமுதின் வேட்கை*
*நிறைத்துத் தெறித்துச்*
*சுழன்று கொண்டே*
*இன்னும் பூமி தொடாத நிகழ்காலம் நாமாகினோம்*

*வசமிழக்கச்செய்யும் மாசற்ற நேசத்தேன்திரவமருந்தி*
*வான்வெளியில் நடுச்சாளரம் திறந்து எம்*
*தீராத்தேடலின்*
*ஒளிக்கைகள் நீள நீள*
*இறந்தகாலமானோம்*

*பின்னும் முடிவிலி நிகழ்காலங்கள் எம் சுவடுகளில்*
*துலாம்பரமாய்ப் பிரகாசிக்க*
*எம்மான்மாக்கள்*
*ஒளிக்கை மென்விரல் கொண்டு*
*பிரபஞ்சப்புல்லாங்குழலினை*
*இசைக்கின்றன*

*நாம்*
*மீட்டிய ஸ்வரங்கள்*
*காற்றுவெளியில்*
*ததும்பி வழிந்து*
*விரவி வியாபித்து தீராக்காதலின் அலைகளை*
*ஓயாமல் தோற்றுவித்துக் கொண்டே இருக்கின்றன!!*

# பத்துக்கு பத்து

எஃப்.எம்.பொனவெஞ்சர்



நான் தன்னாட்சி பெற்ற கல்லூரியின் இளங்களைப் படிப்பில் சேர்ந்திருந்தேன். ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கும் கல்லூரி.

செமஸ்டர் முறை கொண்டிருந்த படிப்பில் முதலாம் ஆண்டு எக்ஸ்ட்ரா கரிக்குலர் நடவடிக்கைகளுக்கு பத்து மதிப்பெண். படிப்பு சம்பந்தப்படாத ஏதாவது ஒரு வெளி நடவடிக்கையில் பங்கு பெற்றே ஆக வேண்டும். அது தேசிய மாணவர் படையாக இருக்கலாம், சமூக சேவையாக இருக்கலாம், விளையாட்டாக இருக்கலாம் அல்லது இசைக்குழுவிலோ, வினாடி வினாக் குழுவிலோ ஏதாவது ஒரு நடவடிக்கையில் பங்கு பெற்றிருக்க வேண்டும்.

கல்லூரிக்குள் நுழைந்து முழு சுதந்திரம் அனுபவிக்கும் மாணவர்கள் திசை மாறி போகாத வண்ணம் அவர்களை நன்னெறி படுத்தும் எண்ணத்தில் இந்த முயற்சி.

எனக்கு கல்லூரி ப்ராஸ் பாண்ட் எனப்படும் இசைக்குழுவில் சேர ஆசை.

கல்லூரியின் மூலையில் விளையாட்டு மைதானம் அருகே தனித்து இருந்த ஒரு சதுர கட்டிடத்தில் இசைக்குழு இயங்கி வந்ததை நான் முன்னரே பார்த்திருந்தேன். ஒரு நாள் மாலை வேலையில் அந்த கட்டிடம் பக்கம் நடந்தேன்.

இளைஞர்கள் பல்வேறு வாத்தியங்கள் வைத்து பயிற்சி செய்தவண்ணம் இருந்தார்கள்.

“எனக்கு இசைக்குழுவில் சேரணும்” தனித்து நின்ற ஒரு இளைஞனிடம் நான் என் ஆவலைச் சொன்னேன்.

“அண்ணே! ஒருத்தர் புதுசா சேரணுமாம்” என்னை வேறு ஒருவரிடம் கைகாட்டிவிட்டு அந்த இளைஞர் தன் வேலை பார்க்கச் சென்றுவிட்டார்.

“என்ன? முதல் வருஷமா?”

“ஆமாண்ணே” என்றேன் நான்.

“என்னை சார் என்று கூப்பிட வேண்டும்” அவர் மேலும் தொடர்ந்தார் ”இசை பற்றி ஏதாவது தெரியுமா?”

“கானொலியில் பாட்டுப்போட்டிகள் பார்ப்பேன்”

நல்லது”

“ஆறாம் வகுப்பில் பாட்டுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறேன்”

“ஸ்வரங்கள் பற்றி ஏதாவது தெரியுமா”

“இது என்ன ஆளெடுப்புக்கு முன் நடைபெறும் நேர்காணால் போல் இருக்கிறது” என்று மனதினுள் நினைத்துக்கொண்டேன்.

தேசிய மாணவர் படையில் சேர்ந்தால் காலை ஏழு மணிக்கு மார்ச் ஃபாஸ்ட்டிற்கு வரவேண்டும். தேசிய சமூக சேவை என்றால் விழாக் காலங்களில் எல்லாம் பெண் பிள்ளைகளை சைட் அடித்துக் கொண்டு சுற்றாமல் போக்குவரத்து ஒழுங்கு செய்யும் வேலை செய்ய வேண்டும். கல்லூரி பாண்ட் தான் எனக்கு பிடித்திருந்தது. விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் தீவிரமும் உடல் வலுவும் எனக்கு இல்லை.

இசைக்குழுவில் இருந்த அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இசை வாத்தியங்களைத் தங்களது காதலிகள் போல் நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக் கொண்டு நடந்த விதம், அந்த வாத்தியங்களின் ப்ராஸோ போட்ட பளபளப்பு என்னைக் கவர்ந்தது.

“தெரியும் சார் ஏழு ஸ்வரங்கள். சரிகமபதநி”

“அது கர்னாடக இசை. பரவாயில்லை. பிடித்துக் கொள்வாய். இப்போதைக்கு எனக்கு ஆல்ட்டோ ஹார்னுக்கு தான் ஆள் வேண்டி இருக்கிறது. செய்வாயா?” : என்றார்.

ஆல்ட்டோ ஹார்ன் என்பது சிறிய வகை இசைக்கருவி. முதலில் ஆல்ட்டோவை சுத்தம் செய்யும் வேலை எனக்கு கொடுத்தார்கள். அந்த ஆல்ட்டோ ஹார்ன் இசைக்கருவி வளைந்து கையில் பிடித்துக் கொள்ள தோதாக இருக்கும். அதன் நடுவில் மூன்று குமிழிகள் போல் இருக்கும். வாயில் வைத்து ஊத ஒரு குழாயிடன் கூடிய அமைப்பு இருக்கும்.இடது கையில் அதை நெஞ்சுடன் சேர்த்து அணைத்து வலது கை விரல்களால் அந்த குமிழி போன்ற அமைப்புகளை மாறி மாறி அழுத்திக் கொண்டு நோட்ஸ் பார்த்து வாயில் வைத்து ஊத வேண்டும்

“முதலில் அந்த குழாயில் வைத்து ஊதிப் பழகுங்கள்” என்றார் அந்த சார். “இசை என்பது இவ்வளவு தானா” என்று எண்ணியவாறு நான் வாய் வைத்து ஊதினால் பர் பர் என்று காற்று தான் வந்தது.

“இன்று முழுதும் ஊதிப்பழகு” என்று கூறிவிட்டு அவர் நகர்ந்துவிட்டார்.

அவர் நகர்ந்ததும் நான் முதலில் பார்த்த இளைஞன் என்னிடம் வந்தான்.: “ஹலோ சகோதரா, வாழ்த்துக்கள். ஆல்ட்டோ ஹார்னா?”

“ஆமாம். ஆனால் அதை இசைப்பது இவ்வளவு கடினமாய் இருக்கும் என்று நான் சற்றும் நினைக்கவில்லை” என்று சற்று வருத்ததுடன் நான் அவனிடம் சொன்னேன்.

“வருத்தப்படாதீர்கள். வாயை சற்று குமித்து உதடுகள் மூலம் காற்றை வெளியே தள்ளுங்கள்” என்றார் இஸ்மாயில். அவர் பெயர் இஸ்மாயில்.

“உதடுகளும் கன்னங்களுடன் தாடையும் வலிக்கிறது” என்றேன் நான்.

“முயன்று பாருங்கள்”

அடுத்த முயற்சியில் ‘பர் பர்’ என்று இல்லாமல் சற்று இசை வந்தது. “ இது என்ன சவா, ரியா கவா... எதுவும் புரியவில்லையே” என்றேன் நான்.

“நமக்கு தோ ரே மி ஃபா சோ லா சி தோ தான். கொஞ்சம் கொஞ்சமாக பிடித்துக்கொள்வாய்” என்றார் இஸ்மாயில்

“நீங்களும் பத்து மதிப்பெண்களுக்காக சேர்ந்தவரா?” என்றேன் நான்.

“அது ஒரு விதத்தில் உதவும். ஆனால் நல்ல முறையில் மூணு வருடம் பயிற்சி பெற்றுவிட்டேன் எனில் ரயில்வேசிலேயோ, திருச்சி பிஹெச்ஈஎல்லிலோ இசைக்குழுவில் சேர்ந்துவிடலாம். செக்யூரிட்டி வேலையும் கிடைக்கும்”

“ஓ அப்படி ஒரு நல்லதும் இருக்கிறதா” என்றேன் நான்.

“நீங்கள் என்ன?” எந்த இசைக்கருவி இசைக்கிறார் என தெரிந்துகொள்ள கேட்டேன்.

“நான் கிளாரிநெட். நம்ம ஊர் நாதஸ்வரம் போல்”

“நான் குழுவில் சேர எத்தனை வாரங்கள் பயிற்சி பெற வேண்டியிருக்கும்?”

“எல்லாம் உங்கள் கையில் தான் இருக்கிறது., முதலில் சோ வரை இசைத்துப் பழகுங்கள். பின்னர் ஹை பிட்ச் பிடிக்கலாம். சரளமாக வாசிக்க வேண்டும். பின்னர் நோட்ஸ் படிக்கப் பழக வேண்டும்”

நான் முடிவு செய்துவிட்டேன்.ஆல்ட்டோவாக மாறிவிடுவதென.

அந்த இசைக்குழுவில் யார் என்ன வாத்தியம் வாசிக்கிறார்களோ அந்த இசைக்கருவி பெயர் சொல்லி தான் அவர் அழைக்கப்படுவார்.

நான் ஆல்ட்டோ.

இஸ்மாயில் கிளாரிநெட்.

பாலா ட்ரம்பெட், ராஜன் டூபா இப்படி.

ட்ரெம்போன் இசைக்கும் தியாகு மட்டும் ஒரு தனி ரகம். அவனுக்கு வாத்தியத்தில் மூன்று குமிழிகள் இல்லை. அந்த வாத்தியத்தை முன்னாலும் பின்னாலும் இழுத்து இழுத்து நோட்ஸ்படி இசைக்க வேண்டும்.

இவை எல்லாம் இப்படி இருக்க ட்ரம்ஸ் தான் இசைக்குழுவிற்கு முழுமை தரும். நடந்து போகும் பொழுது இந்த ட்ரம்சை நான்கு சிறு பையன்கள் குச்சியில் தாங்கி நடந்து வருவார்கள். ட்ரம்ஸ் இசைக்கும் ரவி கையில் இருக்கும் தடியின் நுனியில் இருக்கும் பந்து போன்ற அமைப்பு கொண்டு டும் டும் என்று தட்டிய வண்ணம் வரவேண்டும். ட்ரம்ஸ் இசைக்கும் ரவி என்றால் அனைவருக்கும் சற்று இளக்காரம் தான்.

ரவி கொஞ்சம் குண்டு. அவனால் தம் பிடித்து எந்த ஒரு இசைக்கருவியையும் நீண்ட நேரம் இசைக்க முடியவில்லை. சோல் வரை தான் அவனால் ஊத முடிந்திருந்தது.

”உன்னிடம் கறுப்பு நிற முழுக்கால் சட்டையும் வெள்ளை நிற முழுக்கை சட்டையும் இருக்கிறதல்லவா. அது தான் நமது குழுவின் சீருடை.”

சீருடை இருந்தது.

நான் கல்லூரி இசைக்குழுவில் சேர்ந்துவிட்டேன்.

நாங்கள் வாத்தியங்கள் வாசித்துக்கொண்டு நடந்து போகையிலேயே ஒரு நேர்த்தி இருக்கும்.

முதலில் ட்ரம்ஸ் வரும்.

அதன் பின்னால் ட்ரம்பெட்.

அதை அடுத்து கோர்னெட்.

அடுத்து கிளாரிநெட்.

பின்னாலே ஆல்டோ ஹார்ன்.ஆல்டோ ஹார்ன் பக்கத்தில் ட்ரெம்போன்.

அவர்களுக்கு பின்னால் சாக்ஸஃபோன்

கடைசியாக பாரிடோன்

இறுதியாக பெரிய சைசில் இருக்கும் டூபா.

பொதுவாக ப்ராஸ் பாண்டுகளில் கடைபிடிக்கும் வரிசை இது தான்.

சில இடங்களில் நின்று கொண்டு இசைக்கும் பொழுது வட்டமாக நின்று கொண்டே இசைப்போம்.

கல்லூரி ஆண்டு விளையாட்டுப் போட்டியிலும் ஆண்டு விழாவிலும் தவறாது பாண்ட் இசை இருக்கும். கல்லூரி சம்பந்த ப்பட்ட மற்ற

விழாக்களிலும் ப்ராஸ் பாண்ட் தவறாது இடம் பெறும்.

எங்களுக்கு தனி கவனிப்பும் உண்டு. கல்லூரி விழாக்களின் சமயம் மாணவர்களுக்கு வழங்கப்படும் இனிப்பு ஒரு பாக்கெட் கூட ப்ராஸ் பாண்ட் காரர்களுக்கு கிடைக்கும்.

முதலில் என்னை கவனியாத வகுப்பு பெண்கள் கூடுதல் மரியாதையுடன் இப்பொழுது என்னை கவனித்தார்கள்.

என் வகுப்பு மாணவி ரேகா இன்னும் சற்று நெருங்கி வந்திருந்தாள். ஒரு சமயம் எங்கள் பேச்சு ட்ரம்ஸ் தட்டும் ரவி பற்றி வந்தது.

“மற்றவர்கள் போல் ரவி இல்லை. கொஞ்சமும் கஷ்டப்பட வேண்டிய தேவையில்லை அவனுக்கு” என்றாள் ரேகா.

எனக்கு ரவியை நினைத்து சற்று பாவமாக இருந்த து.

நான் ரவியை ஆதரித்து பேசினேன்,” ஆனால் பாண்ட் இசையை சீர்படுத்தி டைமிங்குடனும் ரிதமுடனும் கொண்டு செல்வதில் பெரும் பகுதி வகிப்பது ட்ரம்ஸ் தான்”.

“நீ என்ன சொன்னாலும் சரி. மற்றவர்கள் போல் ரவி இல்லை.”

“இல்லை ரேகா. அவனும் வாத்தியம் இசைக்க முயற்சி செய்து கொண்டு தான் இருக்கிறான்”

நான் தொடர்ந்தேன்“இன்னொன்று தெரியுமா உனக்கு ட்ரம்ஸ் வாசிக்கும் ரவி தான் மாணவிகளூடே பாப்புலர். அவன் தானே ‘பாங், பாங்’ என்று இசைக்கிறான்”

என் ஜோக் ரேகாவிடம் எடுபடவில்லை.

ரவி பற்றிய தன் அபிப்ராயத்தை ரேகா சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை.

நான் இப்பொழுது என் வகுப்பில் சற்று உயர்ந்த அந்தஸ்து பெற்றிருந்தேன். நட்பு வட்டாரமும் பெரிதாகி இருந்தது. சிகரெட் புகைக்கும் பழக்கம் எனக்கு ஆரம்பமாகி இருந்தது.

நான் சிகரெட் புகைப்பதை ஒருநாள் பார்த்துவிட்ட பாண்ட் மாஸ்டர் "சார்" என்னை தனியாக அழைத்துப் பேசினார்.

"இங்கே பார் தம்பி. உனக்கு ஆல்ட்டோ நல்லா வருது. நான் உனக்கு ஆல்ட்டோ சாக்ஸ் தரலாம் என்றிருக்கிறேன். இப்போது சிகரெட் புகைக்கிறாயே. சிகரெட் புகைத்தால் தம் போய்விடும். வாத்தியம் ஊத முடியாது. ஸ்டமினா இருக்காது"

சாக்ஸஃபோன் மிக அருமையான வாத்தியம். இதை வைத்து தான் கதிரி கோபால்நாத் பிரபலமானார்.

"சரி சார்.விட்டுவிடுகிறேன்" என்றேன் நான். ஆனால் சிகரெட் புகைக்கும் பழக்கத்தை விடமுடியவில்லை.

சிகரெட் புகைப்பது என் அந்தஸ்தை கல்லூரி வட்டத்தில் மேலும் ஒரு சுற்று உயர்த்தியிருந்ததாக கற்பனையில் மிதந்தவாறு இருந்தேன்..

கொஞ்சம் கொஞ்சமாக என்னால் ஆல்ட்டோவை சரியாக இசைக்க முடியாமல் போனது. என்ன முயன்றாலும் உச்ச ஸ்தாயிகள் பிடிக்க முடியவில்லை.

சார் என்னைக் கூப்பிட்டார்," தம்பி, நீ இனிமேல் பாண்ட்டிற்கு வரவேணாம். உன்னால் முடியாது"

எனக்கு எக்ஸ்ட்ரா கரிக்குலர் நடவடிக்கையும் அதனுடன் ஒட்டி நின்ற பத்து மதிப்பெண்ணும் கண்முன் வந்தது.

நான் பணிவுடன் கேட்டேன்,"வேறு வழி இல்லையா சார்?.வருடம் பாதி கடந்து விட்டது. வேறு எந்த எக்ஸ்ட்ரா கரிக்குலர் நடவடிக்கையிலும் என்னால் இடையில் சென்று சேரமுடியாது "

"ஓ எக்ஸ்ட்ரா கரிக்குலர் நடவடிக்கையா? ஒரு வழி இருக்கிறது". நான் அவர் அடுத்து சொல்லப்போவதை கை கட்டாத குறையாக கேட்டுக்கொண்டிருந்தேன்.

"நீ ட்ரம்ஸ் எடுத்துக்கோ. ரவி ஆல்ட்டோ எடுத்துக்கட்டும்" ரவி இப்போழுது இசைக்கருவி இசைப்பதில் தட்டுத்தடுமாறி தேர்ச்சி பெற்றிருந்தான்.

ஒரு கணம் என் கண் முன் ரேகா தோன்றி மறைந்தாள்.

"இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டும். எனக்கு எக்ஸ்ட்ரா கரிக்குலர் நடவடிக்கையும் பத்து மதிப்பெண்ணும் முக்கியம்"

மதுரகவி, வண்டியூர், மதுரை

## சாதியப் பேய்

*சாதியப் பேயின் சாக்கடை வாயை*
*மூடிட என்றும் வழியில்லையா ?*

*சாதியப் பேயின் கூரிய நகத்தைக்*
*குத்திக் கிழிக்கவும் மனமில்லையா ?*

*சாதியப் பேயின் கரங்களை நறுக்கும்*
*கருவிகள் செய்யப்படவில்லையா ?*

*சாதியப் பேயின் சங்கைக் கடிக்கும்*
*பற்கள் இன்னும் முளைக்கலையா ?*

*சாதியப் பேயின் கோரப் பசியைக்*
*கொன்று குவிக்கவும் துணிவில்லையா ?*

*சாதியப் பேயின் குருதிக் குளியலைத்*
*தடுக்கவும் அரசுக்குத் திறனில்லையா ?*

*ஆணவக் கொலையை ஆவணப் படுத்தி*
*அடுத்த வேலைக்கு ஆயத்தமா ?*


*கால மரத்தின் கடைசி இலையாய்*
*கவினின் கொலையும் உதிரட்டுமே*

*சாலையில் காய்ந்த சகதியைப் போல*
*சாதியும் நிலத்தில் காயட்டுமே*

*வேற்றுமை வெடிகளை உற்பத்தி செய்யும்*
*சமூக ஆலைகள் இடியட்டுமே.*

*ஏற்ற தாழ்வுகள் எதுவும் இன்றி*
*நாளைய பொழுதும் விடியட்டுமே.*

# இரா.சண்முகப்பிரியா கவிதைகள்



சிக்கெடுத்த யன்னல் கம்பிகளின் கடைசிப்பின்னல்
வரை நீளும் இச்சுருள் யாமம்
கசிந்தொழுகிய அணையாடையாய் ஈரமேறிக்
கிடக்கிறது
எங்கிருந்தோ வெடுக்கெனும் மினுக்கட்டான்களின்
இஞ்சிய ஒளியில்
பதறி ஓடும் நிலவொளி சகிக்கவில்லை
எதுவுமே நடவாத பாவங்களை வெட்கமின்றி
சூட்டிக்கொள்ளும் இவ்விரவும் நிலவும்
துயர நாட்களை சத்தமின்றி உருட்டப் பார்க்கிறது
விடியலில் தூங்குமூஞ்சிகள் பூக்கும் காலம்
யாருக்காகவும் நிற்பதில்லை
கூப்பிடு தூரத்தில் இல்லாத எவற்றுக்கும்
இனி என்ன பெயரிட்டால் என்ன!

❍


நிச்சயமற்று உடைந்துபோகும் சொற்களை
இறுகப் பற்றியிருக்கும் விரல்களுக்குள்
கசியும் கடைசி நம்பிக்கையில்
ஆறி அமர்கிறது
சேர்த்து வைத்த அத்தனை விசும்பல்களும்.

❍

தூக்கியெறிந்த மூட்டையிலிருந்து
கசமாய்க் கிடக்கும் என்னைக் கவ்வியபடி
தப்பித்து ஓடுகிறது இவ் வேனில்
அரை நொடிக்குள்
விருக்கெனும் கசப்பை வாயில் துலாவி எடுக்கும்
நாவுகளில்
உலர்ந்து கிடக்கிறது நீரோடிய தடம்
அருகமரும் தனிமையில் பகிர்ந்து கொள்வதற்கு
துப்பி எடுத்த நினைவு மட்டுமே கைகளில்
சிறிய தூக்கத்திலும் உலகம் தொலைந்துபோய்
ஒவ்வொரு செதிலாய் பிய்த்தெடுத்து
தசைகளைத் துளைக்கிறார்கள்
பயணங்களில் பின்னோடும் மரங்களாய்
நினைவுகள் தப்பியோட,
தவறி விழுந்த கடைசி வாய்ச் சோற்றை
விழுங்கும் பசித்த விழிகளுக்கு
பறத்தலை நிறுத்திய சிறகின் கனம்
வற்றிய சுனைகளில் வாழ்வை அடமானம் வைத்து
திசைகளற்று திகைத்து நிற்கும் வேர்களை நம்பி
நிற்கின்றன
கூடைகளும் விதைகளும்
பருவங்கள் பொய்க்கும் காலங்களை
அன்பு தலைப்பிரிய நின்றுநோக்கும்
மொழிகள்
இப்போது சிறைப்புறம் செல்வதில்லை.

# ஒரு வீதி இரு வீடு

## கவிஜி



இது வழக்கம்தான்... வாலாட்டிக் கொண்டு வந்து நிற்குமே.. எங்க காணோம்... கையில் பிஸ்கட்டோடு நின்ற பூர்ணாவுக்கு பாதி பசி. மீதிக்கு தான் வெள்ளை நாயைத் தேடுகிறாள்.

வாசலில் அங்கும் இங்கும் தேடினாள். வீதியில் இரு பக்கமும் திரும்பி திரும்பி கூப்பிட்டாள்.

வெள்ளை நாயி.... ஏய்...வெள்ளை நாயி.... பிஸ்கட் வேணுமா வேண்டாமா...

வாலை ஆட்டிக்கொண்டு காலுக்குள் குழைந்து கொண்டு முசு முசுவென ஒரு மொழியில் முனங்குமே... எங்க போச்சு.... எங்க... போச்சு. எதிர் வீட்டு வாசலில் நின்று கூப்பிட்டும் வரவில்லை. பக்கத்து வீட்டு வாசலில் நிற்க நிற்க கூப்பிட்டும் வரவில்லை. வீட்டுத் திண்ணையில் விதி முடிந்த வீணை போல அமர்ந்திருக்கும் தாத்தாவிடம்

வினவினாள். ஒல்லி தேகத்தில் ஒட்ட வைத்த தலை... ஆடிக்கொண்டே இருந்தது.

அவருக்கு எல்லாம் தெரியும். ஆனால் எதுவும் தெரியாது. பார்த்துக் கொண்டுதான் இருப்பார். ஆனால் பார்க்கவில்லை என்பதும் உண்மைதான். பூர்ணாவுக்கு அழுகையே வந்து விடும் போல. ஏய் தாத்தா வெள்ள நாயி எங்க போச்சு... சொல்லு என்று கேட்டு பார்த்து உலுக்கிப் பார்த்து... ம்ஹூம். அவர் தலையை தலையை ஆட்டிக் கொண்டு அமர்ந்த இடத்திலேயே நடந்து கொண்டிருந்தார். உங்க பேத்தி பள்ளிக்கூடம் விட்டு வந்தாச்சா.. என்ற கேள்விக்கு எனக்கு பேத்தியே இல்லை என்று சொன்னவர். அப்போ இது யாரு என்று பூர்ணாவைக் காட்டி கேட்டதுக்கு பேத்தி என்றவர்.

இந்தாளுக்கு என்ன பைத்தியமா என்று கேட்போரிடம் தெளிவாக பேசுவார். தெளிவாக பேசுவோரை பைத்தியம் ஆக்கி விடுவார். பூர்ணாவின் அம்மா... போன வருடம் மறைந்து போனாள். மறைந்து போனாள் என்றால்... மரித்துப் போனதாக இல்லை. சட்டென காணாமல் போய் விட்டாள். இருந்திருந்த மாதிரி இல்லாமல் போவது ஒரு கலை. அது அவளுக்கு கை வந்திருக்கிறது. காலையில் வேலைக்கு போனவள் பிறகு வீடு திரும்பவே இல்லை. சில விஷயங்களுக்கு வரைமுறை இல்லை. வரையறை கிடையாது. வருவதும் போவதுமான வாழ்க்கை முறையில் அவரவர் வளைவு அவரவர் ஒலிப்பான். அவ்வளவே. அவள் காணாமல் போய் விட்டாள்.

பாய் கட்டிங் கொஞ்சம் வளர்ந்து அதன் சீரமைப்பில் இருந்து விலகி இருந்தால் எப்படி இருக்கும்... அப்படி இருக்கும் பூர்ணாவின் தலைமுடி. வலது சைடு நேரெடுத்து இடது பக்க சுருள் முடி மேல் பட்டாம்பூச்சி போல ஒரு கிளிப் போட்டிருப்பாள். அது அவளின் சீருடை போல. எப்போதும் அந்த வடிவம் தான். பார்த்தாலே... பரிதாபம் சூழும் தோற்றம் எப்படியோ அவளுக்கு வந்து விட்டிருக்கிறது. ஏழு வயது பிள்ளைக்கு அவ்வப்போது பன்னெண்டு வயது சிந்தனை ஓடும். பிள்ளைங்களோடு விளையாடிக்கொண்டே இருப்பாள்... சட்டென ஒதுங்கி மரத்தடியே அமர்ந்து வானம் பார்க்கத் தொடங்கி விடுவாள். கூட வெள்ளை நாய் முன்னங் கால்களை நீட்டி முகம் அசையாமல் அமர்ந்திருக்கும். அவளொரு சிறு சிற்பம். அது ஒரு நாய் சிற்பம்.

மற்ற பிள்ளைங்களை விட கொஞ்சம் ஒல்லி... கொஞ்சம் குள்ளம் என ஒரு சுணக்கம் அவளுடலில் எப்போதும் ஒட்டி இருக்கும். இப்போ பிஸ்கட்டை திங்கவா என்ன செய்ய.. அவள் திண்ணையில் அமர்ந்து விட்டாள். பக்கத்து வீட்டுப் பிள்ளை விளையாட அழைத்தும் போகவில்லை. அவள் சைக்கிள் ஓட்ட... உருளும் சைக்கிளைப் பிடித்துக் கொண்டே பூர்ணா வேகமாய் தட்டுத்தடுமாறி நடை போடுவதும் அதனூடாக சிரிப்பதும் இயல்பான விளையாட்டுதான். அடிக்கடி விழுந்து விடுவதும் நடக்கும். ஆனாலும் எழுந்து திசை மாறி ஓடி விழுகலயே என்று சமாளித்துக் கொள்வாள். சைக்கிள் வேண்டும் என்று பூர்ணாவும் கேட்டது இல்லை. அந்தப் பிள்ளையும் கொடுத்தது இல்லை. அவள் அழைத்து இம்முறை ம்ஹூம் என்று சொல்லி வெள்ளை நாயி என்று சொன்னதை அவள் கண்டுகொள்ளவே இல்லை. சைக்கிள் வந்து வந்து போய்க் கொண்டிருக்கிறது.

தாத்தாவின் கண் பார்வையிலேதான் இருப்பாள். ஆனால் தாத்தா எங்கு பார்க்கிறார் என்றுதான் பிடிபடாது. மாலை ஐந்து மணியானால் போதும்...அவர் சேக்காளிகள் இருவர் வந்து அவரோடு அமர்ந்து விடுவார்கள். ஒருநாளும் அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு யாரும் பார்த்திருக்க முடியாது. மரணித்த மனிதர்கள் போல அப்படியே அமர்ந்திருப்பார்கள். என்ன தான் யோசிப்பார்களோ. அல்லது யோசனையற்ற வீற்றிருப்பா. ஜடமாகிப் போன வாழ்வின் குறியீடுகள் இப்படித்தான் இருக்கும். புன்னகையும் அல்ல. ஒரு கோபமும் அல்ல. நிர்மூலமான முகத்தில் தாத்தா முனங்குவதுமில்லை. மூச்சிரைப்பதும் இல்லை. முதலில் அவருக்கு மூச்சிருக்கிறதா என்றே தெரியாது. முதுகு நடுங்குவதில் உணர்ந்து கொள்ளலாம் இன்னமும் தேகத்தில்தான் இருக்கிறார். காலத்தில் உறைந்திருக்கும் தோற்றத்தின் முன் பூர்ணாவின் எந்தக் கத்தலும் வேலைக்காகவில்லை.

வீதியிலுள்ள வீடுகள் பூர்ணாவை ஐயோ பாவம் என்றே பார்க்கும். பூர்ணாவின் பெரியம்மா வீடும் இதே வீதி தான். பெரியம்மாவுக்கு இவளை விட ரெண்டு வயது மூத்த பிள்ளை இருக்கிறாள். ஒன்றாகதான் விளையாடுவார்கள். ஒன்றாகத்தான் டியூசன் போவார்கள். ஒன்றாகவேதான் விடுமுறை நாளை கொண்டாடுவார்கள். ஆனால் பெரியப்பா வேலை முடிந்து வருகையில் அவள் ஓடி விடுவாள். பூர்ணா வீதி லைட் அடியே நிழல் போல நின்று விடுவாள். சட் சட்டென பாதியிலேயே நின்று விடும் வழியை பூர்ணாவின் காலடிகள் கண்டிருக்கின்றன. பெரியப்பா ஒருநாள்கூட அவளிடம் பேசியது இல்லை. எந்த ஒரு தின்பண்டமோ... விளையாட்டுப் பொருளோ... ஆடையோ... ஒன்றுமே வாங்கித் தந்தது இல்லை. விளையாடிக் கொண்டிருக்கும் தன் பிள்ளையை திடும்மென அழைத்துக் கொண்டு காரில் ஜம்மென்று சென்று விடுவார். கூட ஒரு புள்ள விளையாடுதே என்ற எந்த கவனமும் அவருக்கு இருக்காது. பூர்ணாவை சட்டென பேரிருள் சூழ்ந்து கொள்ளும். அவர்கள் போன வழியையே வெறிக்க பார்ப்பாள். ஒன்றும் விளங்காது. கைவிடப்பட்ட சிறு கடவுள் போல அவள் மீது படரும் தனிமையை அவளே உணர்வாளா என்றும் தெரியவில்லை.

வெள்ளை நாயே... எங்க போயி தொலைஞ்ச... கேட்டுக்கொண்டே வீட்டுக்குள் நினைவு பாய்ச்சலை நிகழ்த்தி நிகழ்த்தி பார்த்தாள். கட்டிலுக்கடியே அவ்வப்போது ஓடி வந்து ஒளிந்து கொள்ளும். குனிந்து பார்த்தாள். நாய் இல்லை. எங்க போயிருக்கும். எங்க போயி ஊர் சுத்தினாலும்... சாயந்திரம் அஞ்சுக்கு டான்னு வந்து நிக்குமே. பிஸ்கட்டை தின்று கொண்டே யோசித்தவளுக்கு அதற்கு மேல் யோசனை இல்லை.

தூங்கிக்கொண்டிருந்த அப்பா எழுந்து விட்டான். எழுந்த கையோடு காபி கலந்து கொடுத்து விட்டு அவளிடம் இருந்த பிஸ்கட்டில் ஒன்றை வாங்கி கடித்துக் கொண்டான். ஊரில் பாதிப்பேர் கரிச்சு கொட்டினாலும் மீதிப்பேர் கும்புடு போட்டுக்கொண்டு வாயிலும் கன்னத்திலும் போட்டு கொள்வார்கள். புதிதாக ஒரு சாமியை அறிமுகம் செய்து அதற்கு கர்த்தாவாக தன்னையே அறிவித்துக் கொண்டவன் பூர்ணாவின் அப்பா. எந்த வேலைக்கும் தகுதி இல்லன்னா... ஜீசஸ்க்கு ஊழியம் செய்ய சிலர் போவானுங்களே... அப்பிடி.. வேற நல்ல வழி யோசிக்காத பிராடு பசங்க... இந்த மாதிரி கோயில உருவாக்கி அறக்கட்டளங்கற பேர்ல காசள்ளுவானுங்க. அந்த லிஸ்ட்ல இப்ப புதுசா இவன் சேர்ந்திருக்கான். முட்டாப்பயலுங்க இருக்கற வரை இந்த மாதிரி மோடு முட்டிங்க உருவாகதான் செய்வாங்க..

எவன் சாமியானாலும் கூட்டம் கூடி விடுகிறது. ஒரே நிறத்தில் புடவைகள் வரிசை கட்டி வந்து விடுவது எப்படி என்றே புரிபடுவதில்லை. ஒரு படத்தில் கவுண்டமணி முதலில் சைக்கிளில் வந்து பிறகு பைக்.. பிறகு கார் என்று வருவாரே.. அப்படி இப்போது காரும் வாங்கி விட்டான். கண்ணாடியில் என்னவோ புதுசா ஒரு பேர் போட்டு பின்னால் சாமி சேர்த்துக் கொண்டு ஒரு கொடியையும் நட்டு வைத்துக் கொண்டான். அந்த வீட்டைக் கடக்கும் போதே வாசலில் கமகமக்கும்.. திருநீறு வாசமும் குங்குமத்து பாஷையும். பூஜைக்கு வருகிறவர்கள்... பேயோட்ட வருகிறவர்கள்... குறி கேட்டு வருகிறவர்கள் என மாலை மசங்கி விட்டால் மதம் கொண்ட யானையாகி விடும் அவன் மடம். அட குழந்தைக்கு உடம்பு சரியில்லை என்றால் டாக்டரிடம் போகாமல் இங்க வந்து இவனிடம் நீட்டுகிறார்களே என்னத்த சொல்ல. அவனும் விளக்குமாறு மாதிரி என்னவோ வெச்சு மூஞ்சிக்கு நேரா என்னத்தையோ முனங்கிகிட்டு சுத்துவான். என்ன பொழப்போ. பகல் முழுக்க தூங்கி விட்டு மாலை வேளையில்தான் தொழிலுக்கு வருவார் சாமியார் தொழிலதிபர். தொப்பை வெச்சுகிட்டு எந்த ஆன்மீகவாதி இருக்க முடியும். கொழுத்து போனவன் எப்பிடி சாமிக்கு சேவை செய்ய முடியும்.

விஷயத்தைக் கேட்டு விட்டு... உனக்கு ரோஸ் கலர்ல நாய் வாங்கி தரேன்... இதை புடிச்சிட்டு போய்ட்டாங்க என்று வெகு இயல்பாக சொன்னான்.

சொல்லிக்கொண்டே குளிக்க சென்று விட்டான். கையில் இருந்த பிஸ்கட் பாக்கெட் பறந்து விட்டது. ஓடி சென்று சாத்தப்பட்ட குளியலறை கதவை தட்டி உதைத்தாள். தட்டிக்கொண்டே உதைத்தாள். தாறுமாறாக அடித்தாள். அடிக்க அடிக்கவே வெள்ள நாயி வெள்ள நாயி என்று அழுகை வந்து விட்டது. ஏற்கனவே களைந்தது போலவேதான் இருக்கும் தலை. சிலுப்பிய சிலுப்பில்.... குதித்த குதியில் தலை நன்றாகவே களைந்து விட்டது. தலை வரைய வரைய மழை வந்து களைத்து போட்டது போல ஆகி விட்டது அவள் முகம்.

எங்க புடிச்சிட்டு போனாங்க.. யாரு புடிச்சிட்டு போனது.. எப்ப புடிச்சுட்டு போனாங்க.. ஏன் புடிச்சுட்டு போனாங்க... அங்கும் இங்கும் உடம்பை அசைத்து அசைத்து கத்தியது... வீதிக்கே கேட்டது. உன் சாமிகிட்ட சொல்லி என் வெள்ள நாய திருப்பி கொண்டு வர செய்ப்பா..... அப்பா என்று கத்தி கூப்பாடு போட்டாள். காணாம போன உங்கம்மாவையே கண்டு பிடிக்க முடியல. இதுல நாய வேறயா. உள்ளிருந்து சொன்னானோ. என்னவோ கேட்கிறது. ஓடிச் சென்று கிண்ணத்திலிருந்து குத்தாக திர்நீர அள்ளி சாமி படத்தின் முன் நின்று பொத்தாம் பொதுவாக விசிறி அடித்தாள். எல்லா பக்கமும் பரவி விரிய திருநீறு... சாமி மூஞ்சியில் கொஞ்சமும் அவள் மூஞ்சியில் கொஞ்சமும் அப்பிக் கொண்டது. அந்த அறையில் சில நொடி புகை.. வெடித்து சிதறியது.

என் வெள்ள நாய கொண்டு வா என் வெள்ள நாய கொண்டு வா.. என்று கிட்டத்தட்ட வெறி பிடித்தவள் போல.. வீட்டுக்குள் அங்கும் இங்கும் நடந்தாள். அறையில் திரும்பும் பக்கமெல்லாம் சாமிகள். வெள்ளை நாயைத் தான் காணோம்.

வெளியே திண்ணையில் அமர்ந்திருந்த தாத்தாவின் காதுகளில் கேட்கிறதா... தெரியவில்லை.

இது யாரு நாய்... உங்களுதா என்று கார்பரேஷன் ஆட்கள் கேட்கையில்.. சூனியத்தை பார்த்துக் கொண்டே கையை மட்டும் ஆட்டி தெரியாது என்பதாக சொன்னது தாத்தா தான். ஏன் அப்படி சொன்னார்.. கேட்டால் பதில் கிடைக்குமா என்ன.

உங்க நாய் இல்லையா.. தெரு நாயா.. எல்லா பக்கமும் இந்த தெருநாய்ங்க தொல்லை தாங்கல..

வெள்ளை நாய் குண்டு மழைக்கு ஒளிந்து கொள்ளும் பதுங்கு குழி கண்களை கொண்டிருந்தது. டிட்ச் ஒட்டிய ஸ்லேபின் அடியே ஒரு பூனையைப் போல பதுங்கிக் கொண்டது. அதன் கண்கள் கெஞ்சின. அதன் கால்கள் மடங்கின. அதன் வால் வளைந்து மடங்கி கிட்டத்தட்ட

சுருண்டு கொண்டது. உடலைத் தாழ்த்தி நான் மறைந்து விட்டேன் என்பது போல ஒளிந்திருந்தது. ஆனாலும் மாட்டிக் கொண்டது. வண்டியில் ஏற்றுகையில்.. வாயோடு சேர்த்து தலையோடு கவிழ்ந்த வலைக்குள் வெள்ளை நாய் கரையொதுங்கிய மீனாக துள்ளியது. வவ் வவ்வில் பூர்ணா பூர்ணா என்று கேட்க நாய் மனம் புரிய வேண்டும். தன் மனதில் இருந்தே வெளியேறிருந்த தாத்தாவுக்கு எந்த மனம் புரியும்.

ஒரு வார்த்தை எங்களுதுதான்னு சொல்லி இருக்கலாம்லப்பா... என்ற சாமியாடி மகனுக்கும் அதே பதில் தான். நேர்கொண்ட பார்வையே அவரிடம் கிடையாது. நீண்ட நெடு வடுக்களே கண்களில் மின்னின. இப்போதும் கையைத் தெரியாது என்பதாகவே ஆட்டினார்.

உனக்கு ஒன்னுமே தெரியாது.. - சரமாரியாக மேலே விழுந்து அடித்த பேத்தியை நகர்த்தவும் இல்லை. அவர் நகரவும் இல்லை. தேகத்தில் பாறை முளைத்த வயதில் மூளைக்குள் ஈரமின்றி போகுமா. இதயத்தில் ரத்தம் குறைந்த வயதில் உயிருக்குள் ஒன்றுமில்லை என்றாகுமா.

ஒன்றும் புரியாத பூர்ணாவின் அழுகை... அக்கம் பக்கத்து வீடுகளுக்கு கேட்டு விஷயம் வெளிப்பட்டு விட்டது.

தங்கமீனா வீட்டுக்கு வாடைக்கு புதுசா குடி வந்தவங்கதான் கார்ப்பரேஷன்ல கம்பளைண்ட் பண்ணிருக்காங்க. அப்பிடி இப்படி கசிந்து விட்டது. பூர்ணா காதில் பூதக்கண்ணாடி கொண்டு வார்த்தைகள் சுழன்றன.

எதுக்கு கம்பளைண்ட் பண்ணாங்க. அழுகையினூடாக மூக்குறிந்து கொண்டாள். வார்த்தைகள் ஒழுகி சிதறின. அவள் முகம் அழுதழுது வீங்கியே விட்டது. கண்களில் கலக்கம் குறையவில்லை. உடல் மொழியில் தவிப்பின் பதற்றம்... கோபத்துக்கும் குமுறலுக்குமிடையே கொந்தளித்துக் கொண்டிருந்தது. வா வந்து கேளு வந்து கேளுன்னு பண்ணிய வம்பில் சாமியார்க்கு ஐயோ என்றிருந்தாலும் சரி வா என்று அழைத்துக் கொண்டு தங்கமீனா வாடகை வீட்டுக்கு கிளம்பினான்.

தட்டுவதற்கு முன்பே கதவு திறந்து கொண்டது.

அப்புறம் எங்க ஒய்ப்ம் புள்ளையும் போம்போது பின்னாலேயே விரட்டிருக்குங்க. பாக்கறீங்கல்ல. இப்ப எல்லா பக்கமும் தெரு நாய் கடிச்சு ரேபிஸ் வந்து... கடுப்பாகிடுச்சுங்க. அதான் கம்பளைண்ட் பண்ணிட்டேன்.

கம்பளைண்ட் பண்ணின உடனே வந்து வேலையை முடிச்சிருக்காங்க என்ன அதிசயம் இது...- சாமியார் நெற்றியில் விபூதி மணக்க பார்த்தான்.

அதே நேரம் அவன் மனைவி உள்ளே இருந்து நொண்டி நொண்டி வெளியே வர... அப்போதுதான் தெரிய வந்தது. அந்தப் பெண்ணுக்கு ஒரு கால் இல்லை. செயற்கை கால் பொருத்தி இருக்கிறது. முக்கால் கால் நைட்டிக்கும் அதுக்கும் நன்றாகவே தெரிகிறது.

பார்க்கிறவர்களுக்கு உடனடியாக வரும் திகைப்பும் பரிதாபமும் சாமியாடிக்கும் வந்தது. அதைப் புரிந்து கொண்ட கணவன்.... அவனுக்கும் இது பழக்கம்தான். இன்னமும் சொல்லப் போனால் இதை சொல்வதில் அவனையறியாமல் ஒரு சுய கழிவிரக்கத்தை அவன் ஏற்படுத்திக் கொள்கிறான். மற்றவரின் ஐயோ பாவம் அவனுக்கு தேவையாக இருக்கிறது. வாடகைக்கு வீடு கூட உடனே கிடைத்ததற்கு இதுவும் ஒரு காரணம். ஓனர் தங்கமீனா மனசில் லேஸில் இடம் பிடிக்க முடியுமா.

ஓரமா வண்டிய நிறுத்தி ஒரு போன் பேசினேன்ங்க.. பின்னால வந்த லாரி அடிச்சு தூக்கிட்டான். நான் தெறிச்சு விழுந்துட்டேன். கைல அடி. பிஞ்சு தொங்கிருச்சு.

சொல்லும் போதே கையைக் காட்டினான்.

தொடைலருந்து சதை எடுத்து வெச்சு தெச்சுதான் கைய காப்பாத்தினாங்க. அவளுக்கு இடது கால் நசுங்கிருச்சு. கசகசன்னு ஒண்ணுமில்லாம போய்டுச்சு. நான் தெறிச்சேன்ல அவ டயர்ல மாட்டிகிட்டான்.

சொல்லும் போதே அவன் கண்களில் அந்த நேர பதட்டத்தைக் காண முடிந்தது. மூச்சு வாங்கியது.

நல்லவேளை புள்ளைய அன்னைக்கு கூட்டிட்டு போகல.. அவன் வெறித்து பார்த்தான். அந்தப் பெண் கண்களில் இருந்து நீர் கசிந்தது.

அந்தக் காட்சி ரத்த வெள்ளத்தில் அவள் கண் முன்னால் தெறித்திருக்க வேண்டும். வெறித்து பார்த்துக் கொண்டே இருந்தான்.

சில லாரிங்க ரத்த காட்டேரிங்க. கவனமா இல்லனா ரத்தத்த உறிஞ்சு எடுத்துரும். அப்பிடித்தான்... அந்த சாயந்திர நேரம் சாவுக்கு வழி காட்டுச்சு. வண்டில போக போக போன் பேசிட்டே போறவனுக்கெல்லாம் ஒன்னும் ஆகறதுல்ல. நாங்க ஓரமா நின்னுதான் பேசினோம். மின்னல் அடிச்ச மாதிரி ஒரு வேகம். என்ன நடந்துச்சுன்னே தெரியல. தூக்கி வீசி... எங்க கிடக்கறோம்னு தெரில.

புகாரன் கண்களில் இப்போதும் அந்த பயம் தெரிந்தது.

அதுலதான் இவளுக்கு... அவன் பார்வை மனைவியின் கால் மீது படர்ந்தது. அவன் கண்கள் கலங்கி விட்டன. மனைவியின் முகத்தில் வாழ்நாள் வடு. காலில் வாழ்ந்தாக வேண்டிய வடு.

செத்துட்டோம்னு தான் நினைச்சோம்.. கடவுள் புண்ணியத்துல பொழைச்சிட்டோம்.

சின்ன இடைவெளி விட்டான். பூர்ணா அவர்களையே பார்த்தாள். அவளுக்கு அழுகை நின்று விட்டது. பயப்படுத்தும் கதையைக் கேட்பது போன்ற அதிர்வில் அப்படியே பார்த்தபடியே நின்றாள். பார்த்துக் கொண்டிருப்பதன் தீவிரம் அவளை சிமிட்ட விடாமல் ஆக்கியிருந்தது. காற்றை ஏந்துவது போல... முகம் வெளியைத் தாங்கி இருந்தது.

அதான் அதுலருந்து ரெம்ப கவனமா இருக்கறோம் சார். உங்க நாய் தொரத்தவும் இவுங்க பயந்து ஒரு காலை இழுத்து இழுத்து ஓடி வந்தது தாங்கல. ரெண்டு கால் இருக்கறவங்களே ஓடி தப்பிக்க முடியாத நாய்ங்க மத்தில.. ஒத்த கால்ல எப்பிடி சார்.. பால் வாங்க இந்த வழியாதான் போகணும். கடைக்கு எது ஒண்ணுக்கும் இந்த வழிதான இருக்கு. நாய் போகும் போதும் வரும் போதும் விரட்டி விரட்டி மிரட்டினா என்ன பண்ண. அதான் புகார் குடுத்துட்டேன்.

அந்த நேரம் போன் அடிக்க.... சாமியாடி பொதுவாக பார்த்து ஒரு நிமிஷம் என்றவன் போனில் பேசிக்கொண்டே சற்று தள்ளி போய் வாசலில் இருந்து வீதிக்கே சென்று விட்டான்.

என்ன இவன்... ஒரு ரியேக்சனும் இல்ல என்று கணவனும் மனைவியும் நினைக்க நினைக்கவே... இல்ல.. எங்க வெள்ள நாய் அப்பிடி தொரத்தாது... அது யாராவது இந்த வழியா வந்தா.. பின்னாடியே போயி வறுக்கி வாங்கி தர சொல்லிதான் கேட்கும். அதுக்குதான் உங்க பின்னாடி வந்திருக்கும்.. அது தொரத்தவெல்லாம் செய்யாது.

பூர்ணா சொல்லும் காட்சி அப்படியே அவர்கள் கண்களில் அலையடித்தது.

யார் இந்த வழியாக சென்றாலும் பின்னால் சென்று பாவமாய் அவர்களை கண்ணுக்கு கண் பார்த்தபடியே அமர்ந்து கழுத்தை ஒரு பக்கமாக தூக்கி பார்க்கும். இப்போது கூட அந்தக் காட்சி பூர்ணாவின் மனக்கண்ணில் காற்றில் தன்னை செதுக்கிக் கொண்டிருந்தது.

புகாரனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை... அவன் மனைவி அனிச்சையாக செயற்கை காலை தொட்டு பார்த்தாள். ஆமா அன்னைக்கு அது தொரத்தின மாதிரியா இருந்துச்சு. பின்னால வந்த மாதிரிதானே இருந்துச்சு. நாமதான் அவசரப்பட்டுட்டோமா.. - ஒரு கணம் அவனும் அந்த லாரிக்காரானாய் மாறியது போல இருந்தது அவனுக்கு.

என் வெள்ள நாய எங்க கொண்டு போயிருப்பாங்க. கண்டுபுடிச்சி திருப்பிக் கூட்டிட்டு வாங்க... என்றவளை கூர்ந்து பார்த்த புகாரன்.. அது வெள்ள நாய் இல்லையே கருப்பு ஆச்சே என்று முனகினான். என்ன இந்த புள்ள உளறது என்றபடியே கூர்ந்து பார்த்தான். கழுத்தை காற்றினில் இறக்கி முகத்தை கொஞ்சம் தூக்கியது போல செய்து எங்கெங்கோ பார்த்தபடி.... அந்த பிள்ளையே கொஞ்சம் வித்தியாசமாக இருந்தது.

இன்னும் கூர்ந்து கவனித்தான். பூர்ணாவுக்கு பார்வை இல்லை. அடடா கண்ணில்லாத புள்ளையா இது...

ஐய்யோ என்றிருந்தது.

அத்தனை பேச்சும் சட்டென காணாமல் போய் சுவரோரம் சரிந்து நின்று அவளையே பார்த்த புகாரனை... அவள் மனைவி செய்வதறியாது பார்த்தாள். வறுக்கிக்கு மனிதனை நம்பும் ஒரு கருப்பு நாய் அவள் பின்னால் கொஞ்சம் வேகமாய் நடந்து வந்தது இப்போது நன்றாக நினைவில் ஆடியது. தாம்தாம் பயந்து காலை இழுத்து இழுத்து ஓடியதும் கண்ணில் தெரிந்தது. திகைத்து தவித்தாள். எப்போதும் எல்லாருக்கும் தெரிய வேண்டும் என்று வேண்டுமென்றே அப்பிடி இப்படி காட்டும் செயற்கை காலை நைட்டிக்குள் உள்ளிழுத்துக் கொண்டாள். பின்னால் வறுக்கிக்காக வந்த கருப்பு நாய் வெள்ளை நிறமாய் மாறுவதை மனம் உணர்ந்தது.

அதே நிறம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த புகாரன் மகள்... பூர்ணா வயதுதான் இருக்கும். என்கிட்டே பூனை இருக்கு. உனக்கு வேணுமா என்று கேட்டபடியே வந்து அவள் அருகே நிற்க அப்படியே அனிச்சையாய் கையைப் பற்ற...

சின்ன இடைவெளி விட்ட பூர்ணா... ஒரு நிதானத்தில்... வெள்ள பூனையா என்று கேட்டாள். அப்போது அவள் நெற்றி உயர்ந்து ஆச்சரிய கோடுகள் தோன்றின.

வெள்ளைக்கும் கருப்புக்கும் என்ன வித்தியாசம். பார்வையற்றவர்க்கு வெள்ளை என்ன கருப்பு என்ன. எல்லாம் ஒன்றுதான. பூனைக்கும் நாய்க்கும்தான் என்ன வித்தியாசம். எல்லாம் உயிர்தான. கருப்பை வெள்ளை என்று சொல்லி பழகியவளுக்கு அது வெள்ளை என்றே இருக்கட்டுமே.

பூனையைத் தொட்டு தொட்டு பார்த்த பூர்ணாவின் முகத்தில் பார்வைக்கு ஏங்கும் அசைவு. அதேநேரம் வெள்ளை நாயி வெள்ளை நாயி என்ற முனங்கல் தொடர்ந்து கொண்டிருந்தது.



இரா.வெங்கடேஸ் குமார்

# கவியின் மொழிகள்


ஆழத்தில் ஆழ்ந்திருக்கும் ஆழியின் அமைதியில் துளி அள்ளி
ஆடம்பரம் இல்லாத தென்றலில் ஓவியம் ஒன்றை தீட்டி
அமைதியின் துளியில் வண்ணம் எடுத்து ஆபரணமாய் பூட்டி
அதற்கும் உயிர் ஊட்டும் அழகிய நினைவுகள் கவியின் மொழிகள்

ஆசை என்னும் எண்ணம் மனதை முழுதாய் தொட்டதும்
அன்பால் ஆசைக்கு உரு கொடுத்து நினைவில் சேர்க்கும்
அகரம் முதல் சிகரம் வரை தேடி தேடி வார்த்தை கோர்க்கும்
அழகான தமிழில் கோர்த்த வார்த்தைக்கு கவி மொழி உயிர் சேர்க்கும்

அரை நொடியில் கற்பனை எட்டும் நினைவெனும் நிகழ்வுக்கும்
ஆசை தீர பார்த்து, கேட்டு, உணரும் மெய்யின் ஈர்ப்புக்கும்
இயல்பாய் மனதில் ஏற்படும் மாய உணர்வான காதலுக்கும்
ஈர்ப்புகள் தரும் சிலிர்ப்புக்கும் கவி மொழிகள் சொல் கொடுக்கும்

அடிமர விழுதையும் ஆகாயம் மேலே அறியாத போதும்
ஆசை அதிகம் சேர்த்து மனதில் நினைவு எழுப்பி
இயற்கை போல் செயற்கை காட்டும் நினைவை தேக்கி
கரை சேர்த்திட உதவும் கலையே கவியின் மொழிகள்

ஆடம்பர மிக்க அணிகலன் தேவை எதுவும் இன்றி
விழி காணாத ஆசை, அன்பை மட்டும் அதிகமாய் கூறி
வியப்பை காட்டும் மாய உலகம் நினைவில் எழும்
உலகில் பேசும் அழகிய மொழியாய் கவிகள் வாழும்



# நாமெல்லாம் ஒண்ணு தானடா!

**நௌஷாத் கான்.லி, கும்பகோணம்**

**வி**நாயகருக்கு படைத்த கொழுக்கட்டை ஜெபித்த,துவா செய்த வீடுகளின் மனங்களில் மதமாய் மாறி உண்ணாமலிருக்கும் போது வறண்டு போன தண்ணீர் இல்லாத குளத்தில் என்றோ உதிர்ந்த மயிரும் மலரத் தான் செய்யும்

இங்கே மதம் நம்மகிட்ட இருந்து போகாத வரை இங்கே எதுவும் மாறாது இப்ப நாம்ம அனுபவிச்சிக்கிட்டு இருக்கிற அனைத்து துன்பங்களுக்கும் நாம தான் காரணம்.

சாதி,மதம் பார்த்து கண்டவனை உட்கார வச்சிட்டு குத்துதே,குடையுதேன்னு சொன்னா என்ன அர்த்தம் ?

இன்னும் எத்தனை கொரோனா வந்து சோத்துக்கு நம்மை கையேந்த வைத்தாலும் இந்த மதம்,சாதியை தூக்கிட்டு திரியிற வரைக்கும் நம்ம வாழ்க்கை மாறவே மாறாது.

சி.ஏ.ஏ வந்தா துலுக்கனுக்கு தானே பிரச்சனை,370 ஐ நீக்குனா காஷ்மீரிக்கு தானே பிரச்சனை,நீட் வந்தா ஸ்டூடன்ட்க்கு தானே பிரச்சனை,ஓ.பி.சி.ரிசர்வ்வேஷன் நீங்குனா

ஆண்ட பரம்பரைக்கு தானே பிரச்சனை,பணமதிப்பிழப்பு,ஜி.எஸ்.டி வந்தா வியாபாரிகளுக்கு தானே பிரச்சனை.EIA வந்தா சுற்றுப்புற சூழ்நிலைக்கும் சூழ்நிலையாளர்களுக்கும் தானே பிரச்சனை,இந்தி மொழி திணிப்பு வெறும் மொழி பிரச்சனை தானே இப்படி எல்லா பிரச்சனைக்கும் ஒதுங்கிக்கிட்டே இருந்தா ஒருநாள் நமக்கே பிரச்சனை வரும்போது ஒரு பய நம்மை காக்க வர மாட்டான்.

மதம்,சாதின்னு கோடு போட்டு நாம்ம வாழுற வரைக்கும் நம்ம வாழ்க்கைக்கு கேடுதான்.

வாப்பா,வாப்பா

சொல்லுடா

அருண் வீட்ல கொடுத்த கொழுக்கட்டைய எதுக்கு தூக்கி போட்டீங்க ?

விநாயகருக்கு படைச்சதுடா அதான் நீங்களெல்லாம் சாப்பிட கூடாதுன்னு தூக்கி போட்டுட்டேன்

இன்னும் எந்த காலத்துல இருக்கீங்க வாப்பா அவனவன் கண்ட,கண்ட நோய் வந்து சின்ன வயசுலேயே சாகுறான் இப்ப வந்து அது கூடாது,இது கூடாதுன்னு சொல்லிக்கிட்டு திரியுறீங்க

ஒரு காலத்துல நம்ம சுன்னத்துல் ஜமாத் பள்ளிவாசல்ல யாருக்காவது உடம்பு சுகமில்லாம போச்சுன்னா ஓதி கொடுப்பாங்க ஓதி கொடுத்த தண்ணிய குடிச்சா உடம்பு சரியாகும்ன்னு எல்லோருடைய நம்பிக்கை.மதம்,சாதி பார்க்காம எல்லா மக்களும் அஜிரத்துக்கிட்ட ஓதி வாங்குன தண்ணிய வாங்கிக்கிட்டு போவாங்க.

இப்படி ஒற்றுமையா நல்லா இருந்த ஊருப்பா எப்ப மனிதர்களை பிரித்தாளும் உங்க ஜமாத் இங்கேயெல்லாம் வந்துச்சோ ஊருக்கு நாலு பள்ளிவாசல்,ரெண்டு,மூணு ஜமாத்துன்னு நமக்குள்ளேயே ஒற்றுமையில்லாம ஆக்கிடீங்களே வாப்பா.

நீங்க மட்டுமல்ல நம்ம எதிர்த்த வீட்டு எஸ்தர் அக்காவும் மாறி போய்ட்டாங்க வாப்பா ஒண்ணா சர்ச்சுக்கு எல்லாம் போய் இருக்கிறேன்,திருப்பலியில எல்லாம் கலந்துக்கிட்டு இருக்கேன்.

போன மாசம் பக்ரீத்துக்கு ஆட்டுக்கறி கொடுத்தேன் நான் பார்க்கலைன்னு நினைச்சுக்கிட்டு குப்பை தொட்டியில கறிய தூக்கி போட்டுட்டாங்க வாப்பா.

நல்லா இருந்த அக்கா நீங்க எப்படி அந்த ஜமாத் வந்ததுக்கு அப்புறம் பிரிவினை பார்க்க தொடங்கிடீங்களோ,எஸ்தர் அக்காவும் அந்த பெ.கொ.குரூப்பு வந்ததுக்கு அப்புறம் மாறிட்டாங்க வாப்பா.

உங்களுக்கு ஆக்சிடண்ட் ஆனப்ப நிறைய பிளட் லாஸ் ஆயிடிச்சு அருண் தான் முதல் ஆளா வந்து உங்களுக்கு இரத்தம் கொடுத்தான் இப்ப அங்கேயும் நிறைய தப்பான கட்சிகள் எல்லாம் வந்து இருக்கு வாப்பா உங்களை போல என் அருணும் மதவெறி பிடிச்சு போயிடுவானோன்னு பயமா இருக்கு வாப்பான்னு இந்த சமூகத்தின் அவலம் கண்டு கதறி அழுதான் முகம்மது அலி

டே முகம்மது அழுவாதடா வாப்பா உனக்காக தானே வாழுறேன்னு சொல்லிட்டு தூக்கியெறிந்த மண் ஒட்டிய கொழுக்கட்டையை கழுவி சாப்பிட்டார்.

அன்று மதியம்

இன்னைக்கு நாலு மணிக்கு விநாயகர் ஊர்வலம் இருக்கு அதை அந்த பொண்ணுங்க படிக்கிற மதரஸா வழியா தான் கொண்டு போறோம் அந்த மதரஸாவை கிராஸ் பண்ணும் போது நம்ம கட்சியை சார்ந்தவங்க வேணும்ன்னே பிரச்சனை பண்ணுவாங்க முடிஞ்சா அந்த மதரஸாவில படிக்கிற ஒண்ணு,ரெண்டு பொண்ணுங்களை மானபங்கம் கூட படுத்துவோம்

அப்ப தான் கோபத்துல அவனுங்க பொங்குவானுங்க,நம்ம ஆளுங்களும் பதிலுக்கு பொங்குவானுங்க ரெண்டு பேரும் மோதி நிறைய பிரச்சனை வரும் இந்த பிரச்சனையை வச்சு நாம இந்த தேர்தல்ல நிறைய ஓட்டு வாங்கிடலாம். இந்த ஏரியாவில நீ தான் கொஞ்சம் பெரிய தல அதான் நீ கொஞ்சம் நமக்கு

சப்போர்ட்டா இருக்கணும்ம்னு அந்த ஏரியா கவுன்சிலர் அருணிடம் சொல்லவும் அவன் முகம் மாறியது.

யோவ் என்னை பத்தி நீ என்ன நினைச்ச ?

உன்னை மாதிரி காசுக்கு பீ திங்குற ஈன பய-ன்னு நினைச்சியா ??

ஏதோ உன் கட்சியில இருந்தா நம்ம சமூகத்துல உள்ள கஷ்டப்படுற புள்ளைங்களுக்கு ஏதோ செய்வீங்கன்னு நினைச்சு தான் சேர்ந்தேன்.உயிரே போனாலும் இதுமாதிரியான ஈன செயலை செய்ய மாட்டேன்.

மதம் பார்க்காம மாமன் -மச்சானா,அண்ணன் -தம்பியா பழகிகிட்டு வர்றோம் எங்க ஏரியா மதரஸா பொண்ணுங்க எனக்கு சகோதரிகளடா.

எங்க பொண்ணுங்ககிட்ட பிரச்சனை பண்ணனும்ம்னு நினைக்குறவன் வீட்ல ஒரு தலை மிஞ்சாது.

ஒழுங்கு மரியாதையா உண்மையான பக்தியோட ஊர்வலம் பண்ண பாருன்னு மிரட்டிட்டு வந்தான் அருண்.

# தவம்

## திக்குவல்லை கமால்

'படித்து எதிர்காலத்தில் என்னவாக வரவிருப்பம் ?'- என்று கேட்டால், பெரும்பாலான பிள்ளைகள் 'டாக்டர்' என்றுதான் சொல்வார்கள்.எல்லாப் பெற்றாரும் அந்தக் கனவையே மனதுக்குள் மறைத்து வைத்திருப்பார்கள். இது ஒரு மூடக்கொள்ளை என்று சொல்வாரும் உண்டு. நிச்சயமாக இதிலும் உண்மை இல்லாமலில்லை.ஏனென்றால் அறிவியல் வளர்ச்சி பெரும்தொகையான நவீன துறைகளை வளர்த்துவிட்டுள்ளது.

எங்கள் பெற்றார்கள் அந்நாட்களில் இப்படியொரு கனவைக் கண்டிருக்க மாட்டார்கள்.டாக்டர் படிப்பு வசதிவாய்ப் உள்ளவர்களுக்கு மாத்திரமே உரியது என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும்.அவர்களிடம் எங்கே வசதி ?படித்துச் சித்தியடைந்து ஓர் அரசாங்க உத்தியோகத்திற்குப் போனால் போதும் என்பதுதான் அவர்களது இலக்கு.பிள்ளைகள் ஒஎல் பரீட்சையில் பாஸ்பண்ணுவதுதான் அவர்கள் எதிர்பார்க்கும் பெரிய படிப்பு.

என்ன இருந்தாலும் நானும் ஒரு வைத்தியப் பரம்பரையில் வந்தவன் என்ற சின்னப் பெருமை எனக்கில்லாமலில்லை. எங்களது ஊரில் மம்மனிப் பரியாரி என்றால் தெரியாதவர்கள் இல்லாத ஒரு காலம் இருந்துள்ளதாம்.அவரது மகனும் அப்பணியைத் தொடர்ந்து செய்துள்ளார்.அவருக்குப் பின் முற்றுப்புள்ளி விழுந்துள்ளது.பரியாரியாரின் மகளின் மகளின் மகன்தான் நான்.

அந்நாட்களில் ஏதாவது நோய்கள் என்றவுடன் கைமருந்து, நாட்டு வைத்தியம், ஆயுள்வேதம் போன்வற்றில்தான் மக்கள் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்.

யாராவது ஏதாவது வருத்தம் சொன்னால், அதற்கு இன்னதுதான் செய்யவேண்டுமென வீட்டிலுள்ள பாட்டன், பாட்டிமாருக்குத் தெரியும்.

தலையிடி என்றால் தேங்காய் எண்ணெய்யைச் சூடாக்கி இரண்டுமூன்று தடவை தலையில் தேய்ப்பார்கள்.காய்ச்சல், தடிமல் என்றால் கொத்தமல்லி அவித்துத் தருவார்கள். வயிற்றுவலி என்றதும் வெள்ளைப் பூண்டி அவித்து சாப்பிடச் சொல்லி அவித்த நீரையும் பருகத் தருவார்கள்.இடுப்பு, கழுத்துப் பகுதிகளில் வலியென்றால் வாதெண்ணெய் தேய்ப்பார்கள்.கைகால் வீக்கமென்றால் சிவப்புச் சந்தனத்தை அரைத்துத் தடவுவார்கள்.விழுந்து தகர்வுகள ஏற்பட்டால் மஞ்சலள் கொடி அவித்து குடிக்கச் செய்வார்கள்.கட்டு ஏற்பட்டால் பூவரசம் பட்டையை அரைத்துப் பூசுவார்கள்.

கைமருந்துகள் பலனளிக்காத சந்தர்ப்பங்களில் உள்ளூர் பரிகாரிகளிடமோ சிங்கள வெதமஹத்தயாமாரிடமோ செல்லத்தான் வேண்டிவரும்.அவர்கள் வாதம், பித்தம், சூடு... இப்படியொரு காரணத்தால் இந்த வியாதி ஏற்பட்டுள்ளதாகச் சொல்வார்கள்.நினைத்ததை எல்லாம் சாப்பிட முடியாது. பத்தியம் காக்கவேண்டும்.சுடுதண்ணீர் பாவனை முக்கியம். நோய் சுகமானதும் முதலில் வெந்நீரில்தான் குளிக்கவேண்டும். அத்தோடு விடுவார்களா?நீளமானதொரு பட்டியலும் கிடைக்கும். அதை மூலிகை மருந்துக் கடையில் கொடுத்தால் அதில் உள்ளபடி நிறுத்துத் தருவார்கள். அதனை நீர்விட்டு வற்றவைத்து காலை- மாலை நான்கு நாட்கள்ஒவ்வொரு கோப்பை குடிக்கவேண்டும்.மேலும் எண்ணெய் -தூள் வகைகளும் தருவார்கள்.

மேற்சொன்ன கைமருந்துகளோ, பரிகாரி மருந்துகளோ பலன்தராத பட்சத்தில்தான் டாக்டர்மார்களை நாடுவார்கள். அவர்கள் பரிகாரிமார்களைப்போல் நாடி பிடித்துப் பார்க்கமாட்டார்கள்; குழல் வைத்தே பார்ப்பர்.

மூன்றாம் கட்டத்திலும் நோய்நொடி குணமாகாவிட்டால் அதற்குமேல் சொல்லத் தேவையில்லை.பேய்-பிசாசு... பில்லி-சூனியம்...ஜின் ஷைத்தான் என்று ஆட்டம்போட ஆரம்பித்துவிடுவார்கள்.

படிப்படியாக ஆங்கில மருத்துவத்தின் முன்னேற்றமும் பரவலும் எல்லா நோய்களுக்கும் இலகு வழியைக் காட்டிவிட்டு.மனிதனும் அதற்குப் பழகிவிட்டான்.

கொரோனா வந்ததும் வந்தது, மீண்டும் பழைய ஃபைல்களை கொஞ்சம் திறந்து பார்க்க நேர்ந்துவிட்டது. இருந்தும் எத்தனை காலத்திற்கு? கொரோனாப் பயம் போகும்வரைதான்.

இப்போது உணவு முறைகள் காரணமாக இருபது வீதமானவர்களுக்கு மலச்சிக்கல் இருக்கிறதாம்.இது மூலவியாதியின்அறிகுறியாகவும் இருக்கலாமாம்.இதற்கு ஃபாமஸி மருந்துகளைவிட கொசுவிலைக் கிழங்கு நல்ல பயன் தருமென்று அனுபவசாலிகள் தெரிவிக்கின்றனர்.இலை இலகுவாகக் கிடைக்கும்.ஆனால் கிழங்கு கிடைப்பது அருமை.அபூர்வமாகக் கிடைத்தாலும்கூட உரியமுறையில் சமைத்துச் சாப்பிடுவது பெரும்பாடுதான்.

இவ்வாறானதொரு பகைப்புலம்தான் 'தவம்' என்ற கதையை எழுதவைத்தது.

*நன்றி:' வரண்டுபோன மேகங்கள்' (1999) சிறுகதைத் தொகுதி*

# சிவசங்கரி குருநாதன் அவர்களின் 'வசந்தம்' –சிறுகதை ஒரு விமர்சனப்பார்வை

திரு.சமயக்கண்ணு, மதுரை

**கா**லை நேரம் கதிரவன் அற்புதமாய் எழுந்துகாட்சி தருகிறான். விடியல் கண்டு மகிழ்ச்சி பெற்ற பறவை இனங்கள் தத்தம் குரலான இன்னிசையில் ஏதேதோ பாடி மகிழ்ந்து பறக்கிறது. அதில் மானிடர் காதுகளில் என்றும் கொம்புத் தேனைப் பாய்ச்சுவது போன்ற இனிய குரலிசையைக் சலிக்காமல் கேட்க வைக்கும் குயில் பறவையும் ஒன்று என்று ஆசிரியர் அந்தக் காலைப் பொழுதை கலக்களுடன் வர்ணிக்கிறார்...

மாதவன் காலைக் குளியல் போட்டதும்.... வழக்கம் போல்...வீட்டின் மொட்டை மாடியில் நின்று கொண்டு....சூரியனை வணங்குகிறான். அப்போது அவன் மனைவி வானதி கீழே நின்று கொண்டு....'என்னங்க' என்று அழைக்கும் குரல் கேட்டதால் அவனது தியானம் களைந்து கூப்பிட்ட குரல் வந்த பக்கம் திரும்புகிறான். கீழே காப்பி டம்ளருடன் நிற்கும் வானதியைப் பார்த்து....

'இதற்கு என்னம்மா அவசரம்? நான் வந்து எடுத்துக்கொள்ள மாட்டேனா? என்று அவளை செல்லமாகக் கடிந்ததுடன்...காபி டம்ளரை வாங்கிக்கொண்டு...

"போமா போய் ஈரத் தலையைத் துவட்டு" என்று அன்பில் அவளை நனைத்தான்..!

இந்த இடத்தில் ஆசிரியர் இப்படியும் அன்புமழை பொழிந்திடும் ஒரு சில இனிய கணவன்மார்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்பதை நமக்குப் படம் பிடித்துக்காட்டும் விதம் அற்புதம்.

"ஏங்க... இன்னிக்குக் காலை என் தோழி தேன்மொழிக்கு வளைகாப்பு வைபவம் நடக்க உள்ளது... என்னையும் வரச் சொல்லி அழைப்பு விடுத்து இருக்கிறாள்.....போகலனா தப்பா எடுத்துக்குவா" என்று கூறினாள்.

இதைக் கேட்டதும், 'சுள்' என்று மாதவன் உணர்ச்சி வசப்பட்டபடி....

"உனக்கு எத்தனை வாட்டிமா சொல்றது? நீ போவ யாராச்சும்...ஏதாச்சும் சொன்னாங்கன்னு...அங்கிருந்து அழுது கிட்டு வருவ. அதுக்குத்தான் போகாதேனு சொன்னாக் கேட்க மாட்டேங்கிற...! நான் என்னத்த சொல்ல" என்று அலட்டிக் கொண்டான்.

ஆசிரியர் இந்த இடத்தில் ஒரு சில சொந்த.... பந்தங்களோ..... நட்போ... எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறார்கள் என்றும், அந்தந்தக் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் எப்படி நாவை திருப்பிப் போட்டுத் தறிகெட்டுப் பேசி மனதைப் புண்படுத்துவார்கள் என்பதையும் அப்பட்டமாக உரித்து வைத்து... மனைவிக்கு அறிவுரை கூறிய விதம் மிகச் சிறப்பானது.

அது கேட்ட வானதி மேலும்....

“இல்லைங்க அவ என் பால்ய சினேகிதியாச்சே போகாம எப்படிங்க இருக்கிறது” என்று கூறிய வானதியிடம்,

“சரி உன் இஷ்டம் என்னமோ பண்ணு”என்றான் அரை மனதுடன்...

இந்த இடத்தில் ஆசிரியர் மனைவியைப் போகவேண்டாம் என்று நறுக்குன்னு மறுக்கவில்லை

அல்லது போய் வா என்றும் மனதாரவும் கூறவில்லை......

அதே நேரம், ‘உன் இஷ்டம்’ என்று வானதி அனுமதி கேட்டதற்கு முற்றுப்புள்ளி வைத்த விதம் அருமை. மாதவன் எடுத்த முடிவை நாம் ரசித்துச் சிந்திக்க வைக்கும் இடமாகவும் உள்ளது.

மாதவனுக்கும் வானதிக்கும் திருமணம் ஆகி ஏழு ஆண்டுகள் ஓடி விட்டது. இருப்பினும் இன்னும் குழந்தை பாக்கியம் இல்லாததால் அக்கம் பக்கத்தினர்களின் குத்தல் பேச்சுக்கும்... நக்கல் பேச்சுக்கும் ஆளாயினர்.

யாராவது எப்போதாவது வானதியைப் பார்த்தால் “என்ன இன்னும் புழு... பூச்சி ஒன்னுமில்லையா?” என்று கேட்போருக்குப் பதில் சொல்ல முடியாது தலை கவிழ்ந்து தவிப்பாள். இந்தச் சூழ்நிலையில் தான் வளைகாப்புக்கு வானதி செல்வது மாதவனுக்குப் பிடிக்கவில்லை. இருப்பினும் அவள் ஆசைப்படுவதால் வேறு வழியின்றி ஒத்துக்கொண்டான்.

வானதி மகிழ்ச்சியுடன் வளைகாப்புக்குச் சென்றாள். அந்த வளைகாப்பு நடக்கும் வீடு ரெம்பத் தூரம் என்றும் சொல்ல இடமில்லை. தன் வீட்டிற்கு இரண்டு வீடு தள்ளித்தான் தோழி தேன் மொழி வீடு. ஏற்கனவே, பெண்கள் பலர் வந்து ‘நலங்கு’வைக்க ஆரம்பித்து விட்டனர். நலங்கு என்றால் கர்ப்பிணிப் பெண்களுக்கு வாழ்த்து மழை பொழிந்து தாய் வீட்டிற்குப் பிரசவத்திற்காக அனுப்பி வைக்கப் போகும் ஒரு வாழ்த்து நிகழ்ச்சி நிரல்தான். அவ்வாழ்த்தின் போது பெண்ணின் கன்னத்தில் சந்தனம் பூசுவார்கள்! குங்குமம் வைப்பார்கள்! கைகள் இரண்டிலும் புது வகையான பள பளக்கும் கண்ணாடி வளையல்கள் அணிவித்து மகிழ்ந்து வாழ்த்துவர்..அன்று தேன்மொழி இருந்த கோலத்தைப் பார்த்தவள்.

ஒரு நிமிடம் தன்னை அந்தப் பெண் இடத்தில் கற்பனையில் வைத்துப் பார்த்து தானும் இந்த நிலை அடைய மாட்டோமா என்று நினைந்து மகிழ்ந்தாள்! ஆசிரியர் இந்த இடத்தில் எல்லாப் பெண்ணுக்கும் உள்ள இயற்கையான அபிலாசையை அழகுபட விவரிப்பது அருமையிலும் அருமை.

தேன் மொழி வரவேற்றதை....வானதி ஆமான்னு ஏற்பது போல் தலை அசைத்து ஏற்று மகிழ்ந்தாள்.

“ஏண்டி பக்கத்திலே இருந்திட்டு இவ்வளவு நேரம் கழிச்சா வருவ...வா வந்து நலங்கு வை” என்று சிரித்துக்கொண்டே தேன்மொழி கூப்பிடவும்....

ஆசையாக நலங்கு வைக்க அருகே சென்றாள் வானதி. அப்போது என்னே ஆச்சர்யம்! அருகில் நின்று கொண்டிருந்த பக்கத்து வீட்டுச் சற்குணத்தம்மாள் வானதியை விரைந்து தடுத்து,

“நில்லு! நீயே தரிசு நிலமாக் கிடக்கிற! நீ நலங்கு வச்சா குழந்தை எப்படி நல்லபடியாப் பிறக்கும்? அவ தான் பாசத்தில் கூப்பிட்டா....நீயில்ல வேண்டாம்னு சொல்லி ஒதுங்கி நிக்கணும். உடனே பறந்து வந்துட்ட ‘குடு’ இங்கே” என்று வானதி கையில் இருந்த சந்தனக் கிண்ணத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள். இதைச் சற்றும் எதிர்பாராத வானதி நெருப்பில் வீழ்ந்த புழுவாய்த் துடித்தாள்....அழுது கொண்டே வீடு திரும்பினாள்.

அதே நேரத்தில் வானதி ஒருவேளை இன்றைய புரட்சிப் பெண்ணாக இருந்திருந்தால்....என்ன நடந்திருக்கும்....என்று பார்ப்போம். ஆம்! நலங்கு வைபவம் அன்று அக்கம் பக்கம் உள்ளவர்கள் சொந்தம் சுருத்துக்கள்... எல்லோரும் வர பெண் வீட்டார் அழைப்புக் கொடுப்பார்கள். அந்த அழைப்பு அடிப்படையில் தான் குறித்த பெண்கள் எல்லாம் வந்து ‘நலங்கு’ செய்வர். அதாவது கர்ப்பிணிப் பெண்ணை ஆசீர்வாதம் செய்து தாய் வீட்டுக்கு அனுப்புவது. அப்படி இருக்கும்போது...

நான் அழைப்பின் பேரில் தான் வந்து என் தோழிக்கு ஆசீர்வாதம் செய்யும் நேரத்தில் எவ்வளவு “நெஞ்சுத் தைரியம் உனக்கு இருந்திருந்தால் நீ” பக்கத்து வீட்டு சற்குணம் அம்மாள் கிஞ்சிற்றும் யோசிக்காது.,.. பயம் ஏதும் இன்றி என் கையில் இருந்த சந்தனக் கிண்ணத்தைப் பறித்ததோடு நீயே எதுவும் விளையா தரிசு தரிசு நிலமாச்சே! நீ வந்து நலங்கு வைத்து தேன்மொழிக்கு சுகப்பிரசவம் ஆகவா? என்று என்னை இச்சபையில்...ஏளனம் பேசி... மற்றவர் முன்னிலையில் அசிங்கப்படுத்திய நீ யார்? நீயோ பக்கத்து வீட்டு ஓசிக் கஞ்சி உனக்கும் தேன்மொழிக்கும் என்ன சம்பந்த உறவு? அப்படியே ஒருவேளை உறவுக்கார அம்மாவாக நீ இருந்தாலும்....முறைப்படி அழைப்பின் பேரில் இங்கு இந்த நிகழ்ச்சிக்கு வந்து கலங்கு வைக்கும் நேரதில் என்னைத் தடுக்க நீ யார்? என்று நேருக்கு நேர் கேட்டு மூக்கை உடைத்திருப்பாள்” கிழி கிழினு கிழித்திருப்பாள், சற்குணத்தம்மாளை.

ஆனால்...பாவம் வானதியோ வாய்த் துடுக்கு பேசும் வழியில் பிறந்து வளர்ந்த வந்த பெண் அல்ல...நல்ல குடும்பத்துப் பெண் எனவே சற்குணத்தம்மாள் வாயால் சுட்ட சுடு சொல்லைத் தாங்காது வீட்டில் வந்து தேம்பித் தேம்பி கட்டிலில் புரண்டு அழுதாள்.

எனக்குக் குழந்தை இல்லாததற்கு நான் என்ன செய்வேன் என்று சிறு பிள்ளைத் தனமாக அழுதாள்.

மாதவனோ அவள் அருகே அம்ர்ந்து கொண்டு அவள் தலைமுடியைக் கோதியபடி, “இதற்குத் தான் அப்போதே அங்கே போகவேண்டாம் என்றேன். வானதி மனநிலை பற்றி வானதி அம்மாவுக்கும் நடந்தது என்னவென்று விளக்கிச் சொன்னான்... அவளைத் தன் மகள் வானதியோடு பேசி அமைதிப் படுத்தச் சொன்னான்.

அதன்படி வானதியுடன் அவள் அம்மா பேசினாள். பின்பு அழுகை நின்றவுடன், “என் அம்மா பத்து நாள் ஊருக்கு வந்து போகும்படி கூறுகிறார்” என்றாள். அவனும் அது சரி என்று கூறி வானதியை அனுப்பி வைத்தான். இந்தக் கதையில் இந்தக் காட்சியை நடந்து முடிந்த ஒரு படக் காட்சியைப் போல் ஆசிரியர் விளக்கி இருப்பது அருமையிலும் அருமை.

அம்மா வீடு வந்து ஏழு நாட்கள் ஆகிய நிலையில் ஒரு நாள் காலை வெளியில் ஒரே சத்தமாக இருப்பது கண்டு எழுந்து வந்தவள், வாசலில் அவள் அம்மா பார்வதி எதிர்வீட்டுக் கனகாவுடன் கிசுகிசுத்துக் கொண்டிருப்பதையும் பக்கத்து வீட்டு சாந்தி வீட்டில் போலீஸ் வந்து நிற்பதையும் அது என்னவாக இருக்கும் என்பதையும் யோசித்து மூளையைக் குழப்பிக் கொள்ளத் தவறவில்லை.

பின்பு சிறிது நேரம் கழித்து வீட்டுக்கு வந்த அம்மாவிடம் என்னம்மா ஆச்சு என்று வானதி கேட்க...

“அதை ஏண்டி கேக்குறே அந்தப் பாவிப் பய ரத்தினம்.....பொண்டாட்டிமேல் சந்தேகப்பட்டு....இந்தப் பிள்ளைகள் இரண்டும் எனக்குப் பிறக்கல... என்று எப்பவும் அவளுடன் சண்டை போட்டுக்கொண்டு இருப்பான்....

இந்த இடத்தில் ஆசிரியர் மனைவி மேல் சந்தேகப்படும் ஒருவனை அந்தச் சந்தேகம் எந்த அளவுக்கு மிருகமாக்கி விடுகிறது என்பதை ரத்தினம் வாயிலாக விளக்குவது சிறப்பு. இப்படி மனைவி மேல் ஏற்பட்ட சந்தேகத்தில் அவளையும் மற்றுமொரு குழந்தையையும் கொன்று விட்டுத் தானும் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்தான்.

சாந்தி அவ மூத்த பிள்ளையை அவ அம்மா வீட்டில ஏற்கனவே விட்டு இருந்ததால் அது யார் செய்த புண்ணியமோ தப்பிப் பிழைத்தது. சாந்திக்கு அப்பா இல்லை.. அம்மாவோ வயதான கட்டை. அவ இந்த இளம் பிள்ளையை எத்தனை நாள் ஆளாக்கிப் வளர்த்துப் பார்க்க முடியும்? பாவம் அந்தப் பிள்ளை அனாதையாய் நிக்கப் போகுது, இப்படிப்பட்ட அப்பனுக்குப் பொறந்ததைத் தவிர அது என்ன பாவம் பண்ணுச்சு நாம் என்னத்த சொல்ல என்று கவலைப்பட்ட பார்வதி உள்ளே சென்று விட....

இதைக் கேட்ட வானதி ஆர்வம் மேலிட சாந்தியின் வீட்டருகே கூடி இருந்த கூட்டத்திற்குள் சென்று அங்கே சாந்தியின் உடலைப் பார்த்ததும் கதறிக்கொண்டு இருந்த அவள் அம்மாவைப் பார்த்தாள். அவள் பக்கத்தில் சாந்தியின் இரண்டு வயதுக் குழந்தை அம்மாவைக் கண்டு சிரித்து விளையாடிக்கொண்டு இருந்தது. இந்த இடத்தில் ஆசிரியர் குழந்தையின் மனோபாவம் எப்படி ஏதும் அறியா வெள்ளை உள்ளம் என்று விளக்கும் விதம் அருமை.

இதைப் பார்த்த வானதிக்கு கண்ணில் நீர் அரும்பியது. சாந்தியின் அம்மாவோ, “அடிப்பாவி எத்தனையோ தடவை நான் சொன்னேனே..அவனை விட்டுட்டு வாடினு.... சொன்னேனே கேட்டியா? இல்லை.. அம்மா நான் அவனை நிச்சயம் திருத்தி விடுவேன் என்று சொல்லிவிட்டு இப்போது அவன் கையாலேயே தாயும் பிள்ளையும் செத்துக் கிடக்கிறீர்களே! அந்தப் பாவிப் பயல் அந்தப் பிஞ்சையும் விட்டு வைக்கவில்லையே... என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

இந்த இடத்தில் ஆசிரியர் கொடூரன் குணம் எப்படிப்பட்டது என்பதையும் அவன் கொடூரன் என்பது மட்டும் அல்ல, அவன் ஓர் இரக்கமற்ற அரக்கன் என்பதையும் அவனால் பாதிக்கப்பட்ட குடும்பம் பற்றியும் விளக்குவது எல்லோராலும் மனமுவந்து ஏற்கும் கருத்தாகும். மேலும் இந்த தப்பிப் பிழைத்த ஒரு ஏதுமறியாப் பிஞ்சு மண்ணை வச்சுக்கிட்டு நா என்னடி பண்ணுவேன் என்று புலம்பி அழுதாள். இதைப் பார்த்த வானதிக்கு மனம் கசிந்து கனத்தது.

அப்போது கூட்டத்தினிடையே திடீரென்று வெளிப்பட்ட போலீஸ், போம்மா... தள்ளிப்போம்மா என்று அனைவரையும் விளக்கிவிட்டு, சாந்தியின் உடலையும் மற்ற இரு உடலையும் கொண்டு சென்றனர். சாந்தியின் அம்மாவோ அழுது கொண்டே பின்னால் ஓடினாள். விளையாடிக்கொண்டு நின்ற குழந்தையை வானதி கையில் எடுத்தாள். அது அவளைப் பார்த்துக் கள்ளமற்ற சிரிப்பை உதிர்த்தது.

அதன் பிஞ்சு விரலின் ஸ்பரிசம் அவள் மனதை என்னவோ செய்ய, மெய் சிலிர்த்துப் போனவளின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாய் கொட்டியது. திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவளாய் அந்தக் குழந்தையைத் தூக்கி முத்தமிட்டு அரவணைத்துக் கொண்டாள்!

‘வசந்தம்’ என்ற இந்தச் சிறுகதையின் முடிவு மனதைத் தொட்ட நெகிழவைக்கும் முடிவு என்பேன். அருமையாய்த் தீட்டிய எழுத்தாளர் பெருந்தகை நீடூழி நிலைத்த புகழுடன் பல்லாண்டு வாழ்க.



# அனர்த்தம்

**சுந்தரிமணியன், புதூர்**

இலையுதிர்காலம் முடிந்து வசந்தகாலத்தின் தொடக்கநிலையில் மரங்களில் துளிர்கள் புதிதாக உருவாகின. பன்னீர் பூக்களின் நறுமணம் காற்றில் பரவ, வீட்டின் புழக்கடையின் தோட்டத்திலிருந்து வந்த சாமந்திப் பூவின் நறுமணமும் என் நாசியில் நுழைந்து ஒரு கிறக்கத்தை உண்டு பண்ணியது. நேற்று மாலையில் முகுந்தன் பேசிய பேச்சுகள் என் மனதில் நுழைந்து வண்டாக அரித்துக் கொண்டிருந்தன. வீட்டின் நிலைமை தெரிந்தும் முகுந்தன் இப்படிச் செய்தது தாங்க முடியாத வேதனையை மனதில் நிரப்பியது. இதை எப்படி இவரிடம் சொல்லப் போகின்றேன்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு வீட்டிற்கு வந்துவிட்டுப் போன முகுந்தன் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவான் என்று கனவிலும் நினைக்கவில்லை. நாத்தானார்கள் இரண்டு பேரும் ஏற்கனவே இவரைப் பந்தாடிக் கொண்டிருக்கிறார்கள். இதில் முகுந்தன் சொன்ன செய்தியில் இரவு முழுதும் தூங்க முடியாமல் எண்ண அலைகள் அவளைப் பந்தாடின. கதையில் படிப்பதுபோல் ஜாதியைப் பார்க்காமல் செய்துவிடலாம்தான். ஆனால் சுற்றியுள்ள சொந்த பந்தங்களின் பேச்சை நினைத்தால் மூச்சு முட்டியது. இவர் சொந்த, பந்தங்களுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் தெரிந்திருந்தும் இந்தப் பையன் இப்படிச் செய்துவிட்டானே? மனதே ஆறவில்லை. பெற்ற பிள்ளைகள் மேலும் அதிக நம்பிக்கையும் பாசமும் வைக்கக்கூடாதோ? இளம்பிறைக்குத் தன்னையும் அறியாமல் கண்கள் குளமாயின. இதை எப்படி இவரிடம் சொல்வேன்? நீ கொடுக்கிற இடம்தான் இப்படி செய்துட்டு வந்திருக்கான்? என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? மனதில் ஏற்பட்ட குழப்பம் ரயில்வண்டி போல தொடர்ந்தது.

மேடையில் பேசுபவர்கள் காதலுக்குச் சாதி இல்லை, மதம் இல்லை என்று எவ்வளவு இலகுவாகச் சொல்லிவிடுகிறார்கள். அது போல சொந்த பந்தங்கள் தேவையில்லை, உடன் பிறந்தோர் தேவையில்லை, என்று இந்தச் சமூகத்தில் ஒதுக்கமுடியுமா? இருவரின் நலனுக்காக அப்பா, அம்மா, உடன்பிறந்தோர் என அனைவரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டியுள்ளதே இது ஏன் இவர்களுக்குப் புரிவதில்லை. இந்த இலட்சணத்தில் அந்தப் பெண் காதலிக்கிறேன் என்று சொல்லி, பெற்றோரிடம் பேசமாட்டாளாம். இவன் மட்டுமே அவளை விரும்புவதாகச் சொல்லிக் கேட்கவேண்டுமாம். இது என்ன ஓரவஞ்சனை? விரும்பும்போது தெரியவில்லையா? வீட்டில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று.

முகுந்தனுக்கு இப்படி வேறு ஓர் இனத்தில் எடுத்தால் அடுத்து இருக்கும் இன்பாவுக்கு எப்படி நம் இனத்தில் மாப்பிள்ளை கொடுப்பார்கள்? இதை ஏன் முகுந்தன் நினைக்கவில்லை? தனது சுயநலம் மட்டுமேதான் பிள்ளைகள் சிந்திப்பார்களா? இந்தக் கேள்விகள் எல்லாம் இளம்பிறை தன் கணவன் மதியழகன் கேட்டால் என்ன பதில் சொல்வது என்று சிந்தனைவயப்பட்டாள். இன்பாவிடம் சொல்லி முகுந்தனிடம் பேசவைக்கலமா? என்று முயற்சி செய்து பார்த்தாள். அதற்கு இன்பா,

"அம்மா. அண்ணன் பாவம்மா. அவன் விரும்பிய பொண்ணையே கட்டிவச்சா என்ன?"

"ஏண்டி மூளையிருக்கா உனக்கு? உங்கப்பா ஒத்துப்பாரா? உன் அத்தைகள நினைச்சுப்பாரு. இப்படியெல்லாம் கேள்வி கேட்கமாட்ட, நீயாவது புரிஞ்சுப்பன்னு பாத்தா நீயும் இப்படிப் பேசுறியே"

"உண்மைதான். அப்பாவுக்குத் தெரிஞ்சா சாமியாடுவாரு. அத்தைக ரெண்டுபேரும் சேர்ந்து வேப்பிலை அடிப்பாங்க"

"ஆமாண்டி நீ திருநீறு கொடு. என் தலையெழுத்து உரலுக்கு ஒரு பக்கம் இடின்னா, மத்தளத்துக்கு ரெண்டு பக்கம் இடியாம்"

இப்படிச் சொல்லி இளம்பிறை முகத்தை வலித்தாள். இன்பாவுக்கு அம்மா பேசியது புன்முறுவலைத் தர,

"ஆமாண்டீ நீ சிரி. என் பிழைப்பு உங்க அண்ணனால சிரிப்பா சிரிச்சுரும்போல"

"சரி வருத்தப்படாதம்மா. அண்ணன்ட்ட பேசிப் பார்க்குறேன்"

என்ற இன்பாவுக்கு அண்ணனிடம் பேசினால் என்ன சொல்வானோ? என்ற சிந்தனை உள்ளெழுந்தது. இன்பா முகுந்தனிடம் அப்பாவுக்குத் தெரியாமல் பேசிவிட்டு,

"அம்மா. இது சரிப்படாது. நீ அப்பாட்ட சொல்லி அவரப் பேசச் சொல்லு. ஜாதி, மதம் பார்த்து வேணாங்குறாங்களா? நான் என்ன கொலைக்குத்தமா பண்ணிட்டேன். வேணான்னு சொல்ல? அத்தைகள பார்த்து எதுக்குப் பயப்படனும்? தலையைச் சீவிடுவாங்களான்னு கேக்குறான். என்னால் ஒண்ணும் சொல்ல முடியல"

" இருக்கட்டும் நான் வச்சிக்கறேன். அப்பாவுக்குத் தெரிஞ்சா நொறுங்கிப் போயிடுவாரு"

ஒரு தீர்மானத்துடன் எழுந்த இளம்பிறைக்கு இன்னும் இந்த விசயத்தை ஒத்திப்போட்டால் சரிப்படாது என்று தோன்றிவிட்டது. இரவு மதியழகன் சாப்பிட்டு முடித்தவுடன் அனாயாசமாக நாற்காலியில் அமர்ந்தவரின் அருகிலமர்ந்த இளம்பிறை,

"ஏம்பா டிபன் நல்லாருந்துச்சா"

"ம்ம் நல்லாருக்கு. ஏன் எப்பவும் செய்யறதுதானா? திடீர்னு என்ன கேள்வி?"

அவனின் கூர்மையில் கொஞ்சம் பயந்து,

"இல்லப்பா சும்மாதான் கேட்டேன். நம்ம முகுந்துக்கு வயசு ஏறிட்டே போகுது. சீக்கிரம் கல்யாணம் முடிக்கனும்"

"என்ன திடீர்னு எப்பவும் நான்தான் சொல்வேன். இன்னிக்கு நீ கேக்கற"

"இல்ல. அவன் கூடப் படிச்ச யாழினின்ற பொண்ண விரும்பறான் போலிருக்கு. அவன மாதிரியே பட்டம் வாங்கியிருக்கு. நல்லா படிக்கிற பொண்ணாம். நல்ல குணமான பொண்ணுன்னு சொல்றான். என்ன பண்றது? "

" என்னது கூடப் படிச்ச பொண்ணா? அது என்ன இனம்? நமக்கு ஒத்து வருமா? இவன் என்ன மனசுல நினைச்சுக்கிட்டிருக்கான்? இவன் வேலை பாத்துட்டா இவன் என்ன சொன்னாலும் கேக்கனுமா? " கோபத்தில்

கண்கள் சிவக்கக் கேட்ட மதியைப் பார்த்ததும் கதிகலங்கிப் போயிற்று இளம்பிறைக்கு.

“இல்லப்பா. அவங்க வீட்ல பேசி ஒத்துவந்தா மட்டும் பண்ணனும்னு சொல்றான். என்ன பண்றது? நான் என்ன சொன்னாலும் கேட்கமாட்டேங்குறான். எந்த விசயத்தையும் முயற்சி பண்ணிபார்க்கனும்னு நீங்கதான சொல்லிக் கொடுத்தீங்க? இதையும் முயற்சி பண்ணி பாக்கணுங்கறான். என்ன பண்றது?”

“அதுக்கு இவன் என்ன சொன்னாலும் கேட்பேன்னு நினைக்கிறானா? இவன் வேலையே பார்க்கவேண்டாம் வேலைய விட்டுட்டு வரச்சொல்லு?” கோபத்தில் கத்திய மதியிடம் பதில்பேசவியலாது திகைத்தாள்.

சரி. விசயத்தை ஒத்திப்போடலாம். கொஞ்சம் ஆறியவுடன் பேசுவோம் என்று மௌனமானாள். அன்று இரவே முகுந்தன் போன் போட நிலைமையை எடுத்துச் சொன்னாள். அவன் பதிலுக்குப் பேச இளம்பிறையின் மனதுதான் ரணமாகியது. ஒரு வாரத்திற்கு விசயம் இப்படியே போக வீடு போர்க்களமானது. மதியழகன் தனது மகன் செய்யும் செயலை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல் விலக்கவும் முடியாமல் ஒரு நாள் இரவு இளம்பிறையின் கையைப் பிடித்துக்கொண்டு அழுதான். தனது கணவனின் முகத்தில் வந்த கண்ணீரைப் பார்த்ததும் இளம்பிறையின் கண்களிலும் கண்ணீர் எட்டிப்பார்த்தது. எந்த விசயத்திலும் திடமாக இருக்கும் தனது கணவனை இப்படி மகன் அழவைத்துவிட்டானே என்று இளம்பிறையும் கலங்கிப்போனாள்.

திருப்பியும் முகுந்தன் தன் நிலைமையைச் சொல்லிக் கெஞ்ச வேறு வழியில்லாமல் பெண்ணின் அம்மாவிடம் பேசி முதலில் ஜாதகப் பொருத்தம் பார்க்கலாம் என்று முடிவானது. முகுந்தனின் ஜாதகத்தைப் பெண்ணின் அம்மாவுக்கு அனுப்பி வைக்க, ஜாதகப் பொருத்தம் இல்லை எனவே சரிவராது என்று பதில் சொல்ல முகுந்தன் கலவரமானான். கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் அந்தப் பெண்ணின் நினைவிலேயே இருந்தான். சைக்யாட்ரிஸ்ட் ஒருவரிடம் கவுன்சிலிங் போய் தனது மனதைச் சரிசெய்தான். இதற்கிடையில் மகனின் நிலையை எண்ணி இளம்பிறையும் மதியழகனும் நிம்மதி இழந்தனர்.

எட்டு மாதங்களுக்குப் பின் யாழினிக்கு வேறு ஒரு பையனைப் பேசி முடித்தனர். இந்தச் செய்தி தெரிந்து மனம் கலங்கிய முகுந்தன் ஒரு ஆண்டுக்குப் பின்பே திருமணத்திற்குச் சம்மதித்தான். தனது காதலை வெளிப்படையாகச் சொல்ல முடியாத பெண்ணுக்காக தனது தாய், தந்தை, தங்கையென அனைவருக்கும் மன உளைச்சலோடு முகுந்தனின் நிம்மதியும் பறிபோனதுதான் மிச்சம். தேவையற்ற காதல் பல அனர்த்தங்களைச் செய்யக்கூடியதாகவே உள்ளது.

திருமலை சுந்தா

# கடுகுக் குறுங்கதைகள்


## தேடல்

“துன்பமான நான் உனைவிட்டு
விலகிச் செல்கின்றேன்... “
அவரது துன்பம் முகத்திலிருந்து
சொன்னது.
“இன்பமான நான் உன்னுடன்
கலந்து கொள்கின்றேன்.. “
அவரது இன்பமும் முகத்திலிருந்தே
சொன்னது.
அவரோ ஒரு முறை தனது முகத்தை
தடவிப் பார்த்தார்.
துன்பமும் இன்பமும் சிரித்துக்
கொண்டன.

❍

## பிறவிக்குணம்

“எங்க வீட்டு நாய் யாரைக் கண்டாலும்
குரைத்து குரல் எழுப்புது. ஆனா...
முன் வீட்டு நாயானது எவரைக்
கண்டாலும் வாலை ஆட்டி பல்லை
இளிக்குது... “
அவள் கூறினாள்.
அவன் கூறினான்...
“அதெல்லாம்.. அது அதுகளின்ர
பிறவிக்குணம்.... “
அவளின் கண்கள்.... அவனை நோக்கி
தீ பிளம்புகளை.....



# இலக்கை நோக்கி

**பாலமுருகன்.லோ**

"விமல், கிராமத்தில் பிறந்தவன். பெரிய குடும்பப் பின்னணி என்றெல்லாம் சொல்ல முடியாது. அவனது தாய் மற்றும் தந்தை படித்தவர்கள்.

ஒரு நல்ல சம்பளத்தில் வேலையில் அமர்ந்திருந்தார்கள் மற்றும் விமலைப் படிக்கவும் வைத்தனர். விமல் குடும்பத்திற்கு அமைதியாக, அடக்கமாக வளர்ந்தப் பையன்.

தொழில்நுட்பப் படிப்பை முடித்தவுடன் வேலைக்காக அலைந்த போது? முதலில் அவன் கோயம்புத்தூரில் உள்ள வார்ப்பு உற்பத்திச் செய்யும் நிறுவனத்தில் ஒரு சிறிய வேலையில் அமர்ந்தான். இந்த இருபது வருடக் காலம் அவன் தன் தாய், தந்தையைப் பிரிந்து வெளியே வந்ததில்லை! இதுவே முதல் முறை. இங்குக் கோயம்புத்தூரில் நிறுவனம் அருகே ஒரு விடுதியை வாடகைக்குப் பார்த்து அதில் தங்கினான்.

விமலுக்கு அனைத்தும் புதுமையாக இருந்தது அன்று. ஏனென்றால் அந்த விடுதியில் அவன் பலதரப்பட்ட நபர்களுடன் சேர்ந்தே தங்க முடிந்தது. அவனுக்கு என்று ஒரு தனி அறையெல்லாம் இல்லை. நீண்ட மண்டபம் போன்ற இடம். அவரவர் வைத்திருந்த சாமான்களை அவரவர் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பாயில்தான் படுக்கை, குறிப்பாகச் சுமார் இருபது நபர்கள் அங்குத் தங்கியிருந்தனர். இருபது நபருக்கும் குளியல் அறை மற்றும் கழிவறை மொத்தம் இரண்டு தான் இருந்தது.

❍ ❍ ❍

வேலைக் காலை 8:30 மணிக்குத் துடங்கும், அதனால் காலையில் குறைந்தது 5:30 மணியளவில் எழுந்துக் காலைக்கடனை முடித்துவிட்டு, உணவுச் சாப்பிட்டப் பிறகே நிறுவனத்துக்குப் புறப்படுவது வழக்கம். விமலால் அந்த நிறுவனத்தில் நிரந்தரமாகச் சிறிதுக் காலம் கூட நீடிக்க முடியவில்லை. ஏனென்று பார்த்தால் அவன் வேலை செய்த நிறுவனத்தில் பணிபுரியும் நபர்கள் அங்கு இருப்பவர்களை அவ்வளவாக மரியாதையுடன் நடத்தவில்லை.

இதன் காரணமாக விமல் கோவையிலிருந்து, சென்னை நோக்கிப் பயணித்தான். சென்னை வந்த பிறகு அவனுக்குத் பிரம்மாண்டமான மாநகரம் தெரிந்தது. இந்தச் சென்னை மாநகரம் அவனை அன்போடு வரவேற்றது. அவனுக்குத் தொழிற்பட்டறையில் வேலைக் கிடைத்தது. அவன் எதிர்பார்த்த மரியாதை அவனுக்கு இங்கு இருக்கும் மற்ற நபர்களும் கொடுத்தனர். இவனது மாத சம்பளம் அப்போது சுமார் ஐநூறு ரூபாய். படிப்படியாக வேலையைக் கற்றுக்கொண்ட விமல் அந்த நிறுவனத்தில் சுமார் பத்தாண்டுகள் பணியில் இருந்தான்.

இவ்விடத்தில் பணிபுரியும் சமயம் தான் அவனுக்குத் திருமணமும் நடந்தது. தன் மனைவியிடம் அன்பு, நேசம், பாசம் இவை அனைத்தும் வெளிப்படையாக மற்றவர் முன்னிலையில் காண்பித்ததில்லை. ஏனோ அவன் வளர்ந்தச் சூழல் அப்படி இருந்ததால் அத்தனையும் தன் மனதில் போட்டுப் பூட்டிவைத்திருந்தான்.

ஆனால் விமலின் மனைவியின் குணமோ இவனது குணத்துக்கு அப்படியே எதிரானது. சதாப் பேசிக் கொண்டே இருப்பது இவளது வழக்கம். திருமணம் முடிந்துப் பட்டணத்துக்கு வந்த பிறகு. கணவன், மனைவி மட்டும் அந்த வாடகை வீட்டில் இருந்த சமயம். விமல் வேலைக்குப் போன பிறகு, இவனது மனைவிக்கு நேரத்தைக் கடத்துவது பெரும்பாடாக இருந்தது.

ஆதலால் அவள் அடிக்கடி விமலுக்குத் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு நலம் விசாரிப்பாள். ஆனால் விமலோ என்ன வேலை நேரத்தில் இவள் இப்படித் தொலைப்பேசியில் பேசிக்கொண்டிருப்பதை வழக்கமாக வைத்துவருகிறாளே என்று எண்ணி, வேலை நேரத்தில் என்ன பேச்சு உடனே தொலைப்பேசியைத் துண்டிக்கச் சொல்லி மனைவி மீது கடிந்துக் கொள்வான்.

விமல் வேறொரு நோக்கத்துடன் அப்படித் தன் மனைவியைக் கடிந்தாலும் உள்ளூர மனதில் அன்பும், பாசமும் தவிர அவனிடம் வேறொன்றும் இல்லை. திருமணத்திற்குப் பிறகு பதினான்கு ஆண்டு அவனுடைய சம்பளத்தை வைத்துத்தான் குடும்பத்தை நடத்த வேண்டியச் சூழலிலிருந்தான். வீட்டின் மீதிருந்த கடனை மாதாமாதம் வங்கிக்குச் செலுத்துவது, இதரச் செலவுகள், மள்ளிகைப் பொருட்கள் வாங்குவது எதிர்பாராத செலவுப் போன்றகாரியங்களால் அவன் எப்போதும் சிடுசிடுப்பாகக் காணப்பட்டாலும். உண்மையில் விமலின் மனது மென்மையானது.

அவனுக்கு அதிகம் இறக்கக் குணம் உண்டு, பிள்ளைகளிடமும் அவன் அன்பும் அக்கறையும் வைத்திருந்தான். என்ன ஒன்று பிள்ளைகள் ஏதாவது கேட்டவுடன் அவனால் அதை நிறைவேற்ற முடியாது, ஆனால் சிரமப்பட்டு அதைச் செய்து முடிப்பான்.

❍ ❍ ❍

காலங்கள் உருண்டோடின, விமலின் வாழ்வில் புயல் வீசத் துடங்கியது. இவன் வேலையை விட வேண்டிய கட்டாயம் உருவானது. விமலும் அந்த வேலையை உதறிவிட்டு, வேறு வேலைத் தேட ஆரம்பித்தான். ஆனால் இந்த வாழ்க்கை அவனிடம் சற்றுப் போக்குக் காட்டிக் கொண்டேயிருந்தது. அவனால் ஒரு நல்ல வேலையில் அமர முடியவில்லை. தன்னிடமிருந்த மொத்தச் சேமிப்பையும் செலவு செய்து அவனது குடும்பத்தைப் பார்த்துக் கொண்டான்.

இரண்டு வருடக் காலம் அவன் வேலையில்லாமல் இருந்த போது; வாழ்க்கை அவனுக்கு நிறையவே கற்றுக்கொடுத்தது. பலரை அவன் புரிந்து கொண்டான். யாரிடம் எப்படி நடந்து கொள்வது போன்ற பல விஷயங்களை அவன் இந்தக் காலகட்டத்தில் அறிய நேர்ந்தது. இவனது பிள்ளைகளும் அவனைப் புரிந்துகொண்டு செயல்பட்டனர். விமலிடம் வந்து இது வேண்டும், அது வேண்டும் என்றெல்லாம் கேட்பதில்லை. இவன் மனம் கோணாமல் நடந்து கொண்டனர்.

சில சமயங்களில் குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வெளியே போக யோசிப்பான். எங்கே இவர்களை இப்போது வெளியே கூட்டிச் சென்றால் பின் வீட்டுக் கடன், குடும்ப மளிகைப் பொருட்கள் எப்படி வாங்குவது என்றெல்லாம் யோசித்து அந்த நிகழ்வைச் சற்றுத் தள்ளிவைப்பான்.

ஆனால் சிரமப்பட்டு விமல் பிள்ளைகள் கேட்கும் பொருட்களை அவர்களுக்கு வாங்கித் தருவதை அவன் வழக்கமாக வைத்திருந்தான். அவனது மனைவியும் வேலைக்குச் சென்றாள். குடும்பப் பாரத்தைச் சற்றே தன் தோலில் எடுத்துக் கொண்டாள்! பாடுபட்டாள், அவளால் முடிந்ததைத் தன் குடும்பத்துக்குச் செய்துவந்தாள்.

❍ ❍ ❍

காலத்தின் கோலம், அல்லது காலத்தின் பிடியிலிருந்து யாராலும் தப்ப முடியாது என்பதற்கு உதாரணமே விமல் தான். நல்லா இருந்தவன் கீழே இறங்குவதும், கீழே அதளப் பாதாலத்தில் தத்தளித்துக்கொண்டு இருக்கும் ஒருவனுக்கு மறு வாழ்வை அமைத்துக் கொடுப்பது இக்காலத்தின் கை வண்ணம், இதில் யாரும் விதி விலக்கல்ல. விமல் கை நிறையச் சம்பாதித்த காலம், அவனது வாழ்வு முறை வேறுபட்டிருந்தது. ஆனால் குடும்பச் சூழலை சமாளிக்கக் கிடைத்த வேலையையும் ஒதராமல். அவன் அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது மட்டும் அல்லாமல், அதனுடன் போராடவும் செய்தான்.

என்ன ஒண்ணு அவன் ஆரம்பக் காலத்தில் எப்படி எல்லா வேலையையும் செய்தானோ! இப்போ அதே மாதிரி வேலை தான் கிடைத்தது. இதற்கு முன்னர்ச் சுமார் நானூறு நபர்களை மேற் பார்வை செய்துகொண்டு இருந்த விமலுக்குத் தற்போதைய வேலை, அவனுக்குச் சிறிது கடினமாக இருந்தாலும் அதை அவன் ஆத்மார்த்தமாக அவனது முழு முயற்சியை அதில் செலுத்தினான் தன் குடும்பத்திற்காக. பல போராட்டங்களைச் சந்தித்தாலும் கிடைத்த வேலையைப் பற்றிக்கொண்டான்.

வேறு நல்ல வேலையைத் தேடிக் கொண்டிருந்தான். அவன் இலக்கை நோக்கித் தினமும் ஓடிக்கொண்டிருக்கிறான். இலக்கானது அவன் கைவசம் வந்தடைந்ததா? இப்போது இருக்கும் மகிழ்ச்சி இவர்களது குடும்பத்தில் நிரந்தரமாகக் காணமுடிந்ததா? விமலுக்கு ஒரு நல்ல வேலை அமைந்ததா? அவனது முயற்சிப் பலன் கொடுத்ததா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

ஆம், சரியே. “முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்” என்பார்களே. அதாவது எவனொருவன் தன் முயற்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறானோ! அவன் ஒரு போதும் எவராலும் இகழப்பட மாட்டான். தனது உழைப்பின் மேல் இருக்கும் நம்பிக்கை மற்றும் தளராத முயற்சியுமே, அவன் தோல்விகளைச் சந்தித்தாலும். மற்றவர்களிடம் கேலிக்கு ஆளாகமாட்டான். மாறாக அவனது வாழ்வை அவன் வெற்றி பாதையை நோக்கி பயணித்து வெற்றியும் அடைவான், இதுவே உலக நியதியும் கூட.

**ஜமீல்**

# சருகென எரிந்த ஆறாம் அறிவு

எங்கோ சற்றுத் தொலைவில்
உதிர்ந்து கிடந்த சருகுகளை
அள்ளி வந்து சாலை தோறும்
வீசி விட்டுச் செல்கிறது காற்று

அதனை கூட்டி எடுத்து
குழி தோண்டி புதைக்காமல்
புதிதாய் வர்ணம் பூசிய
நூலக எல்லைச் சுவரினருகில்
தீ வைக்கிறான் ஒருத்தன்

அவனுக்கு சமூகப் பற்றுதலிகருக்க
நிச்சயம் சாத்தியமில்லை

எங்கு சென்றாலும் சருகுகளையும்
வலிந்தழைத்துச் செல்லும்
காற்றுக்கு பொதுப் புத்தி இருக்க
எப்படியும் நியாயமில்லை

மனிதா உனது அறிவுமா
சருகென உதிர்ந்து விட்டது

இப்போது நூலகச் சுவரெங்கும்
இருளென அப்பிக் கிடக்கிறது
நின் வாழ்வின் ஆறாம் அறிவு



# தாய்மை

## ஈ.அங்குலட்சுமி

திருப்பூர் பழைய பஸ்டாண்ட்டுக்கு எதிராக இருக்கும் காய்கறி மார்க்கட்டில் இருந்து கொஞ்சம் வீட்டுக்கு தேவையான காய்கறிகளையும் தான் வைத்திருந்த பெட்டிக்கடைக்கு பீடி. சிகெரெட் வெற்றிலைபாக்கு புகையிலை மற்றும் குழந்தைகளுக்கு தேவையான தின்பண்டங்கள் அனைத்தும் வாங்கிக்கொண்டு தலையில் ஒரு பையும் இடுப்பில் ஒரு பையுடன் ஓட்டமும் நடையுமாக கலைவாணிபழையபஸ்நிலையத்திற்கு வந்தாள் அவள் போகவேண்டிய 2 நெம்பர் பஸ் புறப்படதயாராகி மெதுவாக நகர்ந்தது கலைவாணிக்கு அய்யோ பஸ் போகிறதே என்று பதட்டம் ஏற்பட்டது பஸ் நகர நகரபின்னாலேயே ஓடினாள் அதற்குள் பின்னால் படிக்கட்டில் நின்ற கண்டக்டர் இவள் ஓடி வருவதைப் பார்த்து விசிலடித்ததும் பஸ் மேலும் 100 அடி தூரம் போய் நின்றது கண்டக்டர் நல்ல மனிதர் அவளுடைய லக்கேஜை வாங்கி வைத்து அவள் பஸ்சில் ஏறுவதற்கு உதவி செய்தார் ரொம்ப நன்றிங்க சார் என்று சொல்லி விட்டு பைகளை டிரைவர் சீட்டிற்கு பின்புறம் இருந்த காலி இடத்தில் வைத்து விட்டு கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஏதாவது உட்கார ஒரு சீட் கிடைக்குமா என்று திரும்பி பார்த்தாள் எல்லா சீட்லயும் ஆட்கள் இருந்தனர்

கனமான பைகளை சுமந்து வந்தது மிகவும் களைப்பாக இருந்தது அருகில் இருந்த கம்பியில் சாய்ந்து கொண்டு டிக்கெட் வாங்க தோளில் மாட்டியிருந்த பையில் சில்லறை எடுத்து கன்டக்டரிடம் டிக்கெட் வாங்கினாள் அவள் நின்ற இடத்தில் அருகே இருந்தசீட்டில் இருந்த

பெண் கருவம் பாளையம் ஒரு டிக்கெட் என்று வாங்கினாள் கலைவாணிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது ஏனென்றால் இன்னும் 2 ஸ்டாப் அவள் இறங்கியதும் உட்கார்ந்து கொள்ளலாம் என்று அதேபோல கருவும் பாளையம் வந்துவிட்டது அந்த பெண் இறங்கியதும் நிம்மதியாக சாய்ந்து அமர்ந்து கொண்டாள் மிகவும் பசியாக இருந்தது இன்னும் 10 நிமிடம் ஆகிவிடும் போனதும் உடனடியாக சாப்பிட்டு விட்டு மற்ற வேலைகளை பார்க்கலாம் என்று அப்படியே கண்களை மூடி பின்னால் சாய்ந்து கொண்டாள் பஸ் அண்ணா நகர் பாஸ்டாப்பில் நின்றதும் பைகளை சகபயணிகளின் உதவியுடன் இறக்கி வைத்தாள் அதற்குள் அவள் கணவர் மகேந்திரன் பஸ் சத்தம் கேட்டு ஓடி வந்து பைகளை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு சென்றார் பஸ் டாப்பிலேயே கடையும் வீடும் இருந்தது மிகவும் நிம்மதியாக இருந்தது வீட்டுக்குள் நுழைந்து பாத்ரூம் போய் கைகால் முகம் கழுவி விட்டு சாப்பிட போகும்போது கடைக்கு ஒரு பெண் வந்து புகையிலை வேண்டும் என்று கேட்டதும் எடுத்துக்கொடுத்தாள் அடுத்த வீதியில் இருக்கும் பொன்னம்மா குழந்தைக்கு மிகவும் உடல் நலக்குறைவு காரணமாக சீரியசாக இருக்கிறது பாவம் நான் பார்க்க போகிறேன் என்று சொல்லி சென்று விட்டாள் அடடே பாவம் என்று மிகவும் வருந்துகிறேன் சமையலறையில் இருந்து இரண்டு தட்டுகளில் சாப்பாடு மற்றும் குழம்பு எல்லாம் எடுத்து வந்துகடைக்குள்ளேயே கணவருடன் சாப்பிட அமர்ந்தாள் இருவரும் சாப்பிட துவங்கினார்கள் அதற்குள் வெளியே சலசலப்பு எல்லோரும் கூட்டமாக பக்கத்து வீதியில் இருப்பவர்கள் சென்றார்கள் ஏனோ கலைவாணிக்கு பசி பறந்து விட்டது இரண்டு கவலத்துக்குமேல் சாப்பிட முடியவில்லை அவசரமாக கைகளைக்கழுவி துடைத்துக்கொண்டு பொன்னம்மா வீட்டுக்கு வேகமாக சென்றாள் அவள் கணவர் மகேந்திரனும் கடையை மூடிவிட்டு வந்தார் பொன்னம்மா வீட்டுக்கு முன்பாக ஒரே கூட்டமாக இருந்தது அவளுக்கு 2 குழந்தைகள் பெரியவனுக்கு எட்டு வயது இருக்கும் இப்போதும் பையன் 45 நாள் குழந்தை அதுதான் ம்மா ம்மா என்று அனத்திக்கொண்டு இருந்தது உறவினர் யாரோசொல்லி நெற்றியில் நிறைய விபூதி பூசி யிருந்தார்கள் கண்களில் விழுந்தால் என்னாவது என்று கலைவாணிக்கு கோபமாக வந்தது

பொன்னம்மா நல்ல சிவப்பாக குண்டாக இருப்பாள் பின் கொசுவம் வைத்து சேலை கட்டியிருப்பாள் இடுப்பில் வெற்றிலை பாக்கு புகையிலை வைத்திருக்கும் சுறுக்குபையும் சொருகி வைத்திருப்பாள் இந்த காலத்திலும் இப்படியா என்று வியப்பாக இருக்கும் என்னேரமும் வெற்றிலை குதப்பிய வாயுடன் உதடுகள் சிவப்பாகவும் பற்களில் வெற்றிலை கரையுடனும் இருப்பாள் கோபி அருகேயுள்ள ஏதோவொரு கிராமத்தில் இருந்து இந்த ஊருக்கு மணமுடித்து வந்திருந்தார்கள் அவள் கணவன் பழனிச்சாமி சலவை பட்டரை தொழிலாளி கருப்பாக ஒல்லியாக இருப்பான் எல்லோரும் பெண் குண்டாக இருப்பதால் கிண்டல் செய்வார்கள் அதையெல்லாம் அவர்கள் இருவருமே கண்டுகொள்ளாமல் இருந்தது அனைவருக்கும் பொசுக்கென்று போய் விட்டது

இப்போதுகூட்டமாக நின்றிருந்த அவளுடைய உறவுக்கார பெண் ஒருத்தி குழந்தைக்கு காற்று (அதாவது பேய்)அடித்து விட்டது அதனால் தான் ரத்தம் எல்லாம் சப்பி விட்டதால் முகமும் உடலும் கருத்து விட்டது என்று சொன்னாள் கலைவாணிக்கு சுரீர் என்று கோபம் வந்தது என்ன ஒரு மூடநம்பிக்கை. கொஞ்சம் சும்மா இருக்க மாட்டீங்களா என்று அதட்டியதும் அந்த பெண் வாயை மூடிக்கொண்டு கலைவாணியை விரோதமாக பார்த்தாள் கலைவாணி கூட்டத்தை விலக்கி விட்டு பொன்னம்மாவின் அருகில் சென்று குழந்தையை கையில் வாங்கினாள் குழந்தை கல்மாதிரி இருந்தது பூவினும் மென்மையாக இருக்க வேண்டிய வேண்டிய குழந்தை உடம்பு எப்படி இப்படி கல் போல இருக்கு என்று ஆச்சரியமாக ஆனல் மிகவும் பயத்துடன் வருத்தமாக பார்த்து கலங்கினாள் கலைவாணி எப்போது இருந்து இப்படி குழந்தைக்கு ஆனது என்று பொன்னம்மா விடம் விசாரித்தபோது முதல் நாளில் இருந்து குழந்தை பால் குடிப்பது இல்லை என்று சொன்னாள் இன்று காலையில் இருந்து ஒண்ணுக்கு கூட போகவில்லை என்றாள் குழந்தைக்கு தாய்ப்பால் போதவில்லை என்று புட்டிப்பால் பால் பவுடரை கலக்கி கொடுத்து இருக்கிறாள் ஒன்றரை மாத குழந்தைக்கு இதுவரை 3பால் பவுடர் டப்பா கரைத்து கொடுத்து இருக்கிறாள் தாய்ப்பால் கொடுக்காமல் இதை சொன்னதும் பொன்னம்மா மீது கடும் கோபம் வந்தது ஏய் இது உனக்கு இரண்டாவது குழந்தை தானே முதல் குழந்தையை வளர்த்த அனுபவம் இருக்கிறதே என்றதும் அதில்லைக்கா அப்போது என் அம்மா இருந்தது என்று சொன்னாள் சரி ஆஸ்பத்திரி போய் டாக்டரிடம் காட்டினாயா என்று கேட்டதும் இல்லைக்கா என்று பரிதாபமாக பார்த்தாள் அருகில் இருந்த உறவுக்காரப் பெண் மீண்டும் காத்து கருப்பு அண்டிவிட்டது இது பிளைக்காது என்று சொன்னதும் அவளை திட்டி அனுப்பினார்கள் மற்ற பெண்கள் கலைவாணி உடனே ஆஸ்பத்திரி போக அட்வைஸ் பண்ணியதும் யாரும் பொன்னம்மாவுடன் சொல்ல தயாராக இல்லை சரி வா நான் வருகிறேன் என்று பொன்னம்மாவை அழைத்துக்கொண்டு கலைவாணி ஆஸ்பத்திரிக்கு கிளம்பினாள் மணி 3 க்கு மேல் ஆகிவிட்டது இனி 6 மணிக்கு மேல் தான் பஸ் வரும் இந்த குழந்தையின் அனத்தல் சத்தம் அனைவருக்கும் மிகவும் தாங்கமுடியாத அவஸ்தையாக இருந்தது

அதற்குள் ஒரு தண்ணீர் லாரி அந்த வழியாக வந்தது அதை வழி மறித்து ஏறி பெரியாண்டிபாளையம் வரை சென்று அங்கிருந்து மங்கலம் ரோடு வரை நடந்து சென்று பழைய பஸ்நிலையம் அருகில் இருந்த திருப்பூர் ஜி

ஹெச்சுக்கு சென்றார்கள் மதியம் 2 மணிமுதல் மாலை 5 மணிவரை ஓபி திறந்து இருக்கும் நல்ல வேளை 4 மணிக்குள் ஆஸ்பத்திரிக்கு போய் விட்டார்கள் பொன்னம்மா மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவள் தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற கனவில் கூட நினைக்க முடியாது ஆனால் கவர்மென்ட் ஆஸ்பத்திரி இல்லாவிட்டால் ஏழைகள் நிலமை என்ன ஆவது என்று நினைத்துப் பார்த்தாள் கலைவாணி

ஆஸ்பத்திரிக்குள் நுழைந்ததும் கூட்டமாக வரிசையில் நின்றவர்களிடம் குழந்தைக்கு ரொம்ப சீரியஸ் என்று சொல்லி அனுமதி வாங்கி நேராக பதட்டத்துடன் டாக்டரிடம் காண்பித்தார்கள் டாக்டர் எங்கே ஓபி சீட் என்று கேட்டார் இதோ வாங்கி வருகிறேன் என்று கலைவாணி பொன்னம்மாவிடம் குழந்தையின் பெயர் என்ன என்று கேட்டதும் இன்னும் பெயர் வைக்கவில்லைக்கா என்றாள் கலைவாணி ஓபி சீட் வாங்கபோனா அங்கேயும் மக்கள் நீண்ட வரிசையில் நின்று கொண்டு இருந்தார்கள் அவர்கள் அனைவரிடமும் விசயத்தை சொல்லி சீட்டு பதிவு செய்பவரிடம் சார் ராஜா 1/1/2 மாதம் என்று பெயர் எழுதினாள் ஒரு பெயர் சூட்டு விழா இப்படி ஆஸ்பத்திரி வளாகத்தில் என்று நினைத்துமனதுக்குள் சிரிப்பு வந்தது டாக்டர் அருகில் சென்று சீட்டை கொடுக்க சென்றபோது டாக்டர் பொன்னம்மா விடம் சண்டை போட்டுக்கொண்டு இருந்தார் குழந்தை இப்படி சீரியசாக உயிருக்கு போராடுகிறது நீ வெற்றிலை போட்டுக்கொண்டு இருக்கிறாய் வெளியே போ என்று விரட்டினார் கலைவாணி குழந்தையை கையில் வாங்கிகொண்டு சீட்டை டாக்டரிடம் கொடுத்தாள் குழந்தைக்கு எதனால் இப்படி ஆனது என்று விபரம் சொன்னதும் நன்றாக குழந்தையை டெஸ்ட் செய்து ரொம்ப சீரியஸ் அதனால் அட்மிஷன் செய்கிறேன் என்று பெரிச்சிபாளையத்தில் இருக்கும் மாவட்ட தலைமைமருத்துவமனைக்கு போகச் சொல்லி எழுதிக் கொடுத்தார் போவதற்கு முன் இங்கேயே முதல் உதவியாக ஊசி போட்டு அனுப்பினார் டாக்டர் சௌந்தரராஜன் சற்று குண்டாக இருப்பார்பொன்னம்மா வெற்றிலை போட்டு இருந்ததால் கோபமாக கத்தினாலும் மிகவும் தங்கமான மனிதர் குழந்தையை மிகவும் அக்கறையுடன் கவனித்து அனுப்பினார் உடனடியாக பஸ்சுக்கு செல்ல பஸ்டாண்ட் போக நேரம் ஆகும் என்று ஒரு ஆட்டோ பிடித்து ஆஸ்பத்திரி சென்றார்கள் ஆஸ்பத்திரிமுன்பு இறங்கி தானே பணத்தை ஆட்டோவிற்கு கொடுத்துவிட்டு இரண்டாவது மாடியில் இருந்த குழந்தைகள் வார்டில் குழந்தையை அனுமதித்தனர் டூட்டி நர்ஸ்கள் வந்து டாக்டர் எழுதி அனுப்பிய சீட்டில் இருந்தபடி குளுக்கோஸ் மாட்டிவிட வந்தார்கள் அவர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது இதென்ன இப்படி இரும்பு மாதிரி குழந்தை உடம்பு குளுக்கோஸ் ஊசி கூட ஏறாமல் என்று தடுமாறிக் கொண்டு இருந்தபோது ஓபி நேரம் முடிந்துவிட்டதால் டாக்டர் சௌந்தரராஜனே அங்கே வந்து விட்டார் ஒரு வழியாக காலில் ஒரு ஸ்கேல் கையில் ஒரு ஸ்கேல் வைத்து கட்டி குளுக்கோஸ் டிரிப் ஏற்றினார்கள் ஆனால் இறங்காமல் நின்றது பொன்னம்மா குழந்தைக்கு இப்படி ஊசி போடுவதால் பார்த்து அழுததும் நர்ஸ்கள் அவளை வார்டுக்கு வெளியே நிற்க சொல்லி விரட்டினார்கள் கலைவாணியே குழந்தை அருகில் இருந்தாள் அதற்குள் பொன்னம்மாவின் கணவனும் அவன் நண்பன் ரகுபதியும் சைக்கிளில் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தார்கள்.

குழந்தை உடல் இன்னும் இளகாமல் கல்போல அதாவது இரும்பு போல வயிறு வீங்கி இருந்தது அதற்குள் டாக்டர் சௌந்தரராஜன் தகவல் கொடுத்து டூட்டி முடிந்து சென்று விட்ட 4 பேர் கொண்ட டாக்டர்கள் குழு வந்துவிட்டது கலைவாணியையும் வார்டுக்கு வெளியே போக சொல்லி விட்டு அந்த குழந்தை இருந்த கட்டிலை சுற்றி நின்று குழந்தையின் உடலை பரிசோதனை செய்தனர் அவர்களுக்கு இது பெரிய சவாலாக இருந்தது குழந்தை ஈனஸ்வரத்தில் அனத்திக்கொண்டு இருந்தது ஒரு டாக்டர் கலைவாணியை குழந்தையின் அம்மா என்று நினைத்து இங்கே பாரும்மா எங்களால் முடிந்த அளவு பார்த்து விட்டோம் இனிய ஆண்டவன் விட்ட வழி குழந்தை யூரின் போயிட்டா பிழைத்துக் கொள்ளும் நாங்க எல்லோரும் வீட்டுக்கு போகாமல் இங்கே தான் இருக்கிறோம் என்று சொல்லி விட்டு அனைவரும் சென்று விட்டார்கள் குழந்தை அனத்தல் சத்தம் மட்டும் அதிகமாகி கொண்டே இருந்தது எப்போதாவது ஒரு சொட்டு குளுக்கோஸ் வாட்டர் இறங்கியது அதற்குள் மணி8 ஆகிவிட்டது இப்போது ஆஸ்பத்திரியில் இருந்து கிளம்பினால் தான் கடைசி பஸ் 5 டி.9 மணிக்கு போய்விடும் ஆனால் வீட்டுக்கு இப்படியே விட்டு எப்படி போவது என்று தவிப்பாக இருந்தது

யாரோ ஒருவர் தான் குழந்தை அருகில் இருக்கமுடியும் மற்றவர்கள் வெளியே நில்லுங்கள் என்று நர்ஸ் சொன்னதும் மற்றவர்கள் வார்டுக்கு வெளியே அமர்ந்து கொண்டிருந்தார்கள் பொன்னம்மாவின் கணவனும் அவன் நண்பனும் டீ வாங்கி வந்தனர் கலைவாணியை டீ குடிக்கும்படி வற்புறுத்தி குடிக்க வைத்தனர் இப்போது பொன்னம்மா குழந்தை அருகில் இருந்தாள் அதற்குள் நைட்டூட்டி நர்ஸ் வந்ததும் குழந்தை நிலை கருதி அவர்கள் அனைவரும் உள்ளே இருக்க அனுமதித்தார் ஒரு வழியாக குழந்தை யூரின் போய் விட்டது உடல் கொஞ்சமாக இளகியது டாக்டர்களுக்கு நர்ஸ் தகவல் கொடுத்ததும் வந்து பார்த்து மகிழ்ச்சியுடன் இனி அபாயம் இல்லை என்று சொல்லி விட்டு சென்றனர் அதுவரை கல் போல இருந்த குழந்தை கைகாலை அசைத்தது இப்போது குளுக்கோஸ் இறங்கும் கை மற்றும் காலை இரண்டு பேர் பிடிக்க வேண்டியதாகி விட்டது அதற்குள் பொன்னம்மாவின் கணவனும் அவன் நண்பனும் ஆஸ்பத்திரிக்கு வெளியே இருந்த கடையில் சாப்பிட்டு விட்டு இவர்கள் இருவரும் சாப்பிட பார்சல்

வாங்கி வந்தனர் நாங்க பார்த்து கொள்கிறோம் நீங்க சாப்பிடுங்க என்று சொல்லியதும் கலைவாணிக்கு வீட்டில் கணவர் மற்றும் குழந்தைகள் சாப்பிட்டார்களா என்று நினைத்து தவித்தாள் இருந்தும் அம்மா வீடு அருகில் இருப்பதால் ஏதாவது சமைத்து கொடுத்து இருப்பார்கள் என்று நினைத்து சாப்பிட உட்கார்ந்தார்கள் பொன்னம்மா இயல்பாக எந்த கவலையும் இல்லாமல் சாப்பிடுவதை பார்த்து ஆச்சரியமாக இருந்தது பாவம் கிராமத்துப் பெண் வெள்ளந்தி யான மனசு என்று நினைத்து கொண்டு சாப்பிட ஆரம்பித்தாள் ஆனால் இரண்டு இட்லிக்கு மேல் சாப்பிட முடியாது போய்விட்டது மீதி இருந்த இரண்டு இட்லியையும் பொன்னம்மா சாப்பிட இருவரும் கைகழுவி விட்டு வார்டுக்குள் வந்தனர் பொன்னம்மா கணவனும் அவன் நண்பனும் குழந்தை குளுக்கோஸ் இறங்கும் கைகளை ஆட்டுவதை சமாளிக்க முடியாமல் தினறிக்கொண்டு இருந்தனர் அதற்குள் பொன்னம்மா கை கழுவும் சாக்கில் வாய் நிறைய வெற்றிலை போட்டுக்கொண்டு வந்தாள் அதை நர்ஸ் பார்த்ததும் வெளியே போ என்று விரட்டினார் இப்போது குழந்தையின் அருகில் கலைவாணியும் மற்ற இருவரும் இருந்தனர் பொன்னம்மா நல்லா திருப்தியாக சாப்பிட்டு வெற்றிபாக்கு போட்டு கட்டிலுக்கு கீழே உறங்கிக்கொண்டிருந்தாள் ஆண்கள் இருவரும்ஆஸ்பத்திரிக்கு வெளியே இருக்கும் கொட்டகையில் அமர்ந்து கொண்டிருந்தார்கள் கலைவாணி தூக்கம் தொலைத்த விழிகளுடன் குழந்தையின் அருகில் அமர்ந்திருந்தாள் ஒரு வழியாக பொழுது விடிந்ததும் பொன்னம்மாவின் உறவுகள் தகவல் தெரிந்து வந்து விட்டனர் குழந்தை இப்போது சிரித்து கை கால்களை உதறியது பொன்னம்மா வின் கணவன் மற்றும் அவளின் மாமியார் கலைவாணியின் கைகளை பிடித்து கண்கள் கலங்க நன்றி சொல்லியதும் கலைவாணி அவர்களிடம் இதற்கு எதற்கு நன்றி ஒருவருக்கொருவர் சின்ன உதவி தான் என்று சொல்லி விட்டு ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு சென்றாள் அதன் பிறகு பொன்னம்மா அவளுடைய அம்மா வீட்டுக்கே குடிப்போம் விட்டாள் அண்ணா நகரில் ஒரு திருமண நிகழ்வுக்கு அந்த குழந்தைக்கு சுமார் 5 வயது இருக்கும் போது அழைத்து வந்திருந்தாள் கலைவாணியின் கடைக்கு வந்து அந்த குழந்தைக்கு அவர்களுடைய குலதெய்வம் கோயிலுக்கு சென்று பெயர் வைக்க வேண்டும் என்று அம்மா அப்பா சொன்னார்களாம் ஆனால் அதை மறுத்து விட்டு கலைவாணி ஆஸ்பத்திரி வளாகத்தில் வைத்த ராஜா என்ற பெயரையே சொல்லி அழைப்பதாக கண்கள் கலங்க சொன்னாள் பொன்னம்மா அவள் மகன் ராஜாவிடம் டேய் கலைவாணி அக்கா தான்டா நம்ம குலதெய்வம் என்றதும் அந்த பையன் ராஜா ஹாய் கலைவாணி என்றானே பார்க்கலாம் அனைவரும் சிரித்து விட்டனர் கலைவாணி அவனை வாரி அணைத்துக்கொண்டாள்.

## யுகசேனன்

விடிகாலையில்
அவள் எங்கள் வீட்டிற்கு வந்துவிடுவாள்
கீரைக் கட்டுகளால்க்
கடகம் நிரம்பியிருக்கும்.
என் குழந்தையின் முகத்தில்
முழிப்பது நல்ல சகுனம் என்று
சொல்லிக்கொள்வாள்
முதல்க் கீரைப்பிடிக்கான காசை
என் குழந்தையின் கையால் வாங்கிக்
கண்களில் ஒற்றிக் கொள்வாள்.
நான் ஒருபோதும்
அவளிடம் பேரம் பேசுவதில்லை
எங்கள் வீட்டில் எப்போதும்
கீரைக்கறி சமைக்கப்பட்டிருக்கும்.
அவள்
எங்களுக்கு உறவினர் கிடையாது
விருந்தாளியுமல்ல
ஆனாலும்
அவளின் முகத்தினூடாகவே
எங்களுக்கான
ஒவ்வொரு காலையும் விடிகிறது.
நாங்கள் அவள்மீது
நேசம் கொண்டிருந்தோம்
எங்கள் நாயும் கூட
அவளும் எங்கள் மீது
பிரியப்படத் தொடங்கியிருந்தாள்.
இப்போது
மௌனமாக இருக்கும் போர் தான்
அப்போது
அவளின் கணவனின் கால்களைத்
தின்று தீர்த்தது.
ஒரு தடவை எங்கள் வாசல்ப்படியில்
மயக்கமுற்று விழுந்து விட்டாள்
நாங்கள் பதறிப் போனோம்
அப்போது தான்
எங்களுக்குத் தெரிந்தது
மூன்று மாசம் அவள் முழுகாமல் இருப்பது
அன்றிலிருந்து அவள்
எங்களில் ஒருத்தியானாள்.



# காதலைத் தேடி

**சிவசங்கரிகுருநாதன்**

மதிய வெயில் சுள்ளென சுட்டெரித்துக்கொண்டிருக்க, அங்கிருந்த பேருந்து நிறுத்த நிழற்குடையின் கீழ் நின்றிருந்தாள் யமுனா. சட்டென புழுதியைக் கிளப்பிக் கொண்டு வந்து நின்ற பஸ்சில் ஏற முற்பட்டாள். கூட்ட நெரிசலில் எப்படியோ ஏறி, ஒரு ஜன்னலோர இருக்கை தேடி அமர்ந்து கொண்டாள் யமுனா. அந்த நிறுத்தத்தில் இறங்க வேண்டியவர்களை இறக்கி விட்டபின், ஏற வேண்டியவர்களை ஏற்றிக்கொண்டு பஸ் புறப்படத் தயாரானது.

யமுனா பார்ப்பதற்கு எலுமிச்சை நிறத்தில், மானைப் போன்ற மருண்ட விழிகள், அளவான நாசி, ஆரஞ்சுச் சுளை போன்ற உதடு என பார்ப்பவர்களைச் சுண்டி இழுக்கும் அழகுடன் இருந்தாள். தன் கலைந்த கேசத்தை சரி செய்து கொண்டவளின் பார்வை, கரகரத்த குரலில் “இஞ்சிமொரப்பே.....இஞ்சிமொரப்பே....” என்று கூவி விற்ற பெரியவரின் பக்கம் திரும்பியது. பஸ்சினுள் நுழைந்த அந்தப் பெரியவரை “யோவ் இறங்குய்யா! பஸ்ச எடுக்க வேணா”என நடத்துனர் எரிந்து விழ, ஒன்றும் சொல்லாமல் இறங்கிச்சென்ற பெரியவரைப் பார்க்கப் பாவமாக இருந்தது யமுனாவிற்கு, ஒரு வழியாகப் பஸ் புறப்பட யமுனா ஜன்னல் வழியாகப் பார்வையை ஓட விட்டாள். அங்கங்கே மக்கள் தலைகளைக் கடந்து பஸ் வேகமாக காற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது.

சாலையின் இருமருங்கிலும் உயரமான புளிய மரங்களும், வாகை மரங்களும், தூரத்தில் பனை மரங்களுமென மாறி மாறித் தோன்றி மறைந்தன. அதன் மீது பார்வையை ஓட விட்டபடி கன்னத்தில்

கையை முட்டுக்கொடுத்து அமர்ந்திருந்தாள். முகம் ஏற்கனவே அழுதழுது வீங்கிப்போயிருக்க, மீண்டும் கண்களில் அரும்பிய கண்ணீரை அணைபோட முயன்றும் முடியாமல் கன்னத்தின் வழியாக வழிந்தோடியது. கண்ணீரை துடைத்துக் கொண்டவளின் பார்வை மட்டுமே வெளியே நிலைத்திருக்க, நினைவலைகள் மெல்லப் பின்னோக்கி நகர்ந்தன.

யமுனா அப்போது காலேஜ் முதலாம் ஆண்டு மாணவி. தன் வகுப்பறையில் அமர்ந்து லெக்சரர் நடத்தும் பாடங்களை மும்முரமாக கவனித்துக் கொண்டிருந்தாள். திடீரென வகுப்பறைக்குள் ''எக்ஸ்க்யூஸ்மீ மேம்'' என்று நுழைந்த சீனியர் மாணவர்கள் சிலர் காலேஜில் நடக்கும் எலக்சனுக்காக, கார்த்திக் என்ற மாணவனுக்காக ஓட்டுக்கேட்க வந்திருக்க அதில் ஒரு மாணவனாக வந்தவன்தான் கண்ணன். சுருட்டை முடி, நல்ல உயரம், சிவப்பும் இல்லாமல், கருப்பும் இல்லாமல் புது நிறம், வசீகரிக்கும் பார்வை, கூர்மையான நாசி, அழகாக ஒதுக்கிய மீசை, அளவான உதடு, என மிடுக்கான தோற்றத்துடன் இருந்தான்.

எத்தனை மாணவர்கள் இருப்பினும் முதல் பார்வையிலேயே கண்ணனை நோக்கியே யமுனாவின் பார்வை சென்றது. 'சே....என் புத்தி ஏன்? இப்படி போகுது' என தன்னைத்தானே மனதுக்குள் திட்டிக் கொண்டவள், வேறுபக்கம் பார்வையை ஓட விட மீண்டும் தன்னையும் அறியாமல் பார்வை அவனிடமே வந்து நின்றது. அவனோ இவளைக் கண்டு கொள்ளவேயில்லை. ஓட்டுக் கேட்டுவிட்டு கடந்து செல்ல அவனுடன் சென்ற தன் மனதைப் பிடித்து நிறுத்தியவள், ம்ஹூம்.....படிக்கத்தான் வந்திருக்கோம், முதல்ல அதப்பார்ப்போம் என சமாதானம் செய்து கொண்டு படிக்கத் தொடங்கினாள். அடுத்தடுத்த நாட்களில் ஏதேச்சையாகவோ அல்லது அந்த கடவுளின் விளையாட்டோ அவன் மீண்டும் மீண்டும் இவள் பார்வையில் பட அவன்பின் சென்ற தன் மனதை நொந்து கொண்டாள்.

பின்னாளில் காலேஜ் கல்ச்சுரலுக்காக இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட இருவருக்கும் இடையில் நெருக்கம் ஏற்பட்டுப் பின் காதலாக மலர்ந்தது. இறுதியாண்டு முடித்த கையோடு கண்ணனுக்கு நல்லதொரு கம்பெனியில் வேலை கிடைத்து விட, யமுனாவும் தன் படிப்பை முடித்தவுடன் இருவரின் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் முடித்தனர். மகிழ்ச்சியாகத் திருமண வாழ்வைத் தொடங்கிய யமுனாவிற்கும், கண்ணனுக்கும் ஓரிரு மாதங்களிலேயே காதல் கசக்க ஆரம்பித்து விட்டது. காதலிக்கும் தருணத்தில் நிறைகள் மட்டுமே தெரிந்தவர்களுக்கு, இப்பொழுது குறைகள் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தன. யமுனாவோ கண்ணன் மேல் கொண்ட அளவுக்கதிகமான அன்பால் அவன் மேல் எதற்கெடுத்தாலும் சந்தேகம் கொண்டாள். அவனுடன் வேலை பார்க்கும் பெண்களுடன் சாதாரணமாக பேசுவதைக்கூட தவறாக நினைத்து அவர்களுடன் சேர்த்து வைத்துப் பேசி தினமும் சண்டையிட, கண்ணன் எவ்வளவோ எடுத்துக்கூறியும் புரிந்து கொள்ளாதவள், ஒருநாள் கோபித்துக்கொண்டு தன் அம்மா வீட்டிற்குச் சென்றுவிட்டாள். கண்ணன் எவ்வளவோ சமாதானப்படுத்த முயன்றும், முடியாததால் என்ன செய்வதென தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு நிற்க, தன் பங்கிற்கு இருவரின் பெற்றோரும் எவ்வளவோ முயற்சி செய்தும் யமுனாவைச் சமாதானம் செய்ய முடியவில்லை.


இப்படியே ஆறு மாதங்கள் ஓடி விட, இந்நிலையில் ஒருநாள் யமுனா வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்தவள், அப்பாவின் பழைய டைரியிலிருந்து பெண்ணின் புகைப்படம் ஒன்று கீழே விழ, அதை எடுத்துப் பார்த்தவளுக்கு அது யாரென்று பிடிபடவில்லை, யாராக? இருக்கும் என யோசித்தவாறே, நேராக அடுப்பங்கரைக்குச் சென்று தன் அம்மாவிடம், காண்பித்தவளுக்கு, அதைப் பார்த்தவுடன் அம்மாவின் முகம் மாறுவதைக் கவனித்தவள், ஆர்வம் மேலிட ''யாரும்மா இது?'' என வினவினாள். யமுனாவின் அம்மா பெருமூச்சு விட்டபடி,

''இந்த உலகத்துல குறையில்லாத மனுசனே கிடையாது யமுனா, நீ உங்கப்பா ரொம்ப நல்லவருன்னுதான நெனச்சுக்கிட்டு இருக்க, ஆனா அவரும் ஒரு காலத்துல தப்பு பண்ணியிருக்காரு, நீ பொறந்த கொஞ்ச நாளிலேயே உங்கப்பாவுக்கு இந்தப் பொண்ணோட தொடர்பு ஏற்பட்டுச்சு, இது தெரிஞ்சு, நா உங்கப்பாவோட சண்ட போட்டுட்டு எங்கம்மா வீட்டுக்குப் போயிட்டேன். கொஞ்ச நாளிலேயே தான் செஞ்சது தப்புன்னு புரிஞ்சு என் காலுல விழுந்து மன்னிப்பு கேட்டார். என்ன பண்ணச் சொல்ற, இப்பவும் அவரோட தான் என் வாழ்க்கைன்னு ஆகிப்போச்சு''

என்றாள். இதைக்கேட்டு அதிர்ச்சியடைந்த யமுனாவால் இதை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ஏனெனில் இதுநாள் வரை தன் அப்பாவை ஒரு ஹீரோவாகப் பார்த்தவளுக்கு இது பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் கொடுத்தது. அடுத்த நொடி தான் செய்த தவறுகள் மண்டையில் உறைக்க இதுநாள் வரை தன்னைத்தவிர வேறு யாரையும் ஏறிட்டுப் பார்த்திராத தன் கண்ணனின் மேல் வீணான சந்தேகம் கொண்டதை எண்ணி வருந்தியவள், காதல் பெருக்கெடுக்கக் கண்ணீருடன் அவனைக் காண புறப்பட்டாள். கண்ணனுடன் காதலித்த நாட்களை எண்ணித் திளைத்தவளை, டிரைவர் சட்டென போட்ட பிரேக் நிகழ்வுக்குக் கொண்டு வர கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். தன் நிறுத்தம் வரவே கீழே இறங்க இருந்தவளிடம், கிழவி ஒருத்தி தனது பாரத்தை இறக்கிக் கீழே வைக்குமாறு இவளிடம் உதவி கேட்க, இவளும் இறக்கி வைத்தாள் பாரத்தை.

**தமிழ்க்கீரன், ஈழநாடு**

# நுட்பக் காலன்



சப்த அங்கங்களில் ஒன்று
சங்கடம் தருவதால்
வாழ்க்கை போகிறதே நொந்து

ஏற்றம் குறையவில்லை என்று
மூச்சும் கனப்பதால்
மனம் பதைக்கிறது வெந்து

ஓடாய்த் தேய்ந்து
உழைத்தாலும் பத்தவில்லை
உலை பற்றவில்லை

உண்பதிலும் உடுப்பதிலும்
இத்தனை சுமை எனின்
மற்றவற்றிற்கு
ஏழை தாம்
எங்கு போவதோ?

அரசு என்றால்
ஆனந்தம் தர வேண்டுமல்லோ?
மாறாக,
திறை எனும் சிறையைத்
தினம் தினம்
திணிப்பதென்ன

ஆட்சிகள் மாறும் போது
அதிசயங்கள் நடப்பதுண்டு
அதிரடியாய்
வரி குறைப்பதுமுண்டு
அடுத்த நாளே
வரி உயர்வு குண்டாய்
எம்மில் விழுவதும் உண்டு

நள்ளிரவிலே நாசகாரியம் செய்து
நல்ல சட்டம் என்று
இயற்றியும் விடுவர்
நாள் தொடக்கத்திலேயே
வயிறு எரியவும் விடுவர்

பூவிடைத் தேனி
தேன் நுகர்வது போலவும்
உடம்பில் அட்டை
குருதி உறிஞ்சுவது போலவும்
வரி பெறலாம் எனச்
சாத்திரங்கள் ஓதுகையில்,
பூவை நசுக்கி
குருதியை முழுமையும் உறிஞ்சி
உலுப்பி விடுகிறது வரி

முறை செய்து காப்பாற்றும் மன்னவனை
இறையென்று நாமும் ஏற்றுகையில்
திறை வைத்து எங்களைத்
திண்டாட்டத்தில் ஆழ்த்துவதும் ஏனோ?

கப்பம் எனும்
நுட்பக் காலன்
அழிவதும் எப்போதோ?

A.S.சுந்தரராஜன், மானாமதுரை

# அது வேண்டாமே

இருவர் பேசிக்கொண்டிருக்கையில்
எதிர் மனிதர்க்கு
பிடிக்காதவர் பற்றிய

உயர் எண்ணங்களையும்
உதவும் பாங்கையும்
பிரச்சனைகளுக்கு
சொல்லும்
எளிய தீர்வு பற்றியும்
திறம்பட செயல்படுவது
பற்றியும்
சாதனைகளையும்
முன் யோசனை பற்றியும்
நல்ல குணத்தையும்
சொல்ல வேண்டாமே

அது நாகரிகம்
கருதி மட்டுமல்ல

கொண்டிருக்கின்ற
மனம் முழுவதும்
இருக்கின்ற
எதிர்மறை எண்ணத்தால்
அபிப்பிராயம்
மாறப்போவதில்லை

கூடுதலாய்
அது பற்றிய
வாக்குவாதம் முற்றி
இருக்குவரிக்குமிடையே
மனக்கசப்பு வர
வாய்ப்புள்ளது

மின்ஹா

# யாமம்

நள்ளிரவில் கடிகாரம்
சந்திரனை விழுங்கியது
அதன் நாழிகள்,
வெள்ளிகளின் ரகசியங்கள் சிந்தி,
தோன்றாக் கனவுகளுக்குள்
ஒளிந்தன

ஒரு மீன்
நீர் மறந்த பறவை போல
வழிமறந்து
ஆன்மாக்களின் நூலகத்துக்குள் பறந்தது

மறைந்த எழுத்துக்களில் உண்மைகள்
குரலற்றவையாக இருக்கின்றன
நான் எனக்கு சொந்தமற்ற
நிழலை அணிந்திருந்தேன்
பறந்திருந்தேன் பின்பே
களைந்தேன்

பூக்களின் நியதி
வாசமிழந்து இடம்நகர்ந்து
காலடியில் மிதிக்கப்பட்ட எழுத்து
நாளை,
மறந்த மலர்ச்சிக்கு
இன்றே நன்றி எழுதிவிடுகின்றன

# நினைவுகளைச் சுமக்கும் திண்ணைகள்

**லி.நௌஷாத் கான்**

இருபதாண்டுக்கு மேலாக இலக்கியத்தின் மீது எழுத்தார்வம்,அரசு நூலகத்துறையில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நூலகராக இருக்கும் வந்தையின் மைந்தன் ஜா.தமீம் கைவண்ணத்தில் வெளிவந்திருக்கும் நினைவுகளை சுமக்கும் திண்ணைகள் நிச்சயமாக மனதை கவர்கின்ற ஹைக்கூ கவிதைகள் பொக்கிஷமாய் நிறைந்துள்ள படைப்பாகும்.

நூலகத்துக்கு சென்றால் மனம் தெளிவாகும்,சிந்தனை உருவாகும் அந்த நூலகத்திலேயே பெரும்பகுதி வாழ்கின்ற தமீம் அவர்களின் படைப்பு எவ்வளவு சிறந்த படைப்பாக இருக்கும்.

புரட்டுகிற பக்கங்களில் எல்லாம் சமூக கருத்துக்களையும், நேர்மறை கருத்துக்களையும்,பேரன்பையும் அந்த அருவி போல கொட்டி கொண்டே இருக்கிறார்.


நிறைய கவிதைகளை படிக்கும் போது அட செமயா இருக்குல என ஆச்சரியப்படுத்துகிறார்.சர,சரவென விரைவாக படித்து முடித்த கவிதை தொகுப்பு இது.அதே நேரத்தில் சுவாரஸ்யத்திற்கு பஞ்சமில்லை.

நான் ரசித்த ஒரு சில கவிதைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்

காற்று வீசியது
உதிர்ந்தது விதை
நம்பிக்கையில் நெகிழும் மண்

நாம் வாழ்கின்ற இந்த நிரந்தரமில்லாத உலகத்தில் எல்லாமே நம்பிக்கையில் தானே செல்கிறது என்பதை இதை விட நம்பிக்கையுடன் சொல்லி விட முடியுமா என்ன ?

உடல் உழைப்பு
பரிசாய் வழிந்தது
வியர்வை





உழைப்பின் உன்னதத்தை மூன்று வரிகளில் எவ்வளவு அழகாய் சொல்லி இருக்கிறார்

என் இரத்தமென தெரிந்தும்
கருணை கொலை செய்தேன்
கொசு

என்னவொரு வித்தியாசமான சிந்தனை இப்படி புரட்டும் பக்கங்களில் எல்லாம் அட போட வைத்து ரசிக்க வைக்கிறார் கவிஞர் ஜா.தமீம்.

ஆசிரியர் : ஜா.தமீம்
பக்கங்கள் : 64
விலை : 80 ரூபாய்
பதிப்பகம் : அன்புநிலா பதிப்பகம்
எண் 3, பாடசாலை வீதி
அம்மையப்பட்டு, வந்தவாசி - 604-408
திருவண்ணாமலை மாவட்டம்



**மெய்யன் நடராஜ்**

# அன்பளிப்பு


எட்டும ணிவரை யெழுந்திடா திருத்தலும்
திட்டிய பொழுதும் திருந்திடா திருத்தலும்
பட்டம ரமென பயனுறா வகையிலும்
இட்டமொ லைவது இயல்படா வென்பரே


நற்குண வடிவொடு நாடக மிட்டெழில்
கற்பனைக் குதிரையில் கானகம் சுற்றலும்
பற்பல வழிகளில் பாதகம் செய்வதும்
விற்பனை பொருளென வேமலிந் திட்டரே

எடுத்த எடுப்பினில் ஏற்றமும் கொண்டிட
அடுத்த நொடியினில் ஆட்சியும் வென்றிட
தடுக்கும் எவரையும் தாண்டிடும் வல்லவர்
படுத்தப் படுக்கையாம் பாய்சுருட் டாதரே!

உடுத்து முடையதி லுத்தம னென்றொரு
மிடுக்குத் தனத்தொடு மின்னுவ தென்பதும்
கொடுத்த உறுதியைக் கொன்றுகு விப்பதும்
அடுத்த தலைமுறைக் கன்பளிப் பென்பரே!

கலிவிருத்தம்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்



மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023